





விலை ரூபா 80 பக்கங்கள் - 12 + XII

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 10 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (15.12.2024)









# சபாநாயகர் இராஜினாமா




▌கனூஷியா புஷ்பகுமார்

சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல வெள்ளிக் கிழமை (13) சபாநாயகர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

இலங்கையின் 10ஆவது நாடாளுமன்ற சபாநாயகராக அசோக சபுமல் ரன்வல நியமிக்கப்பட்டார்.

அரசியலமைப்பு மற்றும் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் 4,5 மற்றும் 6 ஆகிய விதிகளின்படி இது இடம்பெற்றதுடன் சபாநாயகருக்கான முன்மொழிவு பிரதமரால் மேற்கொள்ளப்பட்டதையடுத்து வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் குறித்த முன்மொழிவை உறுதிப்படுத்தியிருந்தார்.

02 →

# தவறு செய்திருந்தால் தராதரம் பாராது நடவடிக்கை



ஒருவரின் தகுதி தராதரம் எதுவாக இருந்தாலும், தவறு செய்யும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊடகப் பிரதானிகளுடன் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது,

“ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக, இந்நாட்டு மக்கள் வெவ்வேறு அரசாங்கங்களை உருவாக்கியுள்ளனர். வெவ்வேறு அரசாங்கங்களை கவித்துள்ளனர். வரலாற்றில் முதன்முறையாக, இந்நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கும் இரண்டு சந்தர்ப்பங்களில் வழங்கிய வரலாற்று மக்கள் ஆணையின் பொருள் மற்றும் சாரம்சம்

02 →

## துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமனம்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு உறுப்பினர்களை நியமித்துள்ளார்.

அதற்கமைவான நியமனக் கடிதங்கள் நேற்று (13) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் வழங்கி வைக்கப்பட்டன.

02 →

## சிவனொளிபாதமலை பருவ காலம் ஆரம்பம்



சிவனொளிபாத மலை பருவ காலம், ஞாயிற்றுக்கிழமை (14) ஆரம்பமாகிறது.

அதன்படி, ஞாயிறு ஆரம்பமாகவுள்ள சிவனொளிபாத மலை பருவம், அடுத்த வருடம் மே மாதம் 13ஆம் திகதி வரை இடம்பெறும் என இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன அறிவித்துள்ளார்.

இது தொடர்பிலான விசேட வர்த்தமானி அறிவித்தல் வியாழக்கிழமை (12) வெளியிடப்பட்டது

## ‘கோட்டா - 2’ ஆகிவிட்டாரா அநுர? சஜித் அணி கேள்வி



“முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இருந்ததைப் போன்று பொம்மை பட்டதாரி அமைச்சர்கள்தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசிலும் உள்ளனர். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ‘கோட்டாபய பகுதி - 2’ ஆக மாறிவிட்டாரா?” என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

“உண்மையில் கலாநிதி பட்டத்தைப் பெற்றுக்கொள்ளாமல், கலாநிதி என்று தன்னைத்தானே கூறிக்கொண்டு

02 →

## நீதி அமைச்சரின் பெயருக்கு முன்னால் கலாநிதி பட்டம்

# தவறை ஒப்புக்கொண்டது நாடாளுமன்றம்





நீதியமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்காரவின் கல்வித் தகைமைகள் தொடர்பான விபரங்கள் நாடாளுமன்ற இணையத்தளத்தில் தவறாக பிரசுரிக்கப்பட்டிருந்தமை தொடர்பாக இலங்கை நாடாளுமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகவல்களைப் பதிவேற்றம் செய்கின்ற பொழுது அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் “டாக்டர்“ என்ற தலைப்பு குறிப்பிடப் பட்டுள்ளதாக ஊடகங்களில்

02 →

## திஸ்ஸ அத்தநாயக்க சஜித் மீது அதிருப்தி?





“நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாகச் செயற்படும் ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் மறுசீரமைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தற்போதைய பலமான அரசுடன் அரசியல் ரீதியில் மோதுவதென்பது பெரும் சவாலாகவே அமையும்.” என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் கூறியதாவது:-

02 →



## சபாநாயகருக்கு எதிராக ஐ.ம.ச நம்பிக்கையில்லா தீர்மானம்!

தனக்கு கலாநிதி பட்டம் இருப்பதாக கூறி மக்களையும் அரசாங்கத்தையும் ஏமாற்றிய தற்போதைய சபாநாயகர் அசோக சபுமல் ரன்வலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி வெள்ளிக்கிழமையன்று (13) நடவடிக்கை எடுத்தது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, கட்சியின்

02 →


## 24 பக்கங்கள் உள்ளே...



06 அசைத்து பார்க்கும் அரிசியும் அரசியலும்



xii ஒருவன் சினிமா



12 விளையாட்டு


## படகு கவிழ்ந்து நீரில் மூழ்கி மீனவர் உயிரிழப்பு

▌ஏ.எச்.ஏ. ஹுஸைன்



மட்டக்களப்பு - முகத்துவாரம் கடல் பகுதியில் மீன் பிடி படகு கவிழ்ந்ததில் மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

திராய்மடு, முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான

02 →

## மட்டு. தாதியர் பயிற்சிக் கல்லூரியில் திடீரென வைக்கப்பட்ட புத்தர்சிலை

### பௌத்த மயமாக்கும் நிகழ்ச்சி நிரலாக இருக்கக் கூடாது

▌ஏ.எச்.ஏ. ஹுஸைன்



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் புத்தர்சிலை நிறுவப்பட்டது வடக்கு, கிழக்கை பௌத்தமயமாக்கும் நிகழ்ச்சி நிரலின் தொடர்ச்சியாக இருக்கக்கூடாது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின்

02 →



# யாழில் எலிக்காய்ச்சல் நோய்த்தடுப்பு மருந்து வழங்கல்

பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு எலிக்காய்ச்சல் நோய்த்தடுப்பு மருந்து வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை எலிக் காய்ச்சல் நோயினால் 58 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வெள்ளிக்கிழமை(13) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

திக்கம், இன்பர்சிட்டி, வல்லிபுரம் ஆகிய இடங்களிலுள்ள பொதுநோக்கு மண்டபங்களில் வைத்தும், மேலைப்புலோலி சதாவதானி சனசமூக நிலைய மண்டபத்தில் வைத்தும் இந்தத் தடுப்பு மருந்துகள் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 24 பெரும், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 24 பெரும், மருதங்கேணி பிரிவில் 6 பெரும், சாவகச்சேரி பிரிவில் 4 பெருமாக இதுவரை 58 பேர் எலிக்காச்சல் நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

# மருதானையில் 61 அறைகளுடன் கூடிய 3 மாடி கட்டடம் விற்பனைக்கு

கொழும்பு மருதானை சாகிரா கல்லூரி, ஆனந்தாக் கல்லூரி மற்றும் மருதானை பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்கு மிக அருகாமையில் முதற்தர வர்த்தக பகுதியில் மூன்று தளங்களில், வாடகைக்கு விடக்கூடிய 61 அறைகளுடன் கூடிய கட்டடம் விற்பனைக்கு உண்டு.

மருதானை பிரதான வீதியை நோக்கி அமைந்துள்ள 30 பேர்ச்சஸ் காணியில் குறித்த கட்டடத் தொகுதி அமைந்துள்ளது.

சந்தைப் பெறுமதி அல்லது அதி கூடிய விலைக்கோரல் அனுப்ப வேண்டிய முகவரி.

*"Tender Committee"*
*BEN Holdings Pvt Ltd*
*752/5, 3rd Floor Belatrix Building*
*Orion City Dr Danister De Silva Mw, Colombo 09*

# தண்டவாளங்களை இறக்குமதி செய்ய தீர்மானம்

நாட்டிற்கு 2,000 ரயில் தண்டவாளங்களை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

நாட்டில் பழுதடைந்த ரயில் தண்டவாளங்களை மேம்படுத்துவதற்கு இந்த ரயில் பாதைகள் பயன்படுத்தப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் கலாநிதி பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

ரயில் தண்டவாளங்கள் பழுதடைந்துள்ளதால் ரயில் வலையமைப்பின் பல பிரிவுகளில் வேகத்தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதனால் இலங்கையின் ரயில் சேவையின் வினைத்திறன் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், புதிய ரயில் தண்டவாளங்களின் மூலம் ரயிலை வழமையான வேகத்தில் இயக்க முடியும் என்றார்.

2023 ஆம் ஆண்டு ரயில்வே திணைக்களத்தால் திட்டமிடப்பட்ட 122,426 ரயில் பயணங்களில், 85,655 ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூலிகை செடியை வைத்திருந்த இஸ்ரேலிய பெண்ணுக்கு அபராதம்

**எம்.ஏ.அமீனுல்லா**

அருகி வரும் "பினாரா" என்ற ஒருவகை மூலிகைச் செடியை வைத்திருந்த இஸ்ரேலிய பெண் ஒருவருக்கு கண்டி நீதவான் நீதிமன்றினால் அண்மையில் 80,000 ஷரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

36 வயதான இஸ்ரேலியப் பெண் கம்பளை வன அதிகாரி அலுவலகத்தினால் ஹந்தான காட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அதன் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது அபராதம் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

அபராதம் செலுத்திய பின்னர், நீதிமன்ற பாதுகாப்பிலிருந்த இஸ்ரேலிய பெண்ணின் கடவுச்சீட்டு அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### தவறு செய்திருந்தால்...

பற்றிய விரிவான வாசிப்பை இம்முறை நாங்கள் பெற்றுள்ளோம்.

தரமான மற்றும் நிலையான நாடு உருவாகும் என்ற நம்பிக்கையுடன் இந் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தை உருவாக்கினர்.அந்த தனித்துவமான நம்பிக்கைக்கு தீங்கு விளைவிக்க எங்கள் அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது.

சுருக்கமாக கூற வேண்டும் என்றால், நாட்டில் தவறு செய்யும் எவரையும் எக்காரணம் கொண்டும் பாதுகாக்க எமது அரசாங்கம் தயாரில்லை. நாட்டில் மட்டுமல்ல, எமது அரசாங்கத்திலும் எவரேனும் எந்த மட்டத்திலும் தவறு செய்தால் அந்தத் தவறுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம்.

சரியான நேரத்தில் இது தொடர்பாக சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நாங்கள் தயங்க மாட்டோம். 7 தசாப்தங்களாக ஏமாற்றப்பட்ட மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்தி இந்த நாட்டை சிறந்த நாடாக மாற்றுவதற்கு தமது அரசாங்கம் நிபந்தனையற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது." என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ பண்டார மற்றும் அரச ஊடகப் பிரதானிகளின் பங்குபற்றுதலுடன் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

### துறைமுக நகர பொருளாதார...

அதன்படி,கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ அமரசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

டெமியன் அமல் கப்ரால், மொஹான் ரே அபேவர்தன, சஞ்சய குலதுங்க மற்றும் கலாநிதி ஹர்ஷ சுபசிங்க ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 'கோட்டா - 2'...

சபாநாயகர் மக்களை ஏமாற்றியிருக்கின்றாரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த அவமரியாதையைப் போக்கிக்கொள்வதற்கு இனியும் தாமதிக்காமல் உண்மையை வெளிப்படுத்துமாறு சபாநாயகரை வலியுறுத்துகின்றோம். சபாநாயகருக்கு ஏற்படும் அவமானம் நாடாளுமன்றத்துக்கு ஏற்படும் அவமானமாகும்.

சபாநாயகர் மீது மாத்திரமின்றி மேலும் சில அமைச்சர்களது பட்டங்கள் தொடர்பிலும் தற்போது தகவல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இருந்ததைப் போன்று பொம்மை பட்டதாரி அமைச்சர்களாக தேசிய மக்கள் சக்தி அரசிலும் உள்ளனர். மக்களின் பாரிய ஆணையைப் பெற்றுள்ள கட்சி என்ற ரீதியில் நாட்டுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு ஜே.வி.பிக்கு தேசிய மக்கள் சக்திக்கு உண்டு.

அதேபோன்று சபாநாயகர் பொய் கூறுகின்றார் என்றால் உடனடியாக அவர் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்துகின்றோம். அன்று கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டபோது, எதிர்க்கட்சி எம்.பியாக அநுரகுமார திஸாநாயக்க கடும் கண்டனங்களை முன்வைத்தார். ஆனால், இன்று அவரது ஆட்சியில் அதே பிரச்சினை ஏற்பட்டுள்ளபோது அவரால் தீர்வை வழங்க முடியாமலிருக்கின்றது. அநுர இப்போது 'கோட்டா பகுதி 2' ஆகிவிட்டாரா?

அரிசி ஆலை உரிமையாளர்களை அழைத்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடியிருந்தார். ஆனால், இன்னும் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவின் அதே நாடகத்தை அல்லவா இவரும் அரங்கேற்றிக்கொண்டிருக்கின்றார். மக்கள் மீண்டும் ஏமாற்றமடைந்துள்ளனரா? தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசை வலியுறுத்துகிறோம்." என்றார்.

### சபாநாயகர் ...

நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளுடன் வெற்றி பெற்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாடாளுமன்றத்திற்கு புதியவர்கள்.

10ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்விலும் கூட சபாநாயகர் தனது பதவியிலும் அதன் செயற்பாடுகள் குறித்தும் சற்று குழப்பநிலையில் இருந்தமை அனைவராலும் அவதானிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்திற்கு புதியவர்கள் என்பதால் இவ்விடயம் அதிகளவில் பேசப்படவில்லை எனினும், அண்மையில் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட அசோக ரன்வல பெற்றதாகக் கூறப்படும் கலாநிதி பட்டம் தொடர்பில் சர்ச்சையான பல விடயங்கள் பேசப்பட்டன.

இந்த சர்ச்சை நாளாக நாளாக பல விமர்சனங்களை உருவாக்கியிருந்த நிலையில் தனது கலாநிதி பட்டம் தொடர்பில் சபாநாயகர் உறுதிப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் அழுத்தம் வழங்கி வந்தன.

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவரும் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கையெழுத்திட்டிருந்தது.

இந்நிலையிலேயே, அசோக ரன்வல தனது சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

சபாநாயகர் அசோக ரன்வல கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர் இருந்தே, அவரைப் பற்றிய அறிமுகங்களில் கலாநிதி என்ற பட்டம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

சபாநாயகராக பதவியேற்ற பின்னர் இலங்கை நாடாளுமன்ற இணையத்தளத்தில் அவரது பெயர் கலாநிதி அசோக ரன்வல என்று பதிவு செய்யப்பட்டது.

எனினும், குறித்த விமர்சனங்களைத் தொடர்ந்து, சபாநாயகருக்கு அங்கீகரிக்கப்பட்ட கலாநிதி பட்டம் இல்லை என பல்கலைக்கழக பேராசிரியர்கள் உட்பட பல தரப்பினரும் சமூக வலைத்தளங்களில் கருத்து தெரிவித்து வந்தனர்.

இதேவேளை, நாடாளுமன்ற இணையத்தளத்தில் அவரது பெயருக்கு முன்னால் இருந்த கலாநிதி என்ற பட்டம் நீக்கப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் சந்தேகங்களை வெளியிட்டு வந்தனர்.

இது குறித்து சபாநாயகர் அசோக ரன்வல, இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உரிய நேரத்தில் பதில் அளிப்பதாக தெரிவித்திருந்தார்

இந்நிலையில், அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதுடன் மேலும், இரு அமைச்சர்களின் கலாநிதி பட்டம் தொடர்பிலும் கேள்விகள் எழுந்துள்ளன.

இதன்காரணமாக,அதிகமக்கள்பெரும்பான்மையால் தெரிவான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் குறித்து மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

### தவறை ஒப்புக்கொண்டது..

வெளியான செய்திகள் சுட்டிக்காட்டுவதாக நாடாளுமன்ற சட்டவாக்க சேவைகள் பணிப்பாளர் ஜயலத் பெரேரா அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, பாராளுமன்றத்திற்கு வழங்கிய தகவல்களில் கலாநிதி பட்டம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டிருக்கவில்லை எனவும், "டாக்டர்" என்ற தலைப்பானது பதிவேற்றம் செய்யும்போது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் ஜயலத் பெரேரா தெளிவுபடுத்தினார்.

அவரது பெயருக்கு முன்னால், தொடர்புடைய தரவை உள்ளிடுவதில் ஏற்பட்ட பிழையே இதற்கு காரணமாகும். அதன்படி, இந்தத் தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்டவாக்க சேவைகள் பணிப்பாளர் அறிவித்தார்.

இது தொடர்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்காரவுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற இணையத்தளத்தில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகவல்களையும் மீண்டும் சரிபார்த்து புதுப்பிக்கும் நடவடிக்கை தற்போது நடைபெற்று வருவதாகவும் ஜயலத் பெரேரா அறிவித்துள்ளார்.

### படகு கவிழ்ந்ததில்...

கோடீஸ்வரன் வேணுராஜ் (வயது 34) என்பவரே உயிரிழந்துள்ளார்

இருவர் வியாழக்கிழமை மாலை முகத்துவாரம் கடல் பகுதியில் இருந்து இயந்திரப் படகில் மீன்பிடிக்க கடலுக்குச் சென்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது படகு கவிழ்ந்துள்ளது.

இதனால் படகில் வந்த இருவரும் மூழ்கியுள்ளனர். அவர்களில் ஒருவர் உதவிக்கு விரைந்தோரால் காப்பாற்றப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக கொக்குவில் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

### மட்டு. தாதியர் பயிற்சிக்...

செயலாளர் நாயகமான கோ. கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் கருத்துத் வெளியிட்டுள்ள அவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு முன்னால் புத்தர் சிலையொன்று திடீரென்று நிறுவப்பட்டுள்ளது. இது போன்ற சிறுபான்மைப் பிரதேசங்களை பௌத்த மயமாக்கும் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். தாதியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் பௌத்த மதத்தைச் சேர்ந்த சிங்களவர். அந்தவகையில் வைத்தியசாலை நிர்வாகத்திற்குத் தெரியாமல் அவர்களது அனுமதியைப் பெறாமல் ஒரு புத்தர் சிலையை வைத்திருப்பதென்பது ஏற்றுக்கொள்ளமுடியாத கண்டனத்துக்குரிய நிகழ்வாகும்.

இந்த நாட்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களை பௌத்த மயமாக்கும் ஒரு நிகழ்ச்சி நிரல் தொடர்ச்சியாக நடைபெற்று வந்திருக்கிறது. அந்தவகையில் கடந்த அரசாங்கத்தில் கூட வட மாகாணத்தின் சுகாதாரப் பணிப்பாளராக ஒரு சிங்களவர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டபொழுது அவர், யாழ்ப்பாண வீதிகளில், சுற்றுவட்டங்களில் புத்தருடைய சிலையை நிறுவியதன் காரணமாக ஏற்பட்ட எதிர்ப்பின் பிரகாரம் உடனடியாக அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிந்திருக்கிறேன்.

அந்த வகையில் புதிதாக இந்த நாட்டில் உருவாகியிருக்கின்ற அரசாங்கம் சாதி, மத, இன பேதமற்ற ஒரு இலங்கையை உருவாக்கவேண்டும் என்ற கோசத்துடன் ஆட்சியைப் பிடித்திருக்கின்றார்கள். இவர்களும் தொடர்ச்சியாக இப்படி தமிழர் பிரதேசங்களை பௌத்த மயமாக்கும் வேலையைச் செய்து கொண்டிருக்கின்றார்களா, அல்லது அரசாங்கத்திற்கு ஒரு அபகீர்த்தியை ஏற்படுத்த வேண்டும் என்ற தோரணையில் இந்த தாதியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் செயற்படுகின்றாரா என்ற கேள்வி மத்தியில் எழுந்திருக்கின்றது.

வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தாலும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குள் அனுமதியின்றி ஒரு புத்தர் சிலையை நிறுவியிருப்பதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

வைத்தியசாலை நிர்வாகம் உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு அங்கிருக்கும் பதற்ற நிலைமையை தவிர்ப்பது மாத்திரமல்லாமல் இந்த மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது விடயமாக கூடுதலான கரிசனையை எடுத்து அங்கு ஏற்படவிருக்கும் பதற்ற நிலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என தெரிவித்துள்ளார்.

### திஸ்ஸ அத்தநாயக்க..

"ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பன மறுசீரமைக்கப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கை விரைவில் இடம்பெறவேண்டும். இதனை வலியுறுத்தும் வகையிலேயே கடந்த தேர்தல் முடிவுகள் அமைந்தன. எனவே, மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மாற்றம் இடம்பெறவேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைய வேண்டும் எனக் கூறப்படுகின்றது. அவ்வாறு நடக்க வேண்டும் என நானும் வலியுறுத்துகின்றேன். புதிய மாற்றமொன்றை நாம் மக்களுக்குக் காட்டியாக வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தற்போதுள்ள அரசுடன் அரசியல் சமரில் வெல்வது சவாலாக அமையும்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் கூட்டணி உடைவதை நாம் விரும்பவில்லை. அதனால்தான் கலந்துரையாடல் மூலம் தேசியப்பட்டியல் பிரச்சினையைத் தீர்த்தோம்." என்றார்.

### சபாநாயகருக்கு எதிராக..

பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெ.சி. அலவத்துவல, அஜித் பீ பெரேரா, சுஜித் சஞ்சய் பெரேரா, சதுர கலப்பதி, ஜகத் விதான மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோர் கையெழுத்திட்டனர்.

தற்போதைய சபாநாயகர் கடந்த தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர், 2024 பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் போதும், பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு கௌரவ சபாநாயகர் பதவிக்கு தெரிவு செய்யப்படும் போதும், சபாநாயகர் பதவியின் கடமையை பொறுப்பேற்றுக் கொண்ட பிறகும், அவரிடம் இல்லாத மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இரசாயன பொறியியலாளர் தொடர்பான BSc பட்டம் பெற்றவர் என்றும், ஜப்பானில் உள்ள வசேதா பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றவர் என்றும் சுட்டிக்காட்டி, தனது பெயருடன் கலாநிதி என்று பயன்படுத்தியதால் மக்களிடமிருந்து எழுந்த தொடர்ச்சியான எதிர்ப்பின் போதும், தகவல் வினவப்பட்ட போதும், மௌனமாக இருந்து உண்மைத் தகவல்கள் வெளிப்படுத்துவதை தாமதமாக்கியதால் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவை 3 ஆவது பகுதியில் பிரிவு 6 இன் பிரகாரமும், அந்த நடத்தைக் கோவையின் 5 ஆவது பிரிவின் நெறிமுறைகளின் பிரகாரம் உள்ள நடத்தை விதிகளின்படி மேற்படி விதிகள் மீறப்பட்டுள்ளமையால் மற்றும் பாராளுமன்றம், அரசியலமைப்பு மற்றும் அவரால் நேரடியாகத் தலைமை தாங்கப்படும் ஏனைய உயரிய நிறுவனங்களினதும் நம்பிக்கையை மீறியுள்ளபடியால் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.



புத்தசாசன, சமய கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்த கலாபூஷண அரச விருது வழங்கும் விழா (12) அமைச்சர் ஹிமிதும சுனில் செனவி தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. இலக்கியம், இசை, நாடகம், நடனம், ஓவியம், சிற்பம் மற்றும் பிற கலைகளில் 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த கலைஞர்கள் 200 பேருக்கு கலாபூஷணம் விருது வழங்கப்பட்டது. இதன்போது, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நேத்ரா அலைவரிசையின் ஓய்வுநிலை பணிப்பாளர் எம்.என் ராஜா அமைச்சரிடமிருந்து கலாபூஷணம் விருதைப் பெற்றுக் கொண்டார்.

# 37 தேசிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடங்கள்

## 05 தமிழ் பாடசாலைகள் உள்ளடக்கம்

(முகம்மட் முக்தார்)

இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்கள் தேசிய பாடசாலைகளின் அதிபர்களாக கடமையாற்றக்கூடிய 37 பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இவ்வாறு கோரப்பட்ட 37 பாடசாலைகளில் 05 பாடசாலைகள் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளாகும்.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கம்பளை சாஹிரா கல்லூரி, கல்முனை கார்மேல் பத்திமா கல்லூரி, கல்முனை மஹ்மூத் பாளிகா ம.வி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளே தமிழ்மொழி மூல பாடசாலைகளாகும்.

2025.மார்ச் 31 ம்திகதி வெற்றிடமாகும் என எதிர்பார்க்கப்படும் மேற்படி பாடசாலைகளுக்கான அதிபர்கள் வெற்றிடங்களுக்கு தற்போது சேவையில் உள்ள இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்களும், நேர்முகப் பரீட்சை நடைபெற முன் இ.க.நி. சேவை முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு பெற உள்ளோரும் இம்மாதம் 31 ம் திகதி வரை விண்ணப்பிக்கலாமென கல்வி அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி 58 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் மிக அவசியமாகும்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 29ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

**மேஷம்:** இன்று பொறுப்புகள் அதிகமாக காணப்படும். எனவே திட்டமிட்ட அணுகுமுறை தேவை.

**ரிஷபம்:** இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும்.

**மிதுனம்:** முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

**கடகம்:** இன்று அமைதியான சௌகரியமான நாள் உங்களுக்கு.

**சிம்மம்:** இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி அடைவீர்கள்.

**கன்னி:** ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**துலாம்:** இன்று சாதகமான அல்லது மகிழ்ச்சியான நாளாக அமையாது.

**விருட்சிகம்:** இன்று வெற்றிக்கு அடிகோலும் நாள். சுய வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள்.

**தனுசு:** எதிர்பாராத நிகழ்வுகள் நடக்கும். இன்று பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

**மகரம்:** உங்கள் பணிகளை மேற்கொள்ளும் பொழுது நீங்கள் தடைகளை சந்திக்க நேரலாம்.

**கும்பம்:** இன்றைய நிகழ்வுகள் உங்களுக்கு சாதகமாக அமைய அமைதியாக இருக்க வேண்டும்.

**மீனம்:** உங்கள் வாழ்வில் முன்னேறுவதற்கான வழிகளை இன்று முயல்வீர்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** சதுர்த்தி திதி மாலை 04:16 PM அதன் பிறகு பவுர்ணமி திதி.
**நட்சத்திரம்:** கார்த்திகை நட்சத்திரம் அதிகாலை 04:56 AM அதன் பிறகு ரோகிணி நட்சத்திரம்.
**யோகம்:** அமிர்த, சித்த யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** சுவாதி.
**சூலம்:** மேற்கு
**இராகு காலம்:** காலை 09:00 AM முதல் 10:30 AM வரை,
**குளிகை:** காலை 06:00 AM முதல் 07:30 AM வரை,
**எமகண்டம்:** மதியம் 01:30 PM முதல் 03:00 PM வரை,

# கல்முனை கடற்கரைப்பள்ளி கொடியேற்ற விழா நிறைவு

(முகம்மட் முக்தார்)

கல்முனை கடற்கரைப்பள்ளியின் கொடியேற்ற விழா சனிக்கிழமை(14) மாலை அன்னதானத்துடன் நிறைவு பெற்றதென மேற்படி பள்ளிவாயலின் தர்ம கர்த்தாக்கள் அறிவித்துள்ளனர். சங்கைக்குரிய சாகுல்ஹமீது வலியுல்லா அவர்களது பெயரால் வருடாந்தம் இடம்பெறும் இக்கொடியேற்ற விழாவில் மூவினமக்களும் கலந்துகொள்ளவது விசேட சிறப்பம்சமாகும். சங்கைக்குரிய சாகுல்ஹமீது வலியுல்லாஹ் அவர்களின் பெயரால் இடம்பெற்ற 203 வது ஆண்டு கொடியேற்றம் கடந்த 02 ம் திகதி இடம்பெற்று 12 நாட்கள் விசேட மார்க்க விரிவுரைகள், றாத்திபு என்பன இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் அள்ளுண்டு மரணமடைந்த நிந்தவூர் காசிபுல் உலூம் அரபுக்கல்லூரியின் சம்மாந்துறை ஆறு மாணவர்களுக்காக விசேட துஆ பிரார்த்தனையும் இங்கு இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.

## தமிழகத்தில் போராடும்

# தமிழ் இளைஞனுக்காக அரசிடம் நாமல் கோரிக்கை



தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு முன்பாக தம்மை மீண்டும் இலங்கைக்கு அனுப்புமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கையரை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது சிறு வயதில் தமிழகத்தில் தஞ்சமடைந்திருந்த ஒருவர், தம்மை மீண்டும் இலங்கைக்கு அனுப்புமாறு கோரி மண்டியிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காணொளி ஒன்றைத் தமிழக ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

தமக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் அல்லது தம்மை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் குறித்த நபர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பொன்றை வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, இலங்கை அரசாங்கம், இந்திய அரசாங்கத்துடன் இணைந்து உடனடியாக குறித்த நபரை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். மேலும், குறித்த நபரை இலங்கைக்கு அழைத்து வருவதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்குத் தாம் தயாராகவுள்ளதாகவும் நாமல் ராஜபக்ஷ எம்பி தெரிவித்துள்ளார்.

# முருகானந்தனின் ஐந்து நூல்கள் வெளியீட்டு விழா



வைத்தியக் கலாநிதி எம்.கே. முருகானந்தனின் ஐந்து நூல்களின் வெளியீட்டு விழா பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு எழுத்தாளர் க.பரணீதரன் தலைமையில் நடைபெறும்.

உறங்கும் உண்மைகள்(சிறுகதைத் தொகுதி), இரசித்த சினிமா (சினிமா கட்டுரைகள்), மறந்துபோகாத சில ( கவிதைத்தொகுதி), ஈழத்துக் கிராமியப் பாடல்கள் (கட்டுரை), வாசிப்பில் நினைந்தூறல் (விமர்சனக் கட்டுரைகள்) ஆகிய நூல்களே ஜீவநதி பதிப்புக்களாக வெளியிடப்படுகின்றன.

வரவேற்புரை சி.சித்திராதரன், வெளியீட்டுரை எழுத்தாளர் இ. இராஜேஸ்கண்ணன், கருத்துரைகள் அ. யேசுராசா, த. ஆனந்தகுமார், திருமதி கோகிலா மகேந்திரன், கு. வசீகரன், து. குலசிங்கம், ஏற்புரையும் நன்றியுரையும் வைத்தியக் கலாநிதி எம்.கே. முருகானந்தன்.

# வவுனியாவில் மாபெரும் தமிழ் விழா

## பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் ஏற்பாடு




பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் குறிஞ்சிச்சாரல் வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை (15) மாலை 04.00 மணிக்கு நடைபெறும்.

வவுனியா கலாசார மண்டபத்தில் பல்கலைக்கழகத் தமிழ்சங்கத்தின் தலைவர் கஜினியின் வரவேற்புரையோடு தொடங்கவுள்ள இந்நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் தமிழ்த்துறையின் தலைவருமான பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் உரையாற்றுவார். இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. அற்புதராஜ் கலந்துகொள்வார். இசை, நடனம், கிராமிய நடனம், வில்லுப்பாட்டு, நாடகம், கூத்து, விவாதம் என தமிழின் பல்துறை ஆற்றல்களின் வெளிப்பாடாக கலை நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் மட்டுமன்றி பிற பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், தன்னுடைய ஆயுட்காலத்தின் பெரும்பகுதியை தமிழுக்காக நல்கிய பெரும் ஆளுமையாம் எழுத்தாளர் அகளங்கன் "சங்கச் சான்றோர்" விருது வழங்கி, தமிழ்ச் சங்கத்தினரால் கௌரவிக்கப்படுவார்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட இரு பிள்ளைகளின் தந்தை மரணம்

(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)




மட்டக்களப்பு,வடமுனை ஊத்துச்சேனைக் கிராமத்தில் குடும்பஸ்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் வியாழன் இரவு நிகழ்ந்துள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர். வடமுனை ஊத்துச்சேனையைச் சேர்ந்த 48 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையான வேலு சிவசுப்பிரமணியம் என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலால் இறந்தவர், குடும்பத் தகராறு காரணமாக அவரது மனைவியின் சகோதரனால் தாக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மதுபோதையிலிருந்த அவர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் சண்டையாக மாறியதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக தாக்கியவரையும் அவரது மனைவியையும் (கணவன்–மனைவி) இருவரைக் கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனைப் பொலிஸாருடன் இணைந்து மட்டக்களப்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரும் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் அற்றைத்திங்கள்

தமிழின் மூத்த படைப்பாளிகளும், தகைசான்ற ஆளுமைகளும், தமது வாழ்வியல் அனுபவங்கள், கலை, இலக்கிய நட்பு எழுகைகள், பண்பாட்டுத் தாக்கங்கள், படைப்பு முயற்சிகள் முதலியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அற்றைத்திங்கள் நிகழ்வு 14ம் திகதி சனிக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவின் தலைமையில் மூத்த நாடகக் கலைஞர் க.பாலேந்திரா உரை நிகழ்த்துவதாக அறிவிக்கப்பட்டது.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய "தமிழர் செவ்வியல் ஆடல்" 2024 இறுதிநாள் நிகழ்வு



"தமிழர் செவ்வியல் ஆடல்" ஞாயிற்றுக்கிழமை(08) மாலை கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் விரிவுரையாளரும், ஆய்வாளருமான முனைவர் சுபாக்ஷணி பத்மநாதன் "தமிழர் செவ்வியல் ஆடலும் தமிழிசைப் பாரம்பரியமும்" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். சித்தாகாஸ் நடன நிறுவனத்தினரின் , "தமிழிசை ஆடல்"இலங்காபுரி அவைக்காற்றுக்கழகம் வழங்கிய முனைவர் நிக்ஷாந்தராகினி திருக்குமரன் எண்ணக்கருவில் உருவான, " நான் இராவணன் பேசுகிறேன்" ஆவர்த்தனா நுண்கலைக் கல்லூரியினைச் சேர்ந்த திருமதி ஜீவா ரட்ணராஜா வழங்கிய "சுட்டும் விழிச் சுடர் ", அரங்க ஆய்வு கூடம் வழங்கிய சி.மௌனகுருவின் "இசையின் அசைவு" ஆகிய அளிக்கைகள் இடம் பெற்றன. நன்றியுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க உதவிச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி வழங்கினார்.இந்நிகழ்வை கொழும்புத் தமிழ்ச் சங்க உறுப்பினர் திருமதி. வானதி காண்டீபன் தொகுத்து வழங்கினார்.

ஒருவனின் நோக்கில்...
No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## அரசியலமைப்பு பேரவையும் ரணில் விக்ரமசிங்கவும்

இலங்கை ஒற்றையாட்சி அரசின் நீதிமன்ற நடைமுறைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சபை பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருந்தது. நீதித்துறைச் செயற்பாடுகளில் மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் எனவும் நீதித்துறையின் செயற்பாடு சுயாதீனமாக இருக்க வேண்டும் எனவும் ஜெனீவா மனித உரிமைச் சபை ஆணையாளரின் அறிக்கைகளில் கூறப்பட்டுமிருந்தது.

இலங்கை 1972 இல் குடியரசாகிய பின்னர் 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இரண்டாவது யாப்பில் இலங்கை நீதித்துறையின் செயற்பாடுகள் மேலும் மாற்றியமைக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நீதித்துறையின் செயற்பாடுகள் சுயாதீனமாக இயங்கக்கூடிய அளவுக்கு அரசியலமைப்புப் பேரவை உருவாக்கப்பட்டது. நீதித்துறை மாத்திரமல்ல தேர்தல் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட முக்கியமான அரச நிறுவனங்கள் சுயாதீனமாக இயங்கக்கூடிய முறையில் அரசியலமைப்புப் பேரவை உருவாக்கப்பட்டது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் பதவி வகித்த 2016 ஆம் ஆண்டுதான் இத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. மகிந்த ராஜபக்சவின் 18 ஆவது திருத்தம் அரச நிறுவனங்கள் சுயாதீனமாகச் செயற்பட அனுமதிக்கவில்லை என்ற குற்றம் சுமத்தியே 2016 இல் 19 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது

அப்போது மிகவும் ஜனநாயக மொழியில் வாதிட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க 2022 இல் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் நீதித்துறையின் செயற்பாடுகளில் தலையிட்டமை அரசியல் நாகரிகமல்ல என்று அப்போது பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறிப்பாக மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி நிஷ்ஷங்க பந்துல கருணாரத்னவை உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கும் விடயத்தில் ரணில் மேற்கொண்ட நடவடிக்கைகள் அரசியலமைப்பு பேரவையின் செயற்பாடுகளுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை.

இந்த நிலையில் நிஷ்ஷங்க பந்துல கருணாரத்னவை உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்கு அரசியலமைப்புப் பேரவையில் முன்வைக்கப்பட்ட ரணிலின் பரிந்துரையை நிராகரிப்பதற்கு அதன் பெரும்பான்மை உறுப்பினர்கள் எடுத்த தீர்மானம் சரியானது என்றும் அடிப்படை உரிமைகள் மீறப்படவில்லை எனவும் உயர் நீதிமன்றம் சென்ற வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கியுள்ளது.

இத் தீர்ப்பு இலங்கை ஒற்றையாட்சி அரசின் நிறைவேற்று அதிகாரத்தை ரணில் துஸ்பிரயோகம் செய்திருக்கிறார் என்பதை பகிரங்கப்படுத்தியுள்ளது.

2005 ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம் ஆண்டு வரையான மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை விமர்சித்திருந்த ரணில் 2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பின்னர் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் வெற்றி பெற்று ரணில் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

ஆனால், மகிந்த ராஜபக்சவின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஆதரவுடன் அவர் ஜனாதிபதியாகினார் என்பதும் ராஜபக்ச குடும்பத்தின் ஆதரவுடன் அரசாங்கத்தை அமைத்திருந்தார் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விடயமே. இப் பின்னணியில்தான் ரணிலின் ஆட்சிக் காலத்தில் அதிகாரத் துஸ்பிரயோகங்கள் மற்றும் ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன என்பதும் புரியாத புதிரல்ல.

ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்தபோது இலங்கை நீதித்துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர் மகிந்த ராஜபக்ச என்பதை உலகம் அறியும். குறிப்பாக அவர் "திவிநெகும" சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அப்போது பிரதம நீதியரசராக பதவி வகித்திருந்த சிராணி பண்டாரநாயக்காவை பதவியில் இருந்து விலக்கியவர் என்பதை மக்கள் அறிவர்.

அதிகாரங்களை தமது அரசிடம் குவியப்படுத்தும் நோக்கில் கொண்டுவரப்பட்ட மகிந்த அரசின் "திவிநெகும" சட்டத்துக்கு (Divi Neguma Bill) எதிராகக் கொண்டு வரப்பட்ட வழக்கில் அச்சட்டம் செல்லுபடியாகாது என்று சிராணி பண்டாரநாயக்க தீர்ப்பளித்தார். இத் தீர்ப்பு மகிந்தவுக்கு அறிவிக்கப்பட்ட மறுநாள் சிராணிக்கு எதிராக அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் கையொப்பமிட்ட குற்றச்சாட்டுக்கள் (Impeachment) தொடுக்கப்பட்டன.

இக் குற்றச்சாட்டுக்களில் மூன்று நிரூபிக்கப்பட்டுள்ளதாக அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு டிசம்பர் 2012 இல் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை எதிர்க்கட்சிகள், பல்வேறு மனித உரிமை அமைப்புகள், மற்றும் சர்வதேச நாடுகள் கண்டித்திருந்தன.

இதனை இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் கடுமையாக விமர்சித்திருந்தது. ஆனால், எந்த ஒரு விமர்சனங்களையும் கண்டனங்களையும் மகிந்த கண்டுகொள்ளவில்லை. மாறாக சிராணி பண்டாரநாயக்கவின் இல்லத்துக்கு முன்பாக அரச ஆதரவாளர்களும், குண்டர்களும் ஆர்பாட்டம் நடத்துவதற்குத் தூண்டினார்.

மகிந்தவின் இச்செயற்பாடுகளை அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் கடுமையாகக் கண்டித்ததுடன் சர்வதேச நாடுகளிடமும் முறையிட்டிருந்தார். இந்த அரசியல் செயற்பாடுகளின் பின்னணியில் ரணில் வகுத்த வியூகங்களை ஏற்று அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன கட்சியிலிருந்து வெளியேறி ரணிலுடன் கூட்டுச் சேர்ந்து 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்றார். ரணில் பிரதமரானார். சிராணி பண்டாரநாயக்க மீண்டும் பிரதம நீதியரசராகப் பதவியேற்றார். 2016 இல் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் 19 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

ஆனால், 2022 இல் ஜனாதிபதியான ரணில் நீதித்துறையின் செயற்பாடுகளில் தலையிட்டது மாத்திரமல்ல 19 ஆவது திருத்தத்துக்கு மாறாக ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களையும் அவர் மீறியிருக்கிறார் என்பது வேடிக்கை மாத்திரமல்ல அவமானமும் கூட. ஆகவே பாரம்பரியக் கட்சிகளை ஓரம்கட்டி ஆட்சிக்கு வந்துள்ள அநுரவும் இச் செயற்பாடுகளுக்கு உள்ளாகிவிடக்கூடாது.

ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமை சார்ந்த விவகாரங்களில் நீதித்துறை இவ்வாறுதான் செயற்பட்டிருந்தது. ஆகவே, மாற்றம் என்று மார் தட்டும் அநுர இவற்றை கவனத்தில் எடுப்பாரா?

# வரலாற்றில் நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்கொண்ட 5 சபாநாயகர்கள்

**ஆர். சனத்**



சபாநாயகர் அசோக ரன்வலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி என்பன திட்டமிட்டுள்ளன. இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

சபாநாயகர் தனது கல்வித் தகைமைகள் தொடர்பில் போலியான தகவல்களை வழங்கி மக்களை தவறாக வழிநடத்தியுள்ளார் எனக் கூறியே, அவருக்கு எதிரான அரசியல் சமரை, நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்தித்த எதிரணிகள் ஆரம்பித்துள்ளன.

தனது பட்டப்படிப்பு மற்றும் கலாநிதி பட்டம் தொடர்பில் சபாநாயகர் உரிய தெளிவுபடுத்தலை வழங்க வேண்டும், அவ்வாறு இல்லையேல் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரி பதவி விலக வேண்டும். இவை இரண்டும் நடக்காத பட்சத்திலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படும் எனவும் எதிரணிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தன்மீது முன்வைக்கப்படும் விமர்சனங்கள் தொடர்பில் சபாநாயகர் விரைவில் தெளிவுபடுத்தலை வழங்குவார் என தேசிய மக்கள் சக்தி தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சபாநாயகரின் அறிவிப்பு வெளிவரக்கூடும்.

ஆளுங்கட்சி வசம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் இருப்பதால் நம்பிக்கையில்லாப் பிரேரணைமூலம், எதிரணிகளால் மட்டும் சபாநாயகர் பதவி நீக்கம் செய்ய முடியாது.

நிலைமை அவ்வாறிருக்க "பிரசார அரசியலுக்காக" சபாநாயகர் அசோக ரன்வலவுக்கு எதிராக எதிரணிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கும் பட்சத்தில் அது சபாநாயகர் ஒருவருக்கு எதிரான ஆறாவது நம்பிக்கையில்லாப் பிரேரணையாக அமையும். அத்துடன், சபாநாயகர் ஒருவருக்கு எதிராக குறுகிய காலப்பகுதிக்குள் நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்ட முதல் சந்தர்ப்பமாகவும் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் தொடர்பில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் தகவல்களை பெற்று, ஏற்கனவே அது தொடர்பில் பதிவிட்டுள்ளேன். தற்போது மேலதிக சில தகவல்களையும் உள்ளடக்கி மீள பதிவு செய்யப்படுகின்றது.

● 1947 முதல் 2024 வரை சபாநாயகர்களுக்கு எதிராக ஐந்து நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இறுதியாக சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்தனவுக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

ஆனால் அவை ஐந்தும் வாக்கெடுப்பின்போது தோல்வி அடைந்துள்ளன. இவ்வாறு நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் தோல்வி அடைந்திருந்தாலும் அதன் பின்னர் இரு சபாநாயகர்கள் பதவி விலகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

● சுதந்திர இலங்கையில் சபாநாயகர் ஒருவருக்கு எதிராக முதலாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை 1963 ஆம் ஆண்டிலேயே முன்வைக்கப்பட்டது. அப்போது இலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியே நிலவியது. அக்கட்சியின் சார்பில் நாவலப்பிட்டிய தொகுதியில் இருந்து நாடாளுமன்ற தெரிவாகி இருந்த ஆர்.எஸ். பெல்பொல சபாநாயகராக பதவி வகித்தார்.

பக்கச்சார்பாக செயற்படுகின்றார் என அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் எதிரணிகளால் முன்வைக்கப்பட்டன.

1963 நவம்பர் 22 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 61 வாக்குகளும், எதிராக 68 வாக்குகளும் அளிக்கப்பட்டன. எனினும், 1964 ஜனவரி 24 ஆம் திகதி அவர் பதவி விலகினார்.

● இரண்டாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை 1980 இல் முன்வைக்கப்பட்டது. அப்போது ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி நிலவியது. ஆனந்த திஸ்ஸ த அல்விஸின் இராஜினாமாவையடுத்து சபாநாயகர் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பேருவளை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கீர் மாக்காருக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

1980 டிசம்பர் 13 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக 126 வாக்குகள் அளிக்கப்பட்டன. பிரேரணை தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் 1983 செப்டம்பர் மாதம் அவர் பதவி விலகினார்.

● மூன்றாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை 1991 ஆம் ஆண்டு சபாநாயகர் எம். எச். மொஹமட்டுக்கு எதிராக கொண்டுவரப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எம். எச். மொஹமட், அப்போது ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாசவுக்கு எதிரான குற்றப்பிரேரணையின்போது பக்கச்சார்பாக செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. பிரேரணைமீது 1991 ஒக்டோபர் 10 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஆதரவாக 85 வாக்குகளும், எதிராக 118 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதன்படி பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

● இந்நிலையில் சபாநாயகர் எம். எச். மொஹமட்டிற்கு எதிராக 1992 இல் மற்றுமொரு நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டது. அப்பிரேரணைமீது 1992 ஜுன் 9 ஆம் தகதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஆதரவாக 68 வாக்குகளும், எதிராக 118 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதன்அடிப்படையில் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

ஐந்தாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை 2024 ஆம் ஆண்டு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டது. அப்பிரேரணையும் தோல்வியடைந்தது.

இந்நிலையிலேயே தற்போது புதிய சபாநாயகர் அசோக ரன்வலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவதற்குரிய முயற்சி இடம்பெறுகின்றது. நாடாளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்திக்கு 159 ஆசனங்கள் உள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், இரகசிய வாக்கெடுப்பு மூலம் வென்றோ அல்லது ஏகமனதான ஆதரவுடனோ சபாநாயகர் பதவியை வகிக்கலாம். அப்பதவியை வகிப்பதற்கு கலாநிதி பட்டம் கட்டாயமில்லை. எனினும், தற்போதைய சபாநாயகர் தனது கல்வித் தகைமை தொடர்பில் போலித் தகவல் வழங்கிவிட்டார் என்பதே எதிரணிகளின் தர்க்கமாக உள்ளது. அதுவும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் இப்படியொரு சம்பவம் நடந்துள்ளதால்தான் அது பேசுபொருளாக மாறியுள்ளது. ■



# முன்னாள் பிரதி உயர்ஸ்தானிகர் ஹிமாலிக்கு அபராதம்



அவுஸ்திரேலியாவுக்கான இலங்கையின் முன்னாள் பிரதி உயர்ஸ்தானிகர் ஹிமாலி அருணாதிலகா தனது வீட்டுப் பணிப்பெண் பிரியங்கா தனரத்னவை துஷ்பிரயோகம் (அடக்குமுறை) செய்த குற்றச்சாட்டின் பேரில் பெடரல் நீதிமன்றம் அவருக்கு 117,028.80 டொலர் அபராதம் விதித்துள்ளது.

இலங்கையை சேர்ந்த குறித்த பணியாளர் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை கன்பரா வீட்டில் பணியாற்றியதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஹிமாலி அருணதிலக்க, தனது பணிப்பெண்ணுக்கு முறையாக பணம் செலுத்தவில்லை எனவும், அதற்கான அபராதத் தொகையை 60 நாட்களுக்குள் செலுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், பிரியங்க தனரத்னவுக்கு 374,151.90 டொலர் இழப்பீடு வழங்குமாறு நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தது. ஹிமாலி அருணதிலக்க தற்போது ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாகவுள்ளார்.

# உலமாக்களுக்கான தலைமைத்துவ பயிற்சி செயலமர்வு

■ பீ.எம்.முக்தார்






பேருவளை சீனன்கோட்டை ஜாமியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் உலமாக்களுக்கான தலைமைத்துவ பயிற்சி செயலமர்வு அண்மையில் நடைபெற்றது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்க வழிகாட்டலின் கீழ் ஜாமியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட நிர்வாகம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இச் செயலமர்வு கலாபீட பாஸிய்யா மண்டபத்தில் பள்ளிச் சங்க இணைச் செயலாளரும், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான அஷ்ஷெய்க் கலீபதுஷ் ஷாதுலி இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) தலைமையில் நடைபெற்றதோடு அவர் ஆரம்ப உரையும் வரவேற்புரையும் நிகழ்த்தினார்.

டொக்டர் ரயீஸ் மீரா பயிற்சி செயலமர்வை நடாத்தியதோடு பணிப்பாளர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.ஜே.எம் பஸ்லான் (அஷ்ரபி பீ.ஏ) ஆத்மீக பயிற்சி வழிகாட்டல்கள் என்ற தலைப்பிலும், அதிபர் அல் உஸ்தாத் மௌலவி. எம் அஸ்மிகான் (முஅய்யிதி) நன்றி உரையும் நிகழ்த்தினார்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிவாசல்கள், ஷாதுலிய்யா ஸாவிய்யாக்கள், சீனன்கோட்டை குர்ஆன் மதாரிஸ் நிர்வாகத்தின் கீழ் உள்ள. குர்ஆன் மத்ரஸாக்களில் கடமை புரியும் உலமாக்கள், முஅல்லிமாக்கள் என பலரும் பங்குபற்றினர். கலீபதுஷ் ஷாதுலி மௌலவி ஸைனுல் ஆபிதீன் (பஹ்ஜி) துஆ பிரார்த்தனை நடாத்தியதோடு கலீபதுஷ் ஷாதுலிகளான மௌலவி எம்.ஐ.எம்.றபீக் (பஹ்ஜி), மௌலவி பாறூக் (மக்கி) யும் கலந்து சிறப்பித்தனர்.

# கழிவு நீரால் சுகாதார சீர்கேடு
## அதிகாரிகளுக்கு அறிவித்தும் பயனில்லை

■ முகம்மட் முக்தார்

சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட வீரமுனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் சுற்று மதில் உடைக்கப்பட்டு தனிநபர் குடியிருப்புகளின் கழிவு நீர் மற்றும் வடிகான்நீர் பாடசாலையின் வடிகான் தொகுதிக்குள் இணைக்கப்பட்டுள்ளதால் பாடசாலையில் சுகாதார சீர்கேடு நிலவுவதாக, பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் இ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கட்டிட ஒப்பந்தக்காரர் ஒருவரால் பாடசாலை மதில் உடைக்கப்பட்டு கிராமத்தின் கழிவு நீர் மற்றும் வடிகான் நீர் பாடசாலையின் வடிகான் தொகுதிக்குள் இணைக்கப்பட்டுள்ளதால் கிராமத்தின் கழிவு நீரோடு சேர்ந்து அருகில் உள்ள வீடுகளின் மலசல கூடங்களின் கழிவுகள், குளியலறைக் கழிவுகள் மற்றும் சமையலறைகளிலும் ஒன்று சேர்வதால் மாணவர்கள் பாரிய சுகாதரப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளார்கள்.

குப்பை கூளங்களோடு விலங்குகளின் உடல்களும் பாடசாலையின் வடிகானில் சேர்வதால் உயிர்க் கொல்லி நோய்களை பரப்பக்கூடிய நோய்கிருமிகள் பாடசாலை வளாகம் முழுவதும் பரவும் பெரும் தொற்றுக்கான அபாயமும் மிக அதிகமாகக் காணப்படுகின்றது.

ஆரம்பப்பிரிவு மாணவர்கள் விளையாட்டுப்போட்டி, கலைநிகழ்வுகள், வாணிவிழா மற்றும் ஏனைய நிகழ்வுகளின் போது கண்காணிப்பினை மீறி வடிகானுடன் தொடர்புடைய பாடசாலைக்கு வெளிப்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பாலத்தினூடாக போக்குவரத்தினை மேற்கொள்ளும் பட்சத்தில் உயிரிழப்புகள் ஏற்படுவதோடு பாடசாலைச் சொத்துகளும் திருடப்படுவதற்கும் வாய்புக்கள் அதிகமாக உள்ளன.

எனவே உடனடியாக வீதி வடிகானை பாடசாலை வடிகானுள் பிரவேசிப்பதைத் தடைசெய்து உடைக்கப்பட்ட பாடசாலை மதிலை மீள்நிர்மாணம் செய்து பாடசாலை எதிர்நோக்கவுள்ள பாதிப்புக்களைத் தடுக்கத்தக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு அவர் கேட்டுள்ளார். இது தொடர்பாக சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், சம்மாந்துறை பிரதேச செயலாளர், பிரதேச சபை, உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர், சுகாதார வைத்தியதிகாரி ஆகியோருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஆயிஷா வித்தியாலயத்திற்கு ஹிஸ்புல்லாஹ் எம்.பி. விஜயம்



■ எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்திற்கு நடாளு மன்ற உறுப்பினர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் விஜயம் ஒன்றியினை அண்மையில் மேற்கொண்டிருந்தார்.

பாடசாலைக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ்விடம் பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் பௌதீக வள தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரிக்கை கடிதமொன்றை கையளித்தார்.

இதில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினரும் கல்குடா தொகுதி அமைப்பாளருமான சட்டத்தரணி ஹபீப் றிபான், ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேச சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# குருந்தங்குளம் விபத்தில் இளைஞர் மரணம்

■ எம்.ரீ.ஆரிப்

மிஹிந்தலை அநுராதபுரம் பிரதான வீதி குருந்தங்குளம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மிஹிந்தலையிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று அநுராதபுரத்தில் இருந்து மிஹிந்தலை நோக்கி பயணித்த ஜீப் வண்டியுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் காயமடைந்த நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மிஹிந்தலை பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# பல்துறை வித்தகர் விருதினை பெற்றார் ஏஎம் தாஜ்



கிழக்கு மாகாண கலாசார மற்றும் பண்பாட்டாளர்கள் திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்திய மாகாண அரச இலக்கிய விருது விழா திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் எஸ்.நவநீதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர பிரதம அதிதியாக கலந்து கொண்டு சாதனையாளர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார். இதன்போது “பல்துறை வித்தகர் “ விருதினை சிரேஷ்ட ஒலி – ஒளிபரப்பாளர் சட்டத்தரணி ஏ. எம். தாஜ் பெற்றுக்கொண்டார்.

# ‘ஸ்மாட்’ வகுப்பறைகளுக்கான தளபாடங்கள் அன்பளிப்பு

கடந்த அரசாங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், புத்தளம் – 05ஆம் வட்டார அமைப்பாளர் எம்.எம்.எம். முர்ஷித்தின் வேண்டுகோளின் பேரில், புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூ ரிக்கு, 430,000 ரூபாய் பெறுமதியில், Smart Class வகுப்பறைகளுக்கான தளபாடங்கள் அண்மையில் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில், மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் மற்றும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் புத்தளத்தில் போட்டியிட்ட வேட்பாளர் எம்.எச்.முஹம்மத், (07ஆம் வட்டார) அமைப் பாளர் ரஸீன் ஆசிரியர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரியின் முகாமைத்துவ சபைத் தலைவர் அஜ்மல், செயலாளர் பொரியியலாளர் மரைக்கார், பொருளாளர் சட்டத்தரணி பாரிஸ், நிர்வாக சபை உறுப்பினர் ஹாபி உட்பட நிர்வாக உறுப்பினர்களும் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.



# பொத்துவிலில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிதி




■ எம்.எஸ்.எம்.ஸாகிர்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொத்துவில் பிரதேசத்துக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை வக்ப் சபை இணைந்து முஸ்லிம் தர்ம நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாய் வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட மிகப் பெரும் வெள்ள அனர்த்தம் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, பல கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டதனை நாம் அறிவோம். அந்தவகையில் பொத்துவில் பிரதேச மக்களுக்கான நிவாரண உதவி வழங்கும் முகமாக கொள்ளுபிட்டி பள்ளிவாசல்கள் சம்மேளனம் இலங்கை வக்ப் சபைக்கு அனுப்பியிருந்த விண்ணப்பம் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு இந்நிதி ஒதுக்கப்பட்டது.

ஒதுக்கப்பட்ட இந்நிதியானது காசோலையாக திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸினால் கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் றிஸான் ஹுசைனிடம் திணைக்களத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட், திணைக்கள வக்ப் பிரிவு பொறுப்பாளர் ஏ.எஸ்.எம். ஜாவித், வக்ப் நியாய சபை செயலாளர் எம்.என். எம். ரோஷன் மற்றும் கொள்ளுப்பிட்டி சம்மேளனத் தலைவர் றிஸான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மூவின எம்பிக்கள் பங்கேற்ற விடுகை விழா

■ வி.சுகிர்தகுமார்

மூவினத்தையும் சேர்ந்த எம்பிக்கள் மூவர் கலந்து கொண்ட அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தா பாலர் பாடசாலையின் விடுகை விழா இந்து இளைஞர் மன்ற கேட்போர் கூடத்தில் சமீபத்தில் நடைபெற்றது.

விபுலானந்தா சிறுவர் இல்லத்தின் ஸ்தாபகரும் இந்து இளைஞர் மன்ற தலைவருமான த.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுள ரத்நதயக்க, க.கோடீஸ்வரன், ஏ.ஆதம்பாவா மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாணவர்களின் பல் அம்சக் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. அதேவேளை, கலை கலாசார நடன நிகழ்வுகள், பன்மொழிப்பேச்சு, நாடகம் போன்ற நிகழ்வுகள் பலரது பாராட்டையும் பெற்றுக்கொண்டன.

எதிர்வரும் காலத்தில் பாலர் பாடசாலை ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்படும் வாய்ப்புக்கள் உள்ளதாக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

நிகழ்வின் இறுதியில் அதிதிகளினால் மாணவர்களுக்கு நினைவுச்சின்னங்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டமை சிறப்பம்சமாக அமைந்தது.

# அசைத்து பார்க்கும் அரிசியும் அரசியலும்



நூருல் ஹுதா உமர்

தனது அரசாங்கத்தில் எந்தவொரு வகையிலும் அரிசி இறக்குமதி செய்யப்படமாட்டாதென தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க அரலகங்வில பகுதியில் புரட்டாசி 10, 2024 அன்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போது தெரிவித்தார். அன்று உரையாற்றிய அவர், விவசாயத்திற்கு தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கி விவசாயிகளை பலப்படுத்தும் அரசாங்கம் உருவாக்கப்படும் என குறிப்பிட்டிருந்தார். செழிப்பான நாடு அழகான வாழ்க்கை' எனும் தொனிப்பொருளில் அநுரகுமார திஸாநாயக்க மக்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் நடத்தப்பட்ட பிரசார கூட்டங்களில் ஒன்று பொலன்னறுவை, அரலகங்வில பகுதியில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பேசிய விடயம் இப்போது நடக்கவில்லை. மாற்றம் ஒன்றே மாறாதது ஆனால் அவர் எதிர்பார்த்த மாற்றம் நடக்கவில்லை என்ற விமர்சனம் இப்போது எழ ஆரம்பித்துள்ளது.

இப்போது நாட்டரிசி, சம்பா மற்றும் கீரி சம்பா ஆகிய அரிசிகளின் மொத்த விலை அதிகரித்துள்ளதாக அரிசி ஆலை உரிமையாளர்கள், நாடளாவிய ரீதியில் உள்ள அரிசி மொத்த வியாபாரிகளுக்கு அறிவித்துள்ளனர். அந்த வகையில் ஒரு கிலோ நாட்டரிசியின் மொத்த விலை 255 ரூபாவாகவும், சம்பா அரிசி 260 ரூபாவாகவும், கீரி சம்பா 275 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சந்தையில் நாட்டு அரிசியின் கட்டுப்பாட்டு விலை 220 ரூபாவாகவும் சம்பா 230 ரூபாவாகவும் கீரி சம்பா 260 ரூபாவாகவும் விற்பனை செய்யவேண்டுமென நுகர்வோர் அதிகார சபை சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. எனினும் அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியின் விலையை அவ்வப்போது அதிகரிப்பதால் கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்க முடியாமல் தவிப்பதாக அரிசி மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் வாரங்களுக்குள் நாட்டுக்கு தேவையான அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், அரிசிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் என அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் சங்கம் எச்சரித்துள்ளது. அது மட்டுமில்லாது இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கான நீண்டகால வேலைத்திட்டத்தை தயாரிப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என அந்த சங்கத்தின் தலைவர் யு.கே. சேமசிங்க குறிப்பிட்டுள்ள விடயமும் பியர், கால்நடை தீவன உற்பத்திக்கான அரிசி விநியோகத்தை ஒழுங்குபடுத்துவது மிகவும் முக்கியமானது என்ற வலியுறுத்தலும் இங்கு ஆழமாக நோக்கப்பட வேண்டியது.

இதனிடையே அண்மைய வெள்ளத்தால் சேதமடைந்த நெற்பயிர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்குப் பதிலாக மீண்டும் விவசாயத்தை முன்னெடுக்க விவசாயிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்ற குரல்களும் ஆங்காங்கே எழ ஆரம்பித்துள்ளன. நாட்டிலுள்ள விவசாயிகள் பலரும் தமக்கான நஷ்டஈட்டை கோரி பல்வேறு விதமான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். அதில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி நாவற்காடு கிராம விவசாயிகள் கடந்த வாரம் வயலில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்ட விடயம் நாடறிந்த ஒன்றே.

தொண்டமனாறு தடுப்பணையைத் திறந்து விட்டு தமது நெற் பயிர்களை அழிவில் இருந்து காப்பாற்றக் கோரியே குறித்த விவசாயிகள் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். தொண்டமனாறு தடுப்பணையை மூடி வைத்திருப்பதால் தென்மராட்சி வரணிப் பிரதேச வயல்களில் தேங்கி நிற்கும் மேலதிக நீர் வடிந்து செல்ல முடியாமல் வயல் நிலங்களில் தேங்கி பயிரை அழிவடையச் செய்வதாக அங்கு விவசாயிகள் கவலை தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அது போன்று நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறு அணைகளை மூடுமாறும், திறக்குமாறும், நஷ்டஈடு தருமாறும் விவசாயிகள் போராடிக் கொண்டி ருக்கிறார்கள். மறுமுனை யில் சில எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் அவர்களுக்கு ஆதரவாக குரலெழுப்பியும் வருகிறார்கள்.



விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேயர் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு வழங்கப்படவுள்ளதாக, விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார். சீரற்ற காலநிலையால் விவசாயச் செய்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இந்த நட்டத்திலிருந்து விவசாயிகளை பாதுகாக்கும் நோக்கில், இந்த நட்டஈடு வழங்கப்பட உள்ளது. இதற்கான சுற்றறிக்கை நிச்சயம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் விவசாயிகள் இதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்றும் பிரதியமைச்சர் வலியுறுத்தினார். இதற்கமைய, விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு உரிய மதிப்பீட்டுத் தொகையையும், பகுதியளவான சேதத்திற்கு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 60 வீத இழப்பீட்டுத் தொகையையும், அடிப்படை சேதத்திற்கு 40 வீத இழப்பீட்டுத் தொகையையும் பெறுவார்கள் என்றும் கூறியுள்ளார்.

ஆனாலும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் அரிசி இறக்குமதி செய்யமாட்டோம் என்ற தமது தேர்தல் வாக்குறுதிகளையும் மீறி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு கடந்த மாதம் 25 ஆம் திகதி அமைச்சரவையில் அங்கீகரித்துள்ளது. இதன்போது திறந்த விலைமனு கோரலின் பின்னர் அரச வர்த்தக பொது கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா சதொச ஆகியவற்றின் ஊடாக இலங்கைக்கு அரிசி இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இதேவேளை சந்தையில் இன்னும் நாட்டு அரிசிக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் தெரிவித்து வருகின்ற நிலையில் இந்தியாவின் தூத்துக்குடியிலிருந்து தனியார் துறையினரால் இறக்குமதியான 10,000 மெற்றிக் தொன் அரிசி திங்கட்கிழமை (09) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.



இந்நிலையில், அரசாங்கம் முதற்கட்டமாக கொள்வனவு செய்யவுள்ள 5,200 மெற்றிக் தொன் அரிசி, நாளை (16) திங்கட்கிழமை நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து, இரண்டாம் கட்டமாக மேலும் 20,800 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு அரிசி இறக்குமதியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலில் நாட்டரிசியே இவ்வாறு இறக்குமதி செய்யப்படவுள்ளது. அதன் பின்னர் தேவைப்படும் போது ஏனைய அரிசியை இறக்குமதி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் உள்நாட்டு அரிசிக்கான அதிகபட்ச விலைகளை நிர்ணயம் செய்து வர்த்தமானி அறிவித்தலொன்று நுகர்வோர் அதிகாரசபையால் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி ஒரு கிலோகிராம் பச்சை மற்றும் சிவப்பு பச்சை அரிசியின் அதிகபட்ச மொத்த விலை 215 ரூபாவாகவும், அதிகபட்ச சில்லறை விலை 220 ரூபாவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஒரு கிலோகிராம் உள்நாட்டு அரிசியின் மொத்த விலை 225 ரூபாவாகவும், அதிகபட்ச சில்லறை விலை 230 ரூபாவாகவும் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு கிலோகிராம் உள்நாட்டு கீரிசம்பாவின் மொத்த விலை 255 ரூபாவாகவும், அதிகபட்ச சில்லறை விலை 260 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் வர்த்தமானி அறிவித்தலை நுகர்வோர் அதிகாரசபை வெளியிட்டுள்ளது.

அதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பச்சை அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 210 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் நாட்டரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 220 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சம்பா அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 230 ஷரூபாவாகவும் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. விநியோகஸ்தர் அல்லது வியாபாரிகள் எவரும் இந்த தொகையை மீறி அரிசியை விற்பனை செய்யவோ, வழங்கவோ, விற்பனைக்கு விடவோ அல்லது வெளிப்படுத்தவோ, விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாது என்றும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் அரிசி அந்த விலையில் நுகர்வோருக்கு கிடைக்கிறதா என்ற கேள்விக்கு பதில் இல்லையென்றே வருகிறது.

அரிசியின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கும் பதுக்கி வைக்கப்பட்டுள்ள அரிசி மூடைகளை வெளியே கொண்டு வரும் விதமாகவும் தொடர்ந்து 10 நாட்களுக்கு அரிசி ஆலைகளை சோதனை செய்யும் நடவடிக்கையினை நுகர்வோர் அதிகாரசபை முன்னெடுத்துள்ளது. இந்நிலையில் பொலன்னறுவை, மட்டக்களப்பு மற்றும் ஹம்பாந்தோட்டையிலுள்ள அரிசி ஆலைகளில் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரிசி ஆலைகளிலிருந்து நாளாந்தம் விநியோகிக்கப்படும் அரிசி தொகை தொடர்பில் அறிக்கையை பெற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று அரிசி தொடர்பான பிரச்சினைகளை அரசாங்கத்துடன் சுமுகமாக தீர்த்துக் கொள்ளுமாறும் அரிசி வர்த்தகர்களிடம் ஜனாதிபதி கோரினார்.





அரிசி தட்டுப்பாட்டுக்கு வர்த்தமானி அறிவித்தலை பிரசுரித்தோ அல்லது இராணுவத்தை கொண்டோ தீர்வு காண முடியாது. தற்போதைய அரிசி தட்டுப்பாட்டுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிட போவதில்லை. அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண, அரிசி கூட்டுறவு செயற்றிட்டத்தை மீண்டும் அமுல்படுத்துங்கள். முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (06) நடைபெற்ற இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். நாட்டின் இக்கட்டான நிலைக்கு எதிர்க்கட்சியிலுள்ள திறமையானவர்கள் இப்படி ஒத்துழைப்பு நல்குவது நல்ல விடயமாக இருந்தாலும் கூட அதனை அமுல்படுத்த அரசாங்கம் தயாராக இருக்க வேண்டியதும் அவசியமாகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு நாட்டு மக்கள் 159 ஆசனங்களுடன் அமோக ஆணை வழங்கியுள்ளார்கள். நாட்டின் நலன் கருதி அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமையாக இருக்கிறது. ஏனெனில் அனைவரும் மக்களின் நலன் கருதியே பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எமது நாட்டு மக்களின் பிரதான உணவாக சோறு காணப்படுகிறது. இருப்பினும் தற்போது அரிசிக்கான தட்டுப்பாடு பரவலாக காணப்படுவதுடன், அரிசியின் விலை சராசரி மக்களுக்கு சுமையாக அமையும் விதத்தில் உயர்வடைந்துள்ளது. கடந்த காலங்களிலும் அமோக வெற்றிகளை சுவைத்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து 12 தடவை வர்த்தமானிகளை வெளியிட்டு பின்னர் அவற்றை அமுல்படுத்த சாத்தியமற்று மீளப் பெற்றார். இறுதியாக 13 ஆவது தடவையாக வர்த்தமானி அறிவித்தலை பிரசுரித்து சிவப்பு அரிசியின் விலை 210 ரூபா, நாட்டரிசியின் விலை 220 ரூபா, சம்பா அரிசிக்கு 230 ரூபா என்ற அடிப்படையில் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டது வரலாறாகும்.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ள நிலையிலும் ஒருசில பகுதிகளில் அதிக விலைக்கு அரிசி விற்கப்படுகிறது. அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக குறுகிய கால அடிப்படையில் அரிசி இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நீண்டகால தீர்வு ஏதும் முன்வைக்கப்படவில்லை. அரிசி இறக்குமதிக்கான தடைகள் நீக்கப்படும் போது நடுத்தர அரிசி ஆலை உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார்கள். அரிசி தட்டுப்பாட்டுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பொறுப்புக் கூற வேண்டியுள்ளதுடன் வர்த்தமானி வெளியிட்டோ அல்லது இராணுவத்தை கொண்டோ அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண முடியாது.

கலாநிதி ஹர்ஷ டி சில்வா எம்.பி பாராளுமன்றத்தில் நடைபெற்ற இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் தெரிவித்த 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாறே அரிசி தட்டுப்பாடு தீவிரமடைந்திருந்தது. சிறந்த கொள்கைத் திட்டங்களை வகுத்து 210 நடுத்தர அரிசி ஆலை உற்பத்தியாளர்கள், 10000 விவசாயிகளை உள்ளடக்கி 8 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் " சக்தி அரிசி கூட்டுறவு செயற்றிட்டத்தை" ஆரம்பித்தோம். இதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாத்துக்கு முன்னர் அனைத்து வகையான தேசிய உற்பத்தி அரிசி வகைகளின் விலை 100 ரூபாவுக்கும் குறைவானதாக காணப்பட்டது. ஆகவே தற்போதைய அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு சக்தி அரிசி கூட்டுறவு திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்துங்கள். நாங்கள் வைத்த சக்தி என்ற பெயர் உங்களுக்கு பிரச்சினை என்றால் அரசாங்கத்துக்கு தேவையான பெயரை வைத்துக் கொள்ளுங்கள். எமக்கு பிரச்சினையில்லை. அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண வேண்டும் என்ற கருத்து இங்கு ஆராயப்பட வேண்டியது காலத்தின் தேவையாக இருக்கிறது.

இறக்குமதி செயன்முறையை சீர்செய்வதையும், உள்ளூர் சந்தைக்கு அரிசி உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு தேவையான வரிகள் செலுத்தப்பட்டால், இறக்குமதி செய்யப்படும் அரிசியின் இருப்பு நான்கு மணித்தியாலங்களுக்குள் கொழும்பு துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்படும் என மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளமை மாற்றத்தின் ஒரு படியாக நாம் நோக்கலாம். மேலும், இறக்குமதி செய்யப்பட்ட அரிசி அடுத்த வாரம் நாட்டிற்கு வரும் என அத்தியாவசிய உணவுகள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அரிசியை இறக்குமதி செய்வதற்கான அரசாங்கத்தின் அறிவுறுத்தலைத் தொடர்ந்து பல இறக்குமதியாளர்கள் ஏற்கனவே அரிசி இருப்புக்களை ஆர்டர் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து உரிய அரிசி இருப்புக்கள் ஆர்டர் செய்யப்பட்டுள்ளதாகவும், அதே கையிருப்பு அடுத்த வாரத்திற்குள் நாட்டிற்கு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. நாட்டில் நிலவும் அரிசி பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இறக்குமதியாளர்களுக்கு நேரடியாக அரிசியை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது "வயிறூதியவனுக்கு காற்று போனது போல" நிம்மதியான செய்தியாக இருக்கிறது. ஆனாலும் இந்தியாவில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வதன் மூலம் தேவையற்ற இலாபம் ஈட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐக்கிய தொழிற்சங்கக் கூட்டமைப்பின் அழைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ள கருத்துக்கள் இந்த அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை கேள்விக்குட்படுத்துகிறது.

அவரின் கருத்துப்படி இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ ஸ்வர்ணநாடு ஒரு கிலோவுக்கு 110 ரூபாய்க்கு கொழும்பு துறைமுகத்தில் தரையிறக்கப்படுவதாக கூறுகிறார். கொழும்பு துறைமுகத்தில் இருந்து இறக்கப்பட்ட ஸ்வர்ணநாடு கிலோ 220 ரூபா விலைக்கு சில்லறை சந்தையில் எப்படி விற்கிறார்கள் என்பதை அரசாங்கம் மக்களுக்கு விளக்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார். எழுபதாயிரம் மெட்ரிக் தொன்களை இந்நாட்டுக்குக் கொண்டுவந்தால் எழுநூற்று எழுபது கோடி கமிஷன் கிடைக்கும் என இந்த வார ஆரம்பத்தில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனை கூறியுள்ளார். ■









# முல்லைத்தீவு மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா..!







“முல்லை இளம் சுடர்“ விருது வழங்கி கௌரவிப்பு





















(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகம், துணுக்காய் பிரதேச செயலகம், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி சபைகள் இணைந்து நடாத்திய முல்லைத்தீவு மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா மிகச் சிறப்பான முறையில் கடந்த 11ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் .அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைப்பெற்ற குறித்த நிகழ்வில், பிரதம அதிதியாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.திருவாகரன் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் பாரம்பரிய கலைகளுடனும், மக்களின் வாழ்வியல் மாதிரி ஊர்திப் பவனிகளுடனும் விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் இராமதாஸ் ரமேஸின் சிறப்பான ஒழுங்குபடுத்தல் மற்றும் இயற்கை முறையிலான விழா அலங்கரிப்பு மிகச் சிறப்பான முறையில் அமைந்திருந்தது.

விழாவின் விசேட அம்சமாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் “ முல்லைச்சாரல்“ என்னும் கலாசார நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிக நீண்ட காலமாக கலைக்காற்றிவரும் சேவையினைப் பாராட்டியும் கௌரவிக்கும் முகமாக தெரிவு செய்யப்பட்ட மூத்த கலைஞர்களுக்கு “ முல்லை கலைக்கோ“ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது கலைகளோடு பிரகாசித்துக்கொண்டிருக்கும் இளங்கலைஞர்களுக்கு “ முல்லை இளஞ்சுடர்“ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ் விழாவில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பாகங்களிலும் இருந்து வருகைதந்த கலைஞர்கள் நடனம், இசைநடனம், கோலாட்டம், கூத்து முதலான ஆற்றுகைகளை மிகச் சிறப்பான முறையில் நிகழ்த்தியிருந்தார்கள். இந்த விழாவில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், ஓய்வு பெற்ற முல்லைத்தீவு மாவட்ட பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திருமதி லிசோ கேகிதா, கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர், வெலிஓயா பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர்கள், உதவித்திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட மற்றும் பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள், மூத்த கலைஞர்கள், மாணவர்கள்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# அநுரவின் "மாற்றம்" சுயநிர்ணய உரிமைக்கு வழிவிடுமா?



கனுஷியா புஷ்பகுமார்

பல ஆண்டுகாலமாக "பரம்பரை அரசியல்" கலாசாரத்தைக் கையாண்டு இலங்கைத்தீவை வங்குரோத்து நிலைக்குத் தள்ள ராஜபக்ச குடும்பத்தின் ஆட்சி வழிவகுத்தது என்ற உறுதியான கருத்து மேலோங்கியுள்ளது.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் 2024ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிகளில் நாட்டு மக்கள் சரியான ஆட்சி முறையின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டு இருக்கவில்லை.

2009ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ச ஆட்சியின் கீழிருந்த அரசாங்கம் விடுதலைப்புலிகளை வீழ்த்தியது. இதனைக் காரணமாகக் கொண்டு மகிந்த, அவரது அரசாங்கத்தின் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ச மற்றும் ராஜபக்ச குடும்பத்தினர் , அரசியல் சுய இலாபங்களை மேற்கொள்ள ஆரம்பித்தனர்.

அவரது ஆட்சியைக் கேள்விக் கேட்கும் அளவிற்கு பலமான ஒரு எதிர்க்கட்சியும் இருக்கவில்லை. உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்ததை காரணம் காட்டி பல மோசடிகளில் ஈடுபட்டும் வந்தனர்.

இருந்தாலும் இந்த நாடகம், அரசியலில் அனுபவமே இல்லாத கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவு செய்யபட்ட போது வெளிச்சத்திற்கு வர ஆரம்பித்தது.

கோட்டாபய பதவி வகித்த போது இராணுவ ஆட்சிக்கு வழி வகுக்கும் என்ற எதிர்ப்பார்ப்புகள் காணப்பட்டாலும், எதிர்ப்பாராத விதமாக நாட்டின் பொருளாதாரம் பின்னோக்கி செல்ல ஆரம்பித்தது.1948ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு முன்னிருந்தே இலங்கை மக்கள் அவர்களின் தேவைகளையும் , உரிமைகளையும் பெற போராட்டங்களை மேற்கொள்ள வேண்டி இருந்ததாலும் கூட மக்களின் பொறுமையை சீண்டும் விதத்தில் கோட்டாபயவின் ஆட்சி செயலிழந்தது.

நாட்டின் பணவீக்கம் அதிகரித்தது, மின் துண்டிப்புகள் நாளுக்கு நாள் ஒவ்வொரு மணித்தியாலமாக அதிகரித்தது, எரிபொருள் தட்டுப்பாடு போன்ற அடிப்படை சிக்கல்கள் மக்களை மேலும் கோபத்திற்கு உள்ளாக்கியது.

கோட்டாபயவின் ஆட்சி இதற்கு முறையான தீர்வுகளை வழங்க முன்வரவில்லை. இதுவே மக்கள் பொறுமையை இழக்க வழிசமைத்தது. பொறுமையை இழந்த மக்கள் வீதிக்கு இறங்க இரு தடவை சிந்திக்கவில்லை.

கொரோனா தொற்று அதன் காரணமாக சுற்றுலாத்துறை வருமானத்தை இழந்தமையே பொருளாதார நெருக்கடிக்கான காரணம் என அரசாங்கம் கூறிக்கொண்டாலும், சரியான தலைமைத்துவமின்மையே நாட்டை பாரிய வங்குரோத்து நிலைக்குத் தள்ளியது.

2009 போருக்குப் பின்னரான சூழலிலும் கூட ஏற்றுமதிப் பொருளாதாரம் அதிகரிக்கவில்லை. தேசிய உற்பத்திகளும் அபிவிருத்தியடையவில்லை. இதன் காரணமாக பொருளாதார வங்குரோத்து நிலையை சரி செய்ய பல சர்வதேச நாடுகளிலிருந்தும் கடன் வாங்க வேண்டிய நிலை உருவானது.

இந்த அனைத்து காரணங்களாலும் கோட்டாபய ராஜபக்சவை பதவி விலகக் கோரி மக்கள் வீதிக்கு இறங்கி போராடினர். கோட்டாபய ராஜபக்ச உள்ளிட்ட ராஜபக்ச குடும்பத்தினர் அனைவரும் அதிகாரக் கதிரைகளில் இருந்து மக்களால் தூக்கியெறியப்பட்டனர்.



> சந்திரிகா, மகிந்த, கோட்டா ஆகியோரின் பரம்பரை அரசியல் நீட்சி தொடரும் நிலையில் "மாற்றம்", "மறுமலர்ச்சி" என்ற கோஷங்களுக்கு முடிவுரை எழுதப்படும் சாத்தியமே அதிகரிக்கிறது



முன்னாள் இராணுவ அதிகாரியாக பணியாற்றியிருந்த கோட்டாபயவிற்கு அரசியல் ஞானமும், அனுபவமும் குறைவாகவே காணப்பட்டது. ஜனாதிபதியாக பதவி வகித்த பின்னர் கோட்டாபயவை வழிநடத்தியவர்களே நாட்டின் இந்த நிலைக்கு காரணம் என்பது அந்த சந்தரப்பத்தில் அதிகளவில் பேசப்பட்ட ஒரு விடயம்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஏற்படுத்தப் பட்டதாகவும், அதற்கு கோட்டாபய ராஜபக்ச பலியானதாகவும், தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவே பல அரசியல் மேடைகளில் தெரிவித்திருந்தார்.

எனினும், தற்போதைய மறுமலர்ச்சி அரசாங்கமான அநுர அரசாங்கமும் ஆட்சிக்கு வந்த பின்னர் கோட்டாபய கால்தடத்தை பின்பற்றும் ஒரு போக்கினை காணக்கூடியதாக உள்ளது.

இவ்விடயம் தற்போது அரசியல் விமர்சகர்கள் மத்தியிலும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

முதலில் கூறிய பரம்பரை அரசியல் மற்றும் குடும்ப அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து புதிய ஒரு அரசியல் கலாசாரத்தை மக்கள் ஏற்று அதிகாரத்தில் அமர்த்தினாலும் கூட ஆட்சி அமைத்த நாளிலிருந்து அநுர உள்ளிட்ட அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் கோட்டாபயவை பின்பற்றுவதாகவே அமைந்துள்ளது.

இந்தக் கேள்வி அநுர ஜனாதிபதியாகும் முன்னரே எழுந்திருந்தது, அதற்கான காரணம் அவர்களின் கொள்கைகளுள் இறக்குமதி பொருளாதாரத்திற்கு தடை எனக் குறிப்பிடப்பட்டிருந்ததே ஆகும். இந்த சந்தேகங்களுக்கு அவர்களின் கொள்கைகள் மூலமாகவே அவர்கள் மேடைகளில் பதிலளித்திருந்தாலும் ஆட்சிக்கு வந்தவுடனேயே நாட்டில் ஏற்பட்ட அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியாமல் இந்தியாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்கு அநுர அரசாங்கம் தள்ளப்பட்டது. இதே நிலை தான் கோட்டாபய ஆட்சியில் மஞ்சள் இறக்குமதி மற்றும் உர இறக்குமதி நாடுக்குத் தடை விதிக்கப்பட்டதால் வருமானத்தை இழக்க நேரிட்டது. வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை அநுர அரசாங்கத்தில் நீக்கப்பட்டுள்ள அதேவேளை, ஐஎம்எப் எனப்படும் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்கள் எதுவித மாற்றங்களுமின்றி தொடருகின்றன. இந்த விடயங்கள் அனைத்தும் அநுரவின் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டவையாக இருப்பதால் நாட்டு மக்கள் மத்தியில் தற்போது அச்சம் ஏற்பட ஆரம்பித்துள்ளது. இலங்கை தற்போது ஆட்சி மாற்றத்தை எதிர்கொண்டுள்ளது. மறுமலர்ச்சி அரசியல் என மார்தட்டினாலும் கூட அது தொடர்பிலான எதுவித மாற்றமும் அவர்களின் நடவடிக்கைகளில் தெரியவில்லை. நீண்ட நாட்களாக காலி முகத்திடல் போராட்டத்தை எதிர்கொண்ட மக்கள் புதிய ஆட்சியில் இருந்து பல விடயங்களை எதிர்ப்பார்க்கின்றனர் என்பதை அநுர உள்ளிட்ட அரசாங்கம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

ஆட்சியின் ஆரம்பத்திலேயே இவ்வாறு மக்கள் விமர்சனங்களுக்கு உள்ளாவார்களாக இருந்தால் அதில் ஒரு சிக்கல் நிலை உள்ளது.

அரிசி, தேங்காய் போன்ற அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு என்பன உட்பட போலிக் கல்வித் தகைமைகளை மக்கள் மத்தியில் முன்வைப்பது வரை சிக்கல்கள் காணப்படுகின்றன.

கோட்டாவின் அரசாங்கம் பதவி கவிழ்வதற்குக் காரண – காரியமாக அமைந்த அத்தனை விடயங்களும் தற்போது அநுரவின் அரசாங்கத்தில் தலைகாட்டுகின்றன.

1948 இல் இருந்து இனவாத நோக்கிலான அரசியல் – பொருளாதார திட்டங்களே இலங்கைத்தீவின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் என்று பொருளியல் ஆய்வாளர்கள் பலர் கூறியுள்ளனர். ஆகவே "மாற்றம்" "மறுமலர்ச்சி" என்று மார்தட்டிக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் பரம்பரை கட்சிகளின் அரசியல் நீட்சியாக இருக்கக் கூடாது.

பரம்பரை அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் கனவான்கள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில், இடதுசாரி – சோசலிசம் என்று கோசமிட்டு ஆட்சிக்கு வந்த ஜேவிபியின் முகத் தோற்றமான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பை முற்றாக மாற்ற வேண்டும்.

அந்த மாற்றம் என்றும் ஏனைய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் வகையிலான புதிய அரசியல் யாப்புக்கு இடமளிக்க வேண்டும். வெறுமனே சமத்துவம் என்ற கோசத்துக்குள் சிங்கள தேசியத்துக்குள் ஏனைய தேசிய இனங்களை கரைக்கும் திட்டங்களுக்கு இடமளிக்கக்கூடாது.

---

# சர்வதேச செஸ் சம்பியன் குகேஷ்



தமிழக வீரர் குகேஷ் உலக செஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார். சீனாவை சேர்ந்த டிங் லிரேனை வீழ்த்தி, 18 வயதில் இச் சாதனையை நிலைநாட்டியுள்ளார். அத்தோடு மிகக் குறைந்த வயதில் உலக செஸ் சாம்பியனாக வரலாறு படைத்துள்ளார்.

செஸ் போர்டில் தனது காய்களை நகர்த்துவதற்கு முன்பாக, சில நொடிகள் கண்களை மூடிக்கொண்டு சிந்திப்பது அவரின் வழக்கமாம்.

இவர் சென்னையைச் சேர்ந்தவர்.உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடைபெற்றபோது நடப்பு சாம்பியனான டிங் லிரேனை எதிர்த்து விளையாடி வெற்றி பெற்றார்.

இருவருக்கும் இடையில் 14 சுற்றுகள் நடைபெற்றன. ஆரம்பம் முதலே மிகவும் சவாலான போட்டியாக இருந்து வந்துள்ளது.

முதலில் சில சுற்றுகளில் குகேஷின் கை ஓங்கியிருந்தாலும், அதன் பின் 32 வயதான டிங் லிரேன் தனது பட்டத்தைத் தக்க வைத்துக்கொள்ள கடுமையாக ஆடினார். ஒன்பதாவது சுற்றின் முடிவில், இருவரும் சமநிலையில் இருந்தனர். அதன் பிறகு ஒவ்வொரு சுற்றிலும் இருவருக்கும் சமமான வாய்ப்புகளும் சமமான சறுக்கல்களும் இருந்தன. ஆனால் ஒருவருக்கு ஒருவர் சளைக்காமல் ஆடினர்.

பத்தாவது சுற்றின் இறுதியிலும் இருவரும் சமநிலையில் இருந்தனர். பதினொன்றாவது சுற்றில் குகேஷ் சிறப்பாக ஆடி, ஆட்டத்தைத் தன்வசப்படுத்தி இருந்தார்.

டிங் லிரேனை ஒரு நெருக்கடிக்கு ஆளாக்கும் போதுதான் அவர் ஆபத்தானவராகிறார் என்று இந்திய ஆனந்த் தெரிவித்திருந்தார். அதற்கு ஏற்றாற்போல், 12வது சுற்றில் மீண்டும் சவாலான ஆட்டத்தைக் கொடுத்து, தனக்கான புள்ளிகளை அதிகரித்துக் கொண்டார் டிங் லிரேன்.

அனைவரும் மிகவும் எதிர்ப்பார்த்த 13ஆவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. 14ஆவது ஆட்டத்தில் குகேஷ் இறுதிவரை தொடர்ந்து உறுதியாக விளையாடி வெற்றி பெற்றார்.

### வெற்றியின் பின்னர் அவர் கூறிய கருத்து

"இரண்டு வருட தீவிர பயிற்சிக்குப் பின் கிடைத்த வெற்றி இது"

இந்தப் போட்டிக்கு உடல்ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் தயாராகி வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

குகேஷ் 10 வருட பயிற்சியின் விளைவாக இந்த சாதனையைப் படைத்துள்ளார், இந்தியாவுக்கு 11 ஆண்டுகளுக்கு முன்பு பறிக்கப்பட்ட சாம்பியன் பட்டத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்று கனவு கண்டதாகவும் தெரிவித்தார்.

18 வயதில் உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்றிருக்கும் குகேஷ், விஸ்வநாதன் ஆனந்துக்கு பிறகு இந்த பட்டத்தை வெல்லும் இரண்டாவது இந்தியர் ஆவார்.

மேக்னஸ் கார்ல்சனுடன் விஸ்வநாதன் ஆனந்த் விளையாடிய போது, குகேஷ் பார்வையாளராக இருந்தார், மேலும் ஒருநாள் உலக சாம்பியன்ஷிப்பிற்காக விளையாட வேண்டும் என்று அன்றே முடிவு செய்தாராம்.

### 11 வருடங்களின் பின் நனவான கனவு

போட்டியின் 13வது ஆட்டத்தின் முடிவில் குகேஷ் மற்றும் லிரன் தலா 6.5 புள்ளிகளுடன் சமநிலையில் இருந்தனர்.

14ஆவது ஆட்டம் தொடரும் போது, அது சமநிலையில் முடிவடையும் என்று பலர் கணித்தனர், ஆனால் குகேஷ் இறுதிவரை தொடர்ந்து உறுதியாக விளையாடி வெற்றி பெற்றார்.

அவரது வெற்றியானது, ரஷ்யா மற்றும் மேற்கு நாடுகளால் ஆதிக்கம் செலுத்தப்படும் செஸ் உலகில் மீண்டும் ஒரு புதிய சக்தியாக இந்தியா உருவெடுத்திருப்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இதில் பங்குபற்றிய இருவருமே ஆசியாவைச் சேர்ந்த வீரர்கள். இறுதி போட்டியில் ஆசிய வீரர்கள் மட்டுமே மோதிக் கொள்ளும் முதல் செஸ் சாம்பியன்ஷிப் இதுதான்.



ஏ.எச்.ஏ.ஹுஸைன்



# மரணப் பொறியாகும் வீதிகள்

# அதிகரிக்கும் வீதி விபத்துகளில் மலிந்து போகும் மரணங்கள்

## சிதறி சின்னா பின்னமாகும் உடல்கள்

நமது நாட்டில் ஒவ்வொரு மூன்று மணித்தியாலத்திற்கும் ஒருவர் என்ற அடிப்படையில் கவனக் குறைவான வாகனம் செலுத்தி விபத்துகளில் சிக்கி தமது உயிரைப்போக்கிக் கொள்கின்றார்கள் என்ற திடுக்கிடும் தகவல் வீதிகளில் பயணிக்கும் நம்மில் எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கிறது என்பதில் தெளிவில்லை. அந்த அடிப்படையில் பார்த்தால் நாளொன்றிற்கு 8 பேரும், ஒரு மாதத்தில் சுமார் 240 பேரும், ஒரு வருடத்தில் அண்ணளவாக 2880 பேரும் உயிரிழக்கின்றனர். கடந்த பத்து வருட காலப்பகுதிக்குள் கவனக் குறைவாக வாகனம் செலுத்தும் வீதி விபத்துகளினால் சுமார் 30 ஆயிரம் பேர் காவு கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

வீதி விபத்துகள் சாதி சமயம் பார்த்தோ மொழி பிரதேசம் அல்லது பால் வயது வித்தியாசங்களின் அடிப்படையிலோ நிகழ்வதில்லை.

இது பயங்கரவாதத்தை விட கொடியது என்றுதான் கொள்ளப்பட வேண்டும். காரணம் சிலவேளை, நாம் பயங்கரவாதத்தின் இலக்குகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முடிந்தாலும்கூட இத்தகைய முன்னெச்சரிக்கை தராத கொடிய வீதி விபத்துகளிலிருந்து தப்பிக்கவே முடியாது போய்விடும்.

எனவே, இத்தகைய பேராபத்துகளில் இருந்து நாட்டு மக்களை மீட்டெடுப்பதற்கான ஒரு விழிப்புணர்வுத் திட்டத்தை தாங்கள் ஆரம்பித்திருப்பதாக அக்ஷன் யுனிற்றி லங்கா எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் தெரிவிக்கின்றது. சைல்ட் பண்ட் நிறுவனத்தின் நிதி அனுசரணையில்



அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவனம் "கவனத்துடனும் அக்கறையுடனும் போக்குவரத்து விதிகளைப் பிற்பற்றி பாதுகாப்புடன் வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தல் விழிப்புணர்வு" எனும் தொனிப்பொருளில் அமைந்த ஒன்லைன் நிகழ்நிலை ஊடான கருத்தாடல் நிகழ்வைத் துவக்கியுள்ளது.

இதன்மூலம் "இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்கள் பாதுகாப்பாக வாகனம் ஓட்டுவதன் மூலம் வாழ்வதற்கான உரிமைகளை உறுதி செய்தல்" எனும் ஒன்லைன் நிகழ்நிலை விழிப்புணர்வுப் பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது.

ஆரம்பமாக மட்டக்களப்பில் நிகழ்வைத் துவக்கி வைத்து அங்கு கருத்துத் தெரிவித்த அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவனத்தின் இளைஞர் அபிவிருத்தி வலுவூட்டல் செயல்திட்ட இணைப்பாளர் அனுலா அன்ரன், இலங்கையில், வருடாந்தம் சராசரியாக 38,000 விபத்துகள் நிகழ்கின்றன, அதன் விளைவாக வருடாந்தம் சுமார் 3,000 இறப்புகள் மற்றும் 8,000 கடுமையான காயங்கள் ஏற்படுவதாகக் கண்டறிப்பட்டுள்ளது.

கடந்த தசாப்தத்தில் இலங்கையின் வீதிகளில் ஏற்படும் அதிக வீதி விபத்து மரணங்கள் மற்றும் காயங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் பாதித்திருக்கின்றது.

வீதி விபத்தில் சிக்கி பலியானவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் 15-30 வயதுக்குட்பட்டவர்கள். அதனாலேயே இளைஞர்கள் மத்தியில் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்த விளைகின்றோம். முதற் கட்டமாக குறைந்த பட்சம் 50 ஆயிரம் பேரை இந்த விழிப்புணர்வப் பிரசாரம் அடைந்து அவர்கள் பாதுகாப்பான சாரதித்துவத்தின் ஆர்வலர்களாக மாற வேண்டும்" என்றார். போக்குவரத்து விதிகளை முறையாகப் பின்பற்றி, பாதுகாப்பாக வாகனம் ஓட்டுவதன் மூலம் நமதும் மற்றவர்களினதும் வாழ்வதற்கான உரிமைகளை உறுதிசெய்து கொள்வதற்காக இந்த விழிப்புணர்வு கருத்தாடல் செயல்திட்டம் இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த விழிப்புணர்வூட்டல் கருத்தாடல் நிகழ்வில், சட்டவாளர் சந்திரலிங்கம் சந்திரகுமார், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர விபத்துப் பிரிவின் வைத்திய அதிகாரி செபரெட்ணம் பிரான்ஸிஸ் அல்மெய்டா, அக்ஷன் யுனிற்றி



லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவனத்தின் முகாமையாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி சுரேஷ், இளைஞர் அபிவிருத்தி வலுவூட்டல் செயல்திட்ட இணைப்பாளர் அனுலா, நெறியாளர் அகல்யா டேவிட் ஆகியோர் கலந்து கொண்டு பங்குபற்றிய இளைஞர் யுவதிகள் மத்தியில் கருத்துத் தெரிவித்தனர்.

"நாட்டில் நாளாந்தம் ஏராளமான விபத்துக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம்பெறுகின்றன. ஆனால், இந்த அவசர இயந்திர வாழ்க்கை மயப்பட்ட யுகத்தில் நின்று நிதானித்து உற்று நோக்காமல் சிலபோது நாம் விபத்துக்கைளையும் அவை ஏற்படுத்தும் பாரதூர விளைவுகளையும் கண்டு கொள்ளாமல் கடந்து சென்று விடுகின்றோம். இதனால் நாட்டுக்கும் சமூகத்திற்கும் பெரும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

உயிர், உடமை இழப்புக்களும், அதனோடு சேர்த்து அங்கவீனம், வாழ்விழப்பு, சொத்து இழப்புக்களும் ஈடு செய்ய முடியாதவை. எனவே, இதுபற்றி சமதாயத்திலுள்ள அனைவரும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்" என்று வளவாளர்கள் வலியுறுத்தினர். கவனக் குறைவான வாகனமோட்டுதலால் ஏற்படும் விபத்துகளுக்கு பல காரணங்கள் உள்ளன.

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாது வாகனங்களை வேகமாகச் செலுத்துவது, வாகனத்தை முந்திச்செல்ல எத்தனிப்பது, பிழையான வழியில் வாகனங்களைச் செலுத்துவது, திருப்ப வேண்டிய இடங்களில் வேகமாகத் திருப்புவது, மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தவது. வாகனத்தில் இருப்போரை அல்லது மற்றவர்களை குசிப்படுதுவதற்காக வாகனத்தைச் செலுத்துவது, சிறுபிள்ளைகள் வாகனங்களைச் செலுத்தவது போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம். விபத்துக்கள் ஏற்படுவதற்கான வேறு பல காரணங்களும் உள்ளன. இந்த விடயங்கள் தொடர்பாக அனைவருக்கும் அறிவூட்ட வேண்டும்.

லொறிகளினாலும் பஸ்வண்டி களினாலும் இதர மோட்டார் வாகனங் களினாலும் ஏற்படும் விபத்துக்களுடன் மோட்டார் சைக்கிள்களால்தான் அதிக விபத்துக்கள் சம்பவிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க, நாம் எமது குழந்தைகளையும், இளம் பராயத்தினரையும் பாதைகளில் அவதானமாகப் பயணிப்பதற்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். அக்கம் பக்கம் பார்க்காமல் கையடக்கத் தொலைபேசியைக் காதில் வைத்துக்கொண்டு எம்மில் ஏராளமானோர் பயணம் செய்கின்றோம். பிரதான பாதைகளில், ரெயில் பாதைகளில், நெடுஞ்சாலைகளில், எவ்வாறு செல்லவேண்டும் என்ற விதிமுறையை மறந்து நம்மில் பலர் கண்மூடித்தனமாகப் பயணம் செய்கின்றனர். நாமும் இவற்றைப் பார்த்துக் கொண்டு கண்மூடித்தனமாகப் போகின்றோம். இப்படி கண்டும் காணாமல் அக்கறையில்லாமல் கண்மூடித்தனமாகப் போவதா இல்லாவிட்டால் இதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதா என்பதை நாம் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

வீதி விபத்துகளில் மரணிப்போர் இந்த நாட்டின் சுபீட்சத்திற்காகவும் எழுச்சிக்காகவும் பாடுபடக்கூடியவர்கள். இதில் தனது குடும்பங்களை வாழவைக்கின்ற குடும்பத்தலைவர்களும் மரணிப்பது கவலைக்குரிய விடயமாகும். இதனால் எத்தனையோ குடும்பங்கள் அநாதரவாகிப் போயிருக்கின்றன இதற்காக அரசு என்ற ரீதியில் ஒவ்வொரு வருடமும் பாரிய முதலீட்டை அரசு ஒதுக்க வேண்டியுள்ளது. அத்துடன் காயம் படுவோரின் சிகிச்சைக்காகவும் அரசு பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுகிறது.

மதுபோதையில் முறையற்ற வாகனமோட்டும் நடத்தைகளில் ஈடுபடும்




சாரதிகள் மீது பொலிஸார் அதிக கவனம் செலுத்த வேண்டும். அதுபோல சாரதி அனுமதிப் பத்திரமில்லாமல் அதி வேகமாக, வாகனங்களைச் செலுத்துவோர் மீதும் பொலிஸார் அதிக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூறவேண்டியுள்ளது.

தொற்று நோய்களை ஒழிப்பது போன்று பாதைகளில் ஏற்படுகின்ற விபத்துக்களையும் நாம் இல்லாதொழிக்க வேண்டும் என்ற அறைகூவலை ஒவ்வொருத்தரும் மனத்தில் இருத்திச் செயற்பட வேண்டும்.

இந்தக் குறைபாடுகளையெல்லாம் சரி செய்து சரியான முறையில் வாகனத்தைச் செலுத்தும் நவீன நாகரீகக் காலத்தை நாம் உருவாக்க வேண்டும்.

உரிய அதிகாரிகள் தத்தமது கடமைகளை மதித்து சேவை மனப்பான்மையோடு சட்ட நடவடிக்கைகளை எடுத்து வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாகப் பொலிஸார் மட்டுமல்ல பொதுமக்களும் பாதசாரிகளும் பயணிகளும் அதிக கவனம் செலுத்த வேண்டும். பிரதான வீதிகள், நெடுஞ்சாலைகள், குறுக்கு வீதிகள் உயிர்பறிக்கும் கொல்களங்களாக இல்லாமல் பாதுகாப்பாகப் பயணிக்கக் கூடிய மலர்ப்பாதைகளாக மாற வேண்டும். அதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்போடு செயற்பட்டு இப்போதிருந்தே பாடுபடவேண்டும் "பாதுகாப்பான பயணம்" என்பது பற்றி சமூகம் உட்பட இளைஞர்களிடையே பாரிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

# புதிய நிர்வாகத் தெரிவில் முறைகேடு; மீள் தெரிவுக்காக மகஜர் கையளிப்பு

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான புலிங்கதேவன் முறிப்பு கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவில் முறைகேடு இடம்பெற்றுள்ளதால் உரிய ஜனநாயக முறைப்படி மீள்தெரிவினை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் மாவட்ட அரச அதிபர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு மகஜர்களை வெள்ளிக்கிழமை (13) கையளித்துள்ளனர்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான புலிங்கதேவன் முறிப்பு அமைப்பின் ஆயுட்காலம் நிறைவடைந்தும் நீண்ட காலமாக அதன் புதிய நிர்வாகத் தெரிவு மேற்கொள்ளப்படாத நிலையில் இருந்துள்ளது. இந்நிலையில் இதற்கான புதிய நிர்வாகத் தெரிவு தொடர்பான அறிவித்தல் கம நல சேவை நிலையத்தால் விடுக்கப்பட்டு குறித்த நிர்வாகத் தெரிவானது கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட போதும் உரிய ஜனநாயக முறைப்படி நடைபெறவில்லை என்றும் இதனை ஜனநாயக முறைப்படி. மீள நடத்த வேண்டும் என்றும்

பாதிக்கப்பட்டவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதாவது குறித்த பிரதேசத்தில் 587 க்கு மேற்பட்ட விவசாயிகள் பயிர் செய்கைகளில் ஈடுபட்டு வருகின்ற போதும் தெரிவுக்காக பயன்படுத்தப்பட்ட பயனாளிகள் பட்டியலில் 269 பெயரை மாத்திரமே உள்ளடக்கி பாரபட்சமான முறையில் குறித்த அமைப்பு தெரிவு செய்யப்பட்டு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதாவது ஆயிரத்து 800 ஏக்கருக்கும் மேற்பட்ட பயிர்செய்கை பிரதேசத்தைக் கொண்ட இவ் அமைப்பின் கீழ் சுமார் 587 விவசாயிகள் பயிர்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதுடன் விவசாயிகளுக்காக வழங்கப்படும் அரச மானியங்களையும் பெற்று வருகின்றனர்.

இவர்களில் 456 விவசாயிகள்



தலா 500 ரூபா அங்கத்துவ பணத்தினை செலுத்தியும் வருடாந்த சந்தாவினை செலுத்தியுள்ள போதும் 186 விவசாயிகளின் பெயர்களை இருட்டடிப்பு செய்து முன்னைய நிர்வாகத்தினால் தயாரிக்கப்பட்ட 269 பேரின் பெயர் பட்டியலை வைத்தே வாக்கெடுப்பு மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது

ஆகவே இவ்வாறான முறையற்ற தெரிவை உடனடியாக இரத்து செய்து புதிய நிர்வாகத்தினை ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யுமாறு கோரி நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கு கையளித்துள்ளனர்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக புலமைப்பரிசிலுக்கான காலம் நீடிப்பு

வெளிநாட்டில் பணிபுரியும் பெற்றோர்களின் குழந்தைகளுக்கான புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பம் கோரல் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், அதற்கான காலம் டிசம்பர் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

புலம்பெயர்ந்து பணியாற்றும் இலங்கையர்களின் பிள்ளைகளுக்கு இந்தப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுவது தொடர்பில் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் பணியகம் தெரிவித்துள்ளது.




இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கை பெற்றோரின் பிள்ளைகளுக்கு இந்த புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. உதவித்தொகை மூன்று பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகிறது.

இதன்படி,தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 25,000 ரூபாவும், சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 30,000 ரூபாவும், உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் அல்லது ஏனைய பாடநெறி மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளுக்கு தகுதி பெற்ற பிள்ளைகளுக்கு 40,000 ரூபாவும் வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்கள் இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம். தகுதியுடைய பிள்ளைகள் www.slbfe.lk என்ற இணையத்தளத்திற்கு சென்று விண்ணப்பிக்கலாம் என பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 011 2365471 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பணியகம் தெரிவித்துள்ளது.

# வடமராட்சியில் எலிக்காய்ச்சல் விழிப்புணர்வூட்டும்



யாழ். வடமராட்சி பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பொது சுகாதார பரிசோதகர்களால் எலிக்காய்ச்சல் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் வெள்ளிக்கிழமை (13) மேற்கொள்ளப்பட்டன.

கிராமங்கள் தோறும் சென்று இந்த விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை அவர்கள் முன்னெடுத்தனர்.

இதன்போது துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பருத்துத்துறை நகரசபை பகுதியிலும் பொது சுகாதார பரிசோதகர்களால் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.



# டில்லியில் பாடசாலைகளுக்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல்

தேசிய தலைநகரில் அமைந்துள்ள மூன்று பாடசாலைகளுக்கு நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை (13) மின்னஞ்சல் மூலமாக வெடிகுண்டு மிரட்டல் வந்ததாக டில்லி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைலாஷின் கிழக்கில் உள்ள டெல்லி பப்ளிக் பாடசாலை, மயூர் விஹாரில் உள்ள சல்வான் பப்ளிக் பாடசாலை மற்றும் கேம்பிரிட்ஜ் பாடசாலை ஆகியவற்றுக்கே வெடிகுண்டு மிரட்டல்கள் வந்துள்ளன.

நேற்றுமுன்தினம் அதிகாலை 4.30 மணிக்கு முதல் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, டில்லி பொலிஸார் மற்றும் டெல்லி தீயணைப்புப் படையினர் குழு விசாரணைக்காக சம்பவ இடத்துக்கு விரைந்தனர். விசாரணையில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் எதுவும் மீட்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.




இந்த வார தொடக்கத்தில், ஆர். கே.புரத்தில் உள்ள டெல்லி பப்ளிக் பாடசாலை மற்றும் பஸ்சிம் விஹாரில் உள்ள ஜி.டி.கோயங்கா பப்ளிக் பாடசாலை உட்பட டெல்லியில் உள்ள 40 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்தது. எனினும், இவைகள் அனைத்து போலி மிரட்டல் செய்திகள் என உறுதிபடுத்தப்பட்டது.




# இந்தியாவில் பண வீக்கம்

இந்தியாவின் நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையிலான சில்லறை பணவீக்கம் நவம்பரில் 5.48% ஆகவும், ஒக்டோபரில் 6.21% ஆகவும்



இருந்ததாக புள்ளியியல் மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சின் (MoSPI) தரவுகள் தெரிவிக்கின்றன.

காய்கறிகளின் விலையில் ஏற்பட்ட சரிவு மற்றும் நெற் பயிர் விதைப்பு முன்னேற்றம் ஆகியவை எதிர்பார்த்த குறைவுக்கு காரணம் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

சில துறைகளில் நிவாரணம் இருந்த போதிலும், உயர்ந்த காய்கறி மற்றும் உணவு விலைகள் தொடர்ந்து மூன்றாவது மாதமாக பணவீக்கத்தை 5% க்கு மேல் வைத்திருக்கின்றன. அதேநேரம், உணவுப் பொருட்களின் பணவீக்கம் நவம்பர் மாதத்தில் 9.04 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இது அக்டோப ரில் 10.87 சதவீதமாகவும், 2023 நவம்ப ரில் 8.70 சதவீதமாகவும் இருந்தது. இதேவேளை, கடந்த வாரம், ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு, நடப்பு நிதியாண்டிற்கான அதன் பொருளாதார வளர்ச்சி கணிப்பை 7.2% இலிருந்து 6.6% ஆகக் குறைத்தது, அதே நேரத்தில் அதன் பணவீக்கக் கணிப்பை 4.5% இலிருந்து 4.8% ஆக உயர்ந்திருந்தமை குறிபிடத்தக்கது.

# இந்திய ரிசர்வ் வங்கிக்கு வெடிகுண்டு மிரட்டல்

இந்திய ரிசர்வ் வங்கியின் வாடிக்கையாளர் சேவை எண்ணுக்கு வியாழக்கிழமை அழைத்த ஒருவர், ரிசர்வ் வங்கி தலைமையகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளார்.




வழக்கமாக, அடையாளம் தெரியாத நபர்கள், வதந்திகளை பரப்பும் பொருட்டு இதுபோன்ற வெடிகுண்டு மிரட்டல்களை விடுவதை ஒரு வழக்கமாக வைத்திருக்கிறார்கள் என்றாலும், ரிசர்வ் வங்கியின் சேவை எண்ணை தொடர்புகொண்ட அந்த நபர் தன்னை பயங்கரவாத அமைப்பான லஷ்கர்–இ–தொய்பாவின் CEO என குறிப்பிட்டிருக்கிறார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரிசர்வ் வங்கியை வெடிக்க வைத்து தரைமட்டமாக்கப்போவதாக மிரட்டல் விடுத்த அந்த நபர் மேலும், தடைசெய்யப்பட்ட குழுவின் CEO என தன்னை அடையாளப்படுத்தி உள்ளார். அதுமட்டுமின்றி வெடிகுண்டு மிரட்டல் விடுப்பதற்கு முன் ஒரு பாடலை அவர் பாடியிருக்கிறார் என கூறப்படுகிறது.

# தமிழகத்தில் தீ விபத்து; அறுவர் உயிரிழப்பு




தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

விபத்தினை அடுத்து தனியார் வைத்தியசாலையில் இருந்து குறைந்தது 29 நோயாளிகள் திண்டுக்கல் அரசு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக இந்திய அரசு உயர் அதிகாரி ஒருவர் உறுதிபடுத்தியுள்ளார்.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வியாழக்கிழமை இரவு 9.00 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தினை அடுத்து, திண்டுக்கல் தீயணைப்பு படைவீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். 15 இற்கும் மேற்பட்ட அம்பியூலன்ஸ் வாகனங்கள் அங்கு உதவிக்கு வந்ததாகவும் கூறப்படுகிறது.

மின்கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆண்டின் சிறந்த நபராக ட்ரம்ப்




அமெரிக்காவின் பிரபல டைம் இதழானது, ஜனாதிபதியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்பை 2024 ஆம் ஆண்டின் சிறந்த நபராக பெயரிட்டுள்ளது. இதற்கு முன்பு ட்ரம்ப், 2016 இல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் இந்த கௌரவத்தை பெற்றார்.

2024 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப்பின் வரலாற்று வெற்றி, அடுத்த பதவிக் காலத்தின் போதான மறுசீரமைப்புக் கொள்கைகள் என்பன இந்த ஆண்டின் சிறந்த நபராக ட்ரம்ப்பை தேர்வு செய்ய வழி வகுத்ததாக டைம் இதழின் பிரதம ஆசிரியர் சாம் ஜேக்கப்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

டைம் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில், குடியரசுக் கட்சித் தலைவர் தனது இரண்டாவது பதவிக் காலத்திற்கான சில திட்டங்களை மீண்டும் வலியுறுத்தினார். நேர்காணலின் போது ட்ரம்ப், தனது தேர்தல் வெற்றி, பொருளாதாரம் உக்ரைன் மற்றும் மத்திய கிழக்கில் உள்ள சூழ்நிலைகள் குறித்து விவாதித்தார். மில்லியன் கணக்கான புலம்பெயர்ந்தோரை நாடு கடத்துவது, ஜனவரி 6 கேபிடல் கலவர பிரதிவாதிகளுக்கு மன்னிப்பு வழங்குவது உள்ளிட்ட தனது எதிர்கால திட்டங்கள் தொடர்பில் கூறினார்.

இந்த ஆண்டின் சிறந்த நபர் விருதுக்கு, துணைத் தலைவர் கமலா ஹாரிஸ், வேல்ஸ் இளவரசி மற்றும் டெஸ்லா தலைமை நிர்வாக அதிகாரி எலோன் மஸ்க் உட்பட பத்து பேர் பரிந்துரைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவின் உக்கிர தாக்குதல்:

# உக்ரைன் இராணுவ வீரர்கள் 200 பேர் பலி

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையான போரானது 2 ஆண்டுகளுக்கு முன்பு 2022 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. தொடக்கத்தில் உக்ரைனின் கீவ், கார்கிவ், டொனேட்ஸ்க் உள்ளிட்ட பல நகரங்களை ரஷ்யா கைப்பற்றியது. எனினும் அவற்றுக்கு பின்னர் உக்ரைன் பதிலடி கொடுத்து விட்டது. போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக தூதரக மற்றும் அமைதி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால் அதில் பலன் ஏற்படவில்லை.

போரில் அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளின் ஆதரவை உக்ரைன் அரசு கோரி வருகின்றது. இதற்கேற்ப அந்நாடுகளும் இராணுவம் மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன. இதே போன்று வடகொரியா, ரஷ்யாவுக்கு இராணுவ தளபாடங்கள் மற்றும் வீரர்களை அனுப்பி மறைமுக உதவி செய்து வருகிறது. இந்நிலையில் உக்ரைன் ஆயுதப் படைகள் குர்ஸ்க் பகுதியில் கடந்த நாட்களில் 200 இற்கும் மேற்பட்ட வீரர்களை இழந்துள்ளதாக ரஷ்யா பாதுகாப்பு அமைச்சகம் வியாழக்கிழமை தெரிவித்தது.

இது தொடர்பாக வெளியிட்ட செய்தி குறிப்பில் கடந்த நாட்களில் உக்ரைன் ஆயுதப்படைகள் 200 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களை இழந்துள்ளன.

பீரங்கி ஒன்று, பீரங்கிகளை அழிக்கும் வாகனங்கள், 2 கவச வாகனங்கள், 4 கார்கள் மற்றும் 3 மோட்டார்கள் அழிக்கப்பட்டன.

மொத்தத்தில் உக்ரைன் குர்ஸ்க் பகுதியில்



தாக்குதலின் போது இதுவரை 40,060 இற்கும் மேற்பட்ட வீரர்களையும் 236 பீரங்கி டாங்கிகளையும் இழந்துள்ளது என ரஷ்யா பாதுகாப்பு அமைச்சகம் வியாழக்கிழமை தெரிவித்தது. மேலும் குர்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள நோவோவனோவ்கா கிராமத்தின் கட்டுப்பாட்டை ரஷ்யா படைகள் மீண்டும் பெற்றுள்ளதாக அந்நாட்டு இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது. முன்னதாக அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ள டொனால்ட் டிரம்ப் உலகில் நடக்கும் போர்களை தான் நிறுத்தப் போவதாக அறிவித்தார்.

இந்த சூழலில் பாரிஸில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி மற்றும் பிரான்ஸ் நாட்டுத் தலைவர்களை சந்தித்த ட்ரம்ப் ரஷ்யாவிற்கு எதிரான போரை உடனே நிறுத்துமாறு அறிவுறுத்தினார். இதற்கு பதிலளித்த ரஷ்ய வெளியுறவுத்துறை போரை நிறுத்துவதற்கான பேச்சு வார்த்தைக்கு அதிபர் புட்டின் எப்போதும் தயாராக இருப்பதாக அறிக்கை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது

# அமெரிக்காவில் 1500 கைதிகளுக்கு தண்டனை குறைப்பு

## 19 பேருக்கு பொது மன்னிப்பு



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அடுத்த மாதம் பதவி விலக உள்ள நிலையில் ஒரே நாளில் சுமார் 1500 பேரின் தண்டனைகளை குறைத்துள்ளார். 19 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கியிருக்கிறார். இது தொடர்பாக வெள்ளை மாளிகை வியாழக்கிழமை(12) அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

கொரோனா பரவல் அதிகரித்த போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1500 தண்டனை கைதிகளின் தண்டனை குறைக்கப்பட்டுள்ளது. வன்முறையற்ற குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட 39 நபர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படுகிறது. இதன் மூலம் அமெரிக்க வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் ஒரே நாளில் அதிக நபர்களுக்கு கருணை காட்டப்பட்டுள்ளது. ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்தி தண்டனை கைதிகள் திருந்தி வாழ இரண்டாவது வாய்ப்பு வழங்க முடியும். செய்த தவறுகளுக்கு வருத்தம் தெரிவித்து சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைவதற்காக விருப்பம் தெரிவித்தவர்களுக்கும் மன்னிப்புக்களும் தண்டனை குறைப்புக்களும் வழங்கப்படுவதாக ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

பைடனின் கருணை நடவடிக்கையை மனித உரிமைகள் குழுக்கள், ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் குடும்பத்தினர் பாராட்டியுள்ளனர். நீதி அமைப்பில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை சரி செய்வதற்கான குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது.

# அமெரிக்க சிறையிலிருந்து தப்பிய சீனப் பெண்



அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் உள்ள ஒரு தேவாலயத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதனை அடுத்து துப்பாக்கிச் சூடு நடாத்தியதாக ஜியோவோகின் யான் (30வயது) என்ற சீன இளம் பெண்ணை பொலிஸார் கைது செய்தனர். இது தொடர்பான வழக்கில் அவருக்கு 9 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

அப்பெண் டான்பரி நகரில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டார். இந்த நிலையில் ஜியாவோகின் திடீரென சிறையிலிருந்து தப்பி ஓடினார். இதனையடுத்து பொலிஸார் அவரை தேடும் பணியில் ஈடுபட்டனர். சுமார் 7 மணிநேர தேடுதலுக்கு பிறகு அந்த இளம் பெண்ணை பொலிஸார் மீண்டும் கைது செய்தனர்.

# கனடாவில் கருணை கொலைகள் அதிகரிப்பு

மருத்துவ உதவியினால் இறப்பது கருணைக்கொலை என அழைக்கப் படுகிறது. கனேடிய அரசாங்கத்தின் புதிய தரவுகளின்படி கனடாவில் ஐந்தாவது ஆண்டாக கருணைக்கொலை விகிதம் மெதுவான வேகத்தில் வளர்ந்துள்ளது.

ஒருவர், எந்த ஒரு மருத்துவ நடவடிக்கைகள் (சிகிச்சைகள்) வாயிலாக வும் சரிசெய்யப்பட முடியாத ஒரு கடுமை யான நோயினால் பாதிக்கப்பட்டு, அந்நோ யினால் மிகவும் துன்பப்படுகிறார் என்றால், வேறு எந்த நடவடிக்கை வாயிலாகவும் அவரை விடுவிக்க இயலாத



வேளையில் அத்துன்பத்திலிருந்து விடுவிக்க மருந்து மூலம் உயிரிழக்குமாறு ”கொலை” செய்யும் ஒரு நடைமுறையே ”கருணைக் கொலை” ஆகும். கருணைக் கொலையானது கனடாவில் கடந்த 2016 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் சுமார் 15,300 பேர் இறப்பதில் மருத்துவ உதவி பெற்றதாகக் காட்டும் தரவுகளை புதன்கிழமை(11) கனடாவின் சுகாதார பிரிவு வெளியிட்டது. இது கனடாவில் கடந்த ஆண்டு பதிவான மொத்த இறப்புகளில் 4.7 சதவீதத்தை குறிக்கிறது. இவர்களில் பெரும்பாலானவர்கள் சராசரியாக 77 வயதுக்கும் அதிகமானவர்கள். அவர்களில் சுமார் 96 சதவீதமானோர் புற்றுநோய் போன்ற கடுமையான மருத்துவ நோயி னால் பாதிக்கப்பட்டவர்களாவர். பெரும்பான்மையானவர்கள் சுமார் 96% புற்றுநோய் போன்ற கடுமையான மருத்துவ நிலைமைகள் காரணமாக, “நியாயமாக எதிர்பார்க்கக்கூடியதாக” கருதப்பட்ட மரணம் இருந்தது. கனேடிய சட்டமியற்றுபவர்கள் தற்போது 2027 ஆம் ஆண்டுக்குள் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற் காகவும் கருணைக்கொலை க்கான அணுகலை விரிவுபடுத்த முயல்கின்றனர். கடந்த தசாப்தத்தில் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளுடன் கனடாவும் அடங்கும். 2023 இல் கனடாவில் கருணைக் கொலையில் இறப்பவர்களின் விகிதம் கிட்டத்தட்ட 16% அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகிறது. இந்த எண்ணிக்கை முந்தைய ஆண்டுகளில் சராசரியாக 31% அதிகரிப்பிலிருந்து கூர்மையான வீழ்ச்சியாகும். 2016 ஆம் ஆண்டில் உதவி மரணத்தை சட்டப்பூர்வமாக்கியதிலிருந்து கனடா தனது ஐந்தாவது ஆண்டு அறிக்கையை வெளியிட்டது, இதில் முதன்முறையாக கருணைக்கொலை கோருபவர்களின் இனம் பற்றிய தரவுகள் அடங்கியுள்ளன. இந்நிலையில் இங் கிலாந்தைப் போலவே, கனடாவும் ஆரம்பத்தில் மரணத்தை “நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய” நபர்களுக்கு மட்டுமே சட்டப்பூர்வமாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானியாவின் பொருளாதாரம் சரிவு

பிரிட்டனின் பொருளாதாரம் கடந்த ஒக்டோபர் மாதத்தில் எதிர்பாராதவிதமாக 0.1 வீதத்தால் சரிந்துள்ளதாக அந்நாட்டு நிதி அமைச்சர் ரேச்சல் ரீவ்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதத்துக்கான அதிகாரப்பூர்வ பொருளாதார தரவு ஏமாற்றம் அளிப்பதாகவும் அது எதிர்பாராத மந்த நிலையை உருவாக்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். புள்ளிவிபரங்களுக்கான அலுவலகம், சேவைத் துறை சமதளமாக இருப்பதாகவும், அதே நேரத்தில் உற்பத்தி மற்றும் கட்டுமானத் தொழில்களில் ஒக்டோபரில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியே இதற்கு காரணம் என பிரிட்டனின் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். “இந்த மாத புள்ளிவிபரங்கள் ஏமாற்றமளிக்கும் அதே வேளையில், நீண்ட கால பொருளாதார வளர்ச்சிக்கான கொள்கைகளை நாங்கள் அமைத்துள்ளோம்” என ரீவ்ஸ் தெரிவித்துள்ளார். 2024 ஆம் ஆண்டிற்கான பிரிட்டனின் வருடாந்த வளர்ச்சி ஒரு வீதத்தால் குறைந்துள்ள போதிலும் 2025 ஆம் ஆண்டில் 1.5 வீதத்தால் மேலதிகமாக பொருளாதாரம் வளர்ச்சியடையும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.






# இலங்கை இளையோர் அணியில் பிரகாசிக்கும் Little சங்கா ஷாருஜன்; யாழ். Malinga மாதுளன்



(மொஹமட் றிஷாட்)

இலங்கை கிரிக்கெட் அணிக்காக ஆட வேண்டும் என்ற கனவுடன் பல வீரர்கள் தமது முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள்.



இவ்வாறு சிறு வயது முதல் கிரிக்கெட்டை முறையாகப் பயின்று பாடசாலை கிரிக்கெட், 19 வயதுக்குட்பட்ட அணி, வளர்ந்து வரும் அணி, A அணி மற்றும் இறுதியில் தேசிய அணி என அந்த வீரர்களின் பயணம் தொடரும். ஆனால், திறமை மாத்திரம் இருந்தால் போதாது. மாறாக அதிஷ்டமும் இருந்தால் தான் இலங்கை தேசிய அணிக்காக விளையாடுகின்ற வாய்ப்பு கிடைக்கும்.

இது இவ்வாறிருக்க, இலங்கை கிரிக்கெட் அணியில் தமிழ்பேசும் வீரர்களுக்கான இடம் சரியாக கொடுக்கப்படுவதில்லை என்ற கருத்துகள் கடந்த காலங்களில் பரவலாக பேசப்பட்டு வந்தன. குறிப்பாக, வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள தமிழ் பேசும் வீரர்களுக்கு இலங்கை கிரிக்கெட் அணியில் வாய்ப்பு கிடைப்பதென்பது மிக அரிதாகும். குறிப்பாக, இலங்கையில் உள்ள பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த வீரர்களுக்கு கிரிக்கெட்டை முறையாக கற்றுக்கொள்ள கிடைக்கின்ற அடிப்படை வசதிகள் கூட இலங்கையில் உள்ள தமிழ்பேசும் வீரர்களுக்கு கிடைப்பதும் ஓப்பிட்டளவில் குறைவு என்றே சொல்லலாம்.

இவ்வாறான குறைபாடுகள், கஷ்டங்களுக்கு மத்தியில் எமது வீரர்கள் அண்மைக்கலமாக பாடசாலை மட்ட கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக திறமைகளை வெளிப்படுத்தி இலங்கை இளையோர் அணி முதல் தேசிய கிரிக்கெட் அணி வரை இடம்பிடித்து கலக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

மடவளையைச் சேர்ந்த மொஹமட் சிராஸ் இலங்கை தேசிய அணியில் விளையாடி வருவதுடன், கொழும்பைச் சேர்ந்த ஷாருஜன் சண்முகநாதன் மற்றும் மொஹமட் சமாஸ், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயகாந்த் வியாஸ்காந்த், தீசன் விதுசன் மற்றும் மேர்பின் அபினாஷ் என பல வீரர்கள் இலங்கை இளையோர் மற்றும் உள்ளூர் கழக மட்ட கிரிக்கெட போட்டிகளில் பிரகாசிக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்த வரிசையில் அண்மையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணத் தொடருக்கான இலங்கை குழாத்தில் ஷாருஜன் சண்முகநாதனுடன், யாழ். மண்ணைச் சேர்ந்த குகதாஸ் மாதுளன் மற்றும் ரஞ்சித்குமார் நியூட்டன் ஆகிய மேலும் இரண்டு தமிழ்பேசும் வீரர்கள் இலங்கை அணியில் இடம்பிடித்து விளையாடி தங்களது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர். குறிப்பாக, இந்த 3 வீரர்களும் இலங்கை அணி அரையிறுதிப் போட்டி வரை விளையாடிய அனைத்து ஆட்டங்களிலும் விளையாடியிருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

3 வீரர்களும் இம்முறை 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணத் தொடரில் வெளிப்படுத்திய திறமைகள் மற்றும் கிரிக்கெட் வாழ்க்கையில் ஆரம்பம் குறித்த விபரங்கள்.....

### ஷாருஜன் சண்முகநாதன்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணத் தொடரில் இலங்கை அணிக்காக துடுப்பாட்டத்தில் பிரகாசித்து அனைவரது பாராட்டையும் பெற்ற வீரர் தான் ஷாருஜன் சண்முகநாதன். குட்டி சங்கா என வர்ணிக்கப்படும் இவர் இம்முறை ஆசியக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் உதவி தலைவராகச் செயல்பட்டார்.

நேபாளம் அணிக்கெதிரான முதல் போட்டியில் அரைச் சதம் கடந்து 62 ஓட்டங்களைக் குவித்த அவர், ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 2ஆவது போட்டியில் தனது முதலாவது சர்வதேச சதத்தைக் குவித்ததுடன், 102 ஓட்டங்களை எடுத்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் 4 ஓட்டங்களை மாத்திரம் குவித்த அவர், இந்தியாவுடனான அரை இறுதிப் போட்டியில் 42 ஓட்டங்களைக் குவித்து இலங்கை அணிக்கு நம்பிக்கை கொடுத்திருந்தார். இதில் நேபாளம் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியில் ஆட்டநாயகன் விருதையும் அவர் தட்டிச்சென்றார்.

இத் தொடரில் 210 ஓட்டங்களைக் குவித்து அதிக ஓட்டங்களைக் எடுத்த வீரர்களில் 4ஆவது இடத்தைப் பிடித்தார்.

2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி கொழும்பில் பிறந்த ஷாருஜன் சன்முகநாதன், கொழும்பு, மோதர பகுதியில் வசித்து வருகிறார். குடும்பத்தின் இளைய மகனான ஷாருஜன், கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியில் கல்வி கற்று வருகிறார். ஷாருஜனின் அப்பா ஒரு புகைப்பட கலைஞர் ஆவார். அவருக்கு ஒரு மூத்த சகோதரியும் உள்ளார்.

இலங்கை கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் ஷாருஜனைப் பற்றி அதிக கவனம் செலுத்தப்பட்டது 13 வருடங்களுக்கு முன் பிரபல கிரிக்கெட் வர்ணனையாளர் டோனி கிரேக் வெளியிட்ட அறிக்கையும், சமூக ஊடகங்கள் வழியாக அவரின் துடுப்பாட்ட திறன் பற்றிய காணொளிகளும் இதற்கு காரணமாகும்.

ஷாருஜன் சண்முகநாதன் என்ற வீரர் எப்படி இலங்கை இளையோர் கிரிக்கெட் அணியில் இடம்பிடித்தார். அவருடைய கிரிக்கெட் வாழ்க்கையின் ஆரம்பமே சர்வதேச அரங்கில் ஒரு பேசுபொருளாக மாறியிருந்தது. 2011ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொழும்பு SSC மைதானத்தில் நடைபெற்ற இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டியின் போது உலக பிரபல கிரிக்கெட் வர்ணனையாளர் டோனி கிரேக், SSC மைதானத்தின் புல்வெளியில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவனைப் பார்த்து 'Little Sanga" என்று அழைத்தார். இந்த சம்பவம் இற்றைக்கு 13 வருடங்களுக்கு முன்பு இடம்பெற்றது. அப்போது உலகத்திற்கே இந்தச் சிறுவனை அறிமுகப்படுத்திய டோனி கிரேக் இன்று உயிரோடு இல்லை. ஆனால் அவர் அப்போது அடையாளம் கண்டு முழு உலகத்திற்கும் அறிமுகப்படுத்திய ஷாருஜன் என்ற 'குட்டி சங்கா' இன்று நிஜமாகி இருக்கிறது.



2011 காலப்பகுதியில் ஷாருஜனின் பெயர் பிரபல்யமானதன் பிறகு அவருக்கு நிறைய அனுசரணை கிடைத்ததாம். ஆனால் அவருடைய அப்பா அதனை நிராகரித்து அவருக்கு உரிய முறையில் கிரிக்கெட்டை கற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தார். இதன் முதல் படியாக சிசிசி கிரிக்கெட் அகடமியில் இணைந்து பயிற்சிகளை மேற்கொண்டார். இதனிடையே, ஷாருஜனின் முதல் பயிற்சியாளராக சுஜீவ பிரியதர்ஷன விளங்கியதுடன், பாடசாலை பயிற்சியாளராக ஷானக பெர்னாண்டோ செயல்பட்டார்.



அதன்படி இலங்கைய கிரிக்கெட்டின் எதிர்காலத்துக்கு ஒரு புதிய நட்சத்திரமாக ஷாருஜன் சண்முகநாதன் உதயமாகியுள்ளார்.

### குகதாஸ் மாதுளன்

இம்முறை 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணத் தொடரில் விளையாடி அனைவரதும் பாராட்டைப் பெற்ற வேகப் பந்துவீச்சாளரான குகதாஸ் மாதுளன் இந்த ஆண்டு ஆரம்பத்தில் அதிகம் பேசப்பட்டுவந்த வீரர்களில் ஒருவராக மாறியிருந்தார்.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் வீரரான இவர் இந்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெற்ற யாழ். மத்தியக் கல்லூரி அணிக்கு எதிரான வடக்கின் பெரும் சமர் கிரிக்கெட் போட்டியில் பந்துவீசிய விதம் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்திருந்தது. குறிப்பாக, இலங்கையின் ஜாம்பவான் லசித் மலிங்கவின் பந்துவீச்சுப் பாணி போன்று இவருடைய பந்துவீச்சு பாணி அமைந்திருந்தமை சிறப்பம்சமாகும்.

லசித் மலிங்கவின் பந்துவீச்சு பாணியில் மாத்திரமின்றி அவருடைய வேகம், யோர்க்கர் பந்துகள் மற்றும் பௌன்ஸர்கள் என்பன எதிரணியின் துடுப்பாட்ட வீரர்களை திக்குமுக்காட வைத்தன. அதிலும் இவருடைய யோர்க்கர் பந்துக்கு துடுப்பாட்ட வீரர் தடுமாறி விழும் காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவியதுடன், லசித் மலிங்கவின் யோர்க்கர் பந்துகளையும் ஞாபகப்படுத்திச் சென்றது.

குறித்த சந்தர்ப்பத்தில் இந்தியாவில் ஐபிஎல் தொடர் ஆரம்பமாக, சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இவருடைய பந்துவீச்சு தொடர்பில் கவனம் செலுத்தி இவருக்கு அழைப்பு விடுத்தது. சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வலைப் பந்துவீச்சாளராக செயற்பட்ட மாதுளன், மீண்டும் இலங்கை திரும்பி தன்னுடைய பந்துவீச்சில் கவனம் செலுத்தி வந்தார்.

குகதாஸ் மாதுளன் நேபாளம் அணிக்கெதிரான போட்டியில் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் 32 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் 29 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்திய அவர், இந்தியாவுடனான அரையிறுதிப் போட்டியில் 3 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார். எனவே இம்முறை இளையோர் ஆசியக் கிண்ணத்தில் இலங்கை அணியின் பிரதான வேகப் பந்துவீச்சாளர்களில் ஒருவராக விளங்கிய மாதுளன், ஒட்டுமொத்தமாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

யாழ். மண்ணின் மலிங்க என்று அழைக்கப்படும் குகதாஸ் மாதுளனுக்கு பாடசாலைக் கல்விக்குப் பிறகு சிறந்ததொரு எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பது இலங்கை கிரிக்கெட்டின் முக்கிய பொறுப்பாகும்.

### ரஞ்சித்குமார் நியூட்டன்

இம்முறை 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணத் தொடரில் இலங்கை அணிக்காக விளையாடிய மற்றுமொரு தமிழ் வீரர் தான் ரஞ்சித்குமார் நியூட்டன்

யாழ்.மத்திய கல்லூரி மாணவரான ரஞ்சித்குமார் நியூட்டன், இலங்கை கனிஷ்ட கிரிக்கெட் அணியில் விளையாடும் வாய்ப்பினை குறிப்பிட்ட பாடசாலையில் இருந்து பெற்ற மூன்றாவது வீரர். இதற்கு முன் சுழல் பந்துவீச்சாளர் விஜயகாந்த் வியாஸ்காந்த் மற்றும் வேகப் பந்துவீச்சு சகலதுறை வீரரான செல்வராஜா மதுசன் ஆகிய இருவரும் இலங்கை இளையோர் அணிக்காக விளையாடிய வீரர்கள் ஆவர்.

இதனிடையே, நியூட்டனின் தந்தை ஒரு முச்சக்கரவண்டி சாரதியாக தொழில் செய்கிறார். எனவே, ஒரு வறிய குடும்பமொன்றில் இருந்து வந்து தனது கிரிக்கெட் பயணத்தினை 11ஆவது வயதில் இருந்து ஆரம்பித்த நியூட்டன், யாழ். மத்திய கல்லூரியின் அப்போதைய பயிற்சியாளராக செயல்பட்ட சுரேஷ் மோகனிடம் ஆரம்ப பயிற்சிகளைப் பெற்றதோடு, கடந்த ஐந்து வருடங்களாக யாழ். மத்திய கல்லூரியின் பாடசாலைப் பயிற்சியாளாக பணியாற்றி வருகின்ற ஷெல்டன் குலேந்திரன் ஊடாக தன்னை வளப்படுத்திக் கொண்டார்.

புதிய பந்தினை லாவகமாக swing செய்யும் ஆற்றல் கொண்டுள்ள இடது கை வேகப் பந்துவீச்சாளரான நியூட்டன், இலங்கை 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணியில் பந்துவீச்சாளராக ஆடுகின்ற போதிலும், அவர் பாடசாலை மட்ட கிரிக்கெட் போட்டிகளில் சகல துறைவீரராகவே தனது கிரிக்கெட் பயணத்தினை முன்னெடுத்திருந்தார்.



இந்த நிலையில், இம்முறை 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணத் தொடரில் இலங்கை அணிக்காக அனைத்துப் போட்டிக ளிலும் ஆடிய நியூட்டன், சிறந்த பந்துவீச்சு பிரகாசிப்புக்களை வெளிப்படுத் தியிருந்தார். இதில் நேபாளம் அணிக்கெ திரான போட்டியில் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் விக்கெட்டின்றி 23 ஓட்டங்களையும் விட்டுக்கொடுத்த அவர், இந்தியாவுடனான அரையிறுதிப் போட்டியில் ஒரு ஓவர் மாத்திரம் பந்துவீசி 10 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார்.

எனவே, இலங்கை 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணியில் நியூட்டனுக்கு இந்த வருடம் இறுதி ஆண்டு என்பதால் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த பிறகு கிரிக்கெட் கழகமொன்றில் இணைந்து தனது கிரிக்கெட் பயணத்தை தொடர வேண்டும்.

இலங்கை கிரிக்கெட்டில் தமிழ்பேசும் வீரர்களின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருப்பது மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அதேபோல, அவர்களுக்கு தொடர்ந்து தேசிய அணியிலும் வாய்ப்பு கொடுக்க இலங்கை கிரிக்கெட் முகாமைத்துவமும், தேர்வாளர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தான் தமிழ் கிரிக்கெட் இரசிகர்களாகிய எமது எதிர்பார்ப்பும், பிரார்த்தனையுமாகும்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

ஒருவன்
ஆண்டு : 01 இதழ் : 10 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (15.12.2024)

# அரசு நம்மை கண்டுகொள்ளாதது ஏன்?

## முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் விசனம்



## தேசிய முச்சக்கர வண்டிகள் சங்கத்தின் செயலாளர் கருத்து பகிர்கின்றார்



வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளுடன், இலங்கையில் முச்சக்கர வண்டிகள் இறக்குமதி செய்வது இன்னமும் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் இத்தொழில் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்து தேசிய முச்சக்கர வண்டிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செயலாளர் எல். ரோஹன பெரேரா கவலை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது:

இந்த முச்சக்கரவண்டித் தொழிலானது சுமார் 50 இலட்சம் பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை

### முச்சக்கர வண்டி செலுத்தும் நாம் அரசுக்கும் சமுதாயத்துக்கும் சுமை இல்லாமல் வாழ்பவர்கள்!

வாய்ப்புகளை வழங்குவதால் அரசாங்கத்தின் சுமையை அது பாரியளவில் குறைக்கின்றது என கூறமுடியும். நமது தொழில் பற்றி சரிவர சிந்தித்தால் அரசுக்கும், சமுதாயத்துக்கும் சுமை இல்லாமல் வாழ்பவர்களே இந்தத் தொழிலில் உள்ளனர் என்பதை அனைவரும் புரிந்துகொள்வார்கள். வாடகை வண்டியாக மட்டுமின்றி, சுயதொழில், சிறு தொழில்களுக்கு (தேயிலை, பால் பண்ணை, நெல், காய்கறி விவசாயம்) போக்குவரத்து வசதிகளை வழங்குவதிலும் முச்சக்கரவண்டி இன்று மக்களிடையே மிகவும் மலிவு விலையுடனான போக்குவரத்து சாதனமாக மாறியுள்ளது. மேலும், முச்சக்கர வண்டியானது எரிபொருள் சிக்கனத்தைப் பொறுத்தமட்டில் மிகவும் சிக்கனமாக இருப்பதால், நாட்டில் அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் இருக்கின்ற போதிலும் முச்சக்கர வண்டியின் மூலம் நாட்டின் எரிபொருள் கட்டணத்தைச் சேமிக்கவும் முடியும்.

முச்சக்கரவண்டிகளை ஒழுங்குபடுத்துவது அவசியம் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம். மேலும், ஒவ்வொரு முறையும் ஒழுங்குமுறைக்கான விதிகள் தயாரிக்கப்படும்போது, நாங்கள் எங்கள் ஆதரவை வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். இது தொடர்பான ஏற்பாடுகள் கடந்த மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்டன, ஆனால், மேல் மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபை தற்போது மிகவும் மந்த



கெதியிலேயே செயற்படுகின்றது. மேல் மாகாணத்தில் 3,54,000 முச்சக்கர வண்டிகள் உள்ளன, எனினும், இதில் 300க்கும் குறைவான முச்சக்கர வாகனங்களையே அவர்கள் பதிவு செய்துள்ளனர்.

எல்லாத் துறைகளையும் போலவே, எங்கள் தொழில்துறையும் கொவிட்-19 தொற்றின் போது பெரிதும் பாதிக்கப்பட்டது. நோயின் ஆரம்ப காலத்தில், நாங்கள் மிகவும் கடினமான சூழ்நிலையில் இருந்தோம், ஆனால், பின்னர் கொவிட் காலத்தில் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில், நாங்கள் ஒரு சிறந்த சேவையை வழங்கினோம். இதன் மூலம் அரசாங்கத்திற்கு முச்சக்கர வண்டிகள் குறிப்பிடத்தக்க ஆதரவை வழங்கின. ஆனால், காலப்போக்கில் வாகன இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால், மீண்டும் சிக்கலில் சிக்கினோம். எவ்வாறாயினும், உதிரிப் பாகங்களை இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பம் எமக்கு வழங்கப்பட்ட போதிலும், இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு கிட்டத்தட்ட 5 வருடங்கள் கடந்துள்ள போதிலும், பெற்றோலில் இயங்கும் முச்சக்கரவண்டியை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பம் இதுவரை வழங்கப்படவில்லை. இது நமது தொழிலுக்கு பெரும் பாதிப்பாக அமைந்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதையடுத்து இலங்கைக்கு முச்சக்கர வண்டிகள் இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டது. அதன்படி, தற்போது நாட்டில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் சுமார் 05 வருடங்கள் பழமையானவை. பொதுவாக 05 வருடங்களுக்குள் வாகனத்தை நாம் மாற்றுவதுண்டு. ஆனால், தற்போது புதிய வாகனங்களை வாங்குவதற்கு சந்தையில் வாகனங்கள் இல்லாததால், வாகனங்களை புதிதாக மாற்ற முடியவில்லை. இது ஒருவகையில் எமது முச்சக்கர வண்டிகளில் பயணிக்கும் பயணிகளுக்கு அநீதியை ஏற்படுத்துகின்றது. மேலும்,

வாகனம் பழையதாகி விடுவதால், பழுது ஏற்படுகின்றது, எரிபொருள் நுகர்வு அதிகரிக்கின்றது, வாயு உமிழ்வும் அதிகரிக்கின்றது. இதன் மூலம் அரசுக்கு லாபம் அல்ல, நஷ்டமே ஏற்படுகின்றது. அத்துடன், 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் முச்சக்கர வண்டிகள் தடைசெய்யப்படும் எனவும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல், அண்மையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கென அனுமதிக்கப்பட்ட ஆவணத்தில் முச்சக்கரவண்டி இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும், இலங்கையில் உள்ளூர் பெறுமதியை அதிகரித்து வாகனங்களை உற்பத்தி செய்வதற்காக கைத்தொழில் அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையான செயற்பாட்டு நடைமுறையில் பெற்றோல் முச்சக்கரவண்டி இணைக்கப்படவில்லை.

### கிட்டத்தட்ட 50 லட்சம் பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்தத்துறை வேலை வாய்ப்புகளை வழங்குகின்றது...

50 இலட்சம் பேர் வாழ்வாதாரத்தை கொண்டுள்ள பெற்றோல் முச்சக்கரவண்டி இங்கு மறக்கப்பட்டுள்ளது. எனவேதான், இலங்கையில் கைத்தொழில் அமைச்சினால் உற்பத்தி செய்யப்படும் மூலப்பொருட்களை பயன்படுத்தி இலங்கையிலேயே முச்சக்கரவண்டி பாகங்களைப் பொருத்துகின்ற நிலையான செயற்பாட்டில் பெற்றோலில் இயங்கக்கூடிய முச்சக்கர வண்டிகளையும் உள்வாங்குமாறு அரசாங்கத்திடம் கோருகின்றோம். எங்களை ஏன் இப்படி நடத்துகின்றீர்கள்? நாமும் வாழ வேண்டாமா? இந்த நிலை தொடருமானால் 50 இலட்சம் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் பெரும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியேற்படும். எனவே, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் நாம் ஏற்கனவே பேச்சுவார்த்தைக்கு நேரம் கேட்டுள்ளோம். கூடிய விரைவில் அதற்கான வாய்ப்பை பெறுவோம் என நம்புகின்றோம்.

எவ்வாறாயினும், 50 இலட்சம் பேர் நேரடியாகவும் மறைமுகமாகவும் தங்கியுள்ள இந்த முச்சக்கர வண்டித் தொழிலைப் பாதுகாக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். முச்சக்கர வண்டி மூலம் மிகவும் பாதுகாப்பான, எளிதான மற்றும் விரைவான பாதுகாப்பான பயணிகள் போக்குவரத்தை நாங்கள் ஏற்கனவே உறுதிப் படுத்தியுள்ளோம். எனவே, இந்த வசதிகளை இந்நாட்டு மக்களுக்கு வழங்குவதன் மூலம் போக்குவரத்துச் சேவையை மேலும் வினைத்திறன்மிக்கதாக வழங்குவதற்கு எமது கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனம் செலுத்தப்படும் என நம்புகின்றோம்.

# பாடசாலை பயிற்சிப் புத்தக விற்பனை மோசடி: கட்டுப்பாடற்ற விலையினால் மக்கள் பாதிப்பு!



பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களால் வியாபாரிகளுக்கு வழங்கப்படுகின்ற அதிக தள்ளுபடி காரணமாக பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட நுகர்வோர் பெரிதும் சுரண்டப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தையில் பல்வேறு பெயர்களைக் கொண்ட நிறுவனங்கள் நாடு முழுவதும் உள்ள சில்லறை விற்பனையாளர்களை தமது வலையில் சிக்க வைக்கும் நோக்கில் இந்த மோசடி வர்த்தக உபாயத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் மக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறான ஏகபோக நிலையில் பயிற்சிப் புத்தகங்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவலநிலையினால் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் பெரிதும் அசௌகரியத்திற்கு உள்ளாவதாகவும், இந்த அதீத பணம் சம்பாதிக்கும் மாஃபியாவினால் பிள்ளைகளின் கல்வியும் அடியோடு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. ஏகபோக நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் பயிற்சிப் புத்தகங்களுக்கு, குறிப்பிடப்பட்ட மதிப்பில் நாற்பது சதவிகிதம் மற்றும் அதற்கும் அதிகமான தள்ளுபடிகள் சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்த அதிக தள்ளுபடிகள் காரணமாக, சில்லறை விற்பனையாளர்கள் குறித்த நிறுவனங்களால் விநியோகிக்கப்படும் பயிற்சி புத்தகங்கள் உட்பட பாடசாலை உபகரணங்களை மட்டுமே விற்பனை செய்ய ஆர்வம் காட்டுகின்றனர். பயிற்சி புத்தகங்களை சலுகை விலையில்



விற்பனை செய்வதை தவிர்த்து, வியாபாரிகள் தமக்கு மட்டுமே அதிக லாபம் தரும் நிறுவனங்களின் பயிற்சி புத்தகங்களை விற்பனை செய்வது வருத்தமளிப்பதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பயிற்சிப் புத்தகங்கள், கற்றல் உபகரணங்கள் விடயத்தில் அரசு மிகுந்த அக்கறையுடன் செயல்பட வேண்டும், தனியார் வர்த்தகர்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால், அரச அச்சகத்துறையே பயிற்சிப் புத்தகங்களைத் தயாரித்து சலுகைகளை வழங்கும் விதமாக

நாடு முழுவதிலும் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களிலும் நியாயமான விலையில் கொள்வனவு செய்யக்கூடிய சந்தை அமைப்பை ஏற்படுத்துமாறும் மக்கள் கோரிவருகின்றனர்.

சந்தை போட்டித்தன்மையுடன் பொருந்தக்கூடிய சிறந்த தரத்தில் அரசாங்க அச்சகத்தினால் கவரக்கூடிய வகையில் பயிற்சிப் புத்தகங்கள் அச்சிடப்பட்டு நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டால் பாடசாலை மாணவர்கள், உள்ளிட்ட நுகர்வோருக்கு பெருமளவு நிவாரணம் கிடைப்பதுடன் அரசாங்கத்திற்கும் பெருமளவு வருமானம் கிடைக்குமென சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த பயிற்சி புத்தக மாஃபியா குறித்து நுகர்வோர் அதிகாரசபை தலைவர் தெரிவித்துள்ள கருத்தின்படி, உற்பத்தி நிறுவனங்கள் வியாபாரிகளுக்கு அளிக்கின்ற வரம்பற்ற தள்ளுபடி விடயத்தில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாதுள்ளது எனவும், இது தற்போதைய பொருளாதாரத்தின் விளைவு எனவும் குறிப்பிட்டுள்ளார். எனவே, அரசாங்கம் இவற்றை கட்டுக்குப்படுத்துவதாயின் இதற்கென சட்ட ஒழுங்குபடுத்தல்களை உருவாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சிரியாவில் நடந்தது என்ன?



பாலகணேஷ்
டிலூக்ஷா

சிரியா நாட்டின் ஆட்சியை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியதையடுத்து அந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்து வந்த அஸாத் குடும்பத்தின் 50 ஆண்டுகால ஆட்சி முடிவிற்கு வந்துள்ளமை இன்று உலக அரசியல் களத்தில் பரபரப்பாக பேசப்படும் விடயமாக அமைந்துள்ளது.

கிளர்ச்சியாளர்கள் கடந்த 8 ஆம் திகதியன்று சிரியா டமாஸ்கஸ் நகரிற்குள் நுழைந்ததையடுத்து ஜனாதிபதி பஷர் அல் அஸாத் நாட்டிலிருந்து விமானம் மூலமாக ரஷ்யாவிற்கு தப்பிச் சென்றுள்ளதாக செய்திகள் வெளியாகின.

இதனைத் தொடர்ந்து தாம் டமஸ்கஸ் நகரை கைப்பற்றியதாக கிளர்ச்சியாளர்கள் அறிவித்ததுடன்,தலைநகரிலிருந்து அரச படைகள் வெளியேறியமையால் பஷர் அல் அஸாத்தின் 24 வருட கால ஆட்சி முடிவிற்கு வந்தது.

முன்னதாக, கடந்த நொவம்பர் மாதம் 27 ஆம் திகதி சிரியாவின் இரண்டாவது மிகப்பெரிய நகரமான அலெப்போவிலிருந்து அரச படைகள் வெளியேறியமையால் அந்த நகரை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியிருந்தனர். தொடர்ந்து டிசம்பர் 5 ஆம் திகதி ஹோமா நகரையும் , மறுநாள் 6 ஆம் திகதி சிரியாவின் மூன்றாவது பெரிய நகரமான ஹாம்ஸ் நகரையும் கைப்பற்றினர். இப்படியே ஒரு வார காலத்துள் தலைநகர் டமஸ்கஸ் கிளர்ச்சியாளர்களின் வசமாகியது.

## ஆரம்ப காலம்

பதவி நீக்கம் செய்யப்பட்ட சிரிய ஜனாதிபதி பஷர் அல்-அஸாத், 1965 ஆம் ஆண்டு, ஹபீஸ் அல்-அஸாத், அனிசா மக்லூஃப் ஆகிய தம்பதியினருக்கு பிறந்தவர் ஆவார். அப்போது சிரியா, மத்திய கிழக்கு மற்றும் ஏனைய பிராந்தியங்களில் பதற்றமான சூழல் நிலவி வந்த காலம் அது.

அஸாத்தின் குடும்பத்தினர் அலாவைட் எனப்படும் சிரியாவை சேர்ந்த ஒரு பின்தங்கிய பிரிவைச் சேர்ந்தவர்கள். இந்த பிரிவைச் சேர்ந்த பலர் பொருளாதார நெருக்கடி காரணமாக அந்நாட்டின் இராணுவத்தில் சேர்ந்தனர். அப்போது ஹபீஸ் அல் அஸாத் ஒரு இராணுவ அதிகாரியாகவும், பாத் கட்சியின் தீவிர ஆதரவாளராகவும் திகழ்ந்தார். பின்னர் இவர் 1966ஆம் ஆண்டு சிரியாவின் பாதுகாப்பு அமைச்சரானார்.

தனது அதிகாரத்தைப் பலப்படுத்தி 1971 ஆம் ஆண்டு ஹபீஸ் அல் அஸாத் சிரியாவின் ஜனாதிபதியானார். 2000 ஆம் ஆண்டு, இறக்கும் வரை அவரே ஜனாதிபதியாக பதவி வகித்தார். 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம், பஷரின் மூத்த சகோதரரான பஷல் அல்-அஸாத் உயிரிழந்ததன் பின்னர் பஷர் அல் அஸாத் வாழ்க்கை முற்றிலும் வேறு பாதைக்கு மாறியது. அஸாத் அரசியல் மற்றும் இராணுவத்தில் இருந்து வேறுபட்ட பாதையைத் தேர்வு செய்த நிலையில் விதி அரசியலுக்குள் பிரவேசிக்க வித்திட்டது.

அவர் மருத்துவராகப் பணியாற்ற தீர்மானித்து டமாஸ்கஸ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற பின்னர், 1992ஆம் ஆண்டு, லண்டனில் உள்ள வெஸ்டர்ன் ஐ மருத்துவமனையில் கண் மருத்துவத்துறையில் நிபுணத்துவம் பெற பிரித்தானியா சென்றார். பின்னர் சிரியாவின் அடுத்த தலைவராக அவரைத் தயார் படுத்துவதற்காக அவர் லண்டனில் இருந்து வரவழைக்கப்பட்டார்.

பஷர் அல்-அஸாத்தின் தந்தை ஹஃபீஸ் அல்-அஸாத் 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உயிரிழந்ததன் பின்னர் 34 வயதான பஷார் சிரியாவின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். இதற்காக சிரிய அரசியலமைப்பில் ஜனாதிபதியாவதற்கான குறைந்தபட்ச வயது எல்லை 40 இல் இருந்து குறைக்கப்பட்டது.

அவர் ”வெளிப்படைத்தன்மை, ஜனநாயகம், வளர்ச்சி, நவீன மயமாக்கல், பொறுப்புக் கூறல் மற்றும் அரசு சார்ந்த சிந்தனை” போன்றவை தொடர்பில் கருத்து தெரிவித்ததுடன் ஆரம்பத்தில் அரசியல் சீர்திருத்தம் மற்றும் ஊடக சுதந்திரம் பற்றிய பஷரின் சொல்லாட்சி சிரிய மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியது. அவரது தலைமை மாற்றத்துக்கான புதிய சகாப்தத்தையும் ஏற்படுத்தியது.

சிரியாவில் சில காலம் சிவில் விவாதம் மற்றும் ”டமாஸ்கஸ் ஸ்பிரிங்” எனப்படும் கருத்து சுதந்திரத்தைப் பற்றிய விவாதங்களும் இடம்பெற்றன. ஆனால் 2001ஆம் ஆண்டின் போது, பாதுகாப்புப் படையினர் மீண்டும் தங்களது ஒடுக்குமுறையை ஆரம்பித்து, அரசுக்கு எதிராகக் குரல் எழுப்புபவர்களைக் கைது செய்தனர்.

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற ஆரம்பத்தில் தனியார் துறை வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் வரையறுக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களை பஷர் அறிமுகப்படுத்தினார். 2003 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஈராக் போரால், பஷர் மற்றும் மேற்கத்திய அரசுகளுக்கு இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டது.

ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான படையெடுப்பை சிரியா ஜனாதிபதி எதிர்த்தார். 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஈராக் தொடர்பான நடவடிக்கைகள், லெபனானில் சிரியாவின் இருப்பு போன்ற பல்வேறு காரணங்களுக்காக அமெரிக்கா, சிரியா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது.

பின்னர் 2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில்,சிரியாவின் முக்கிய எதிரிகளில் ஒருவரான முன்னாள் லெபனான் பிரதமர் ரஃபிக் ஹரிரி பெய்ரூட்டில் ஒரு மிகப்பெரிய வெடிப்பு சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்டார். இதற்கு சிரியா மற்றும் அதன் நட்பு நாடுகள்தான் காரணம் என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

சிரியா மீது சர்வதேச அளவில் அழுத்தங்கள் எழுந்தன. இதனால் லெபனானில் சுமார் 30 ஆண்டுக்கால ஆக்கிரமிப்பிற்குப் பின்னர் சிரியா வெளியேறியது. அஸாத் மற்றும் லெபனானில் அவரது முக்கியக் கூட்டாளியான ஹிஸ்புல்லா ஆகியோருக்கு 2020 ஆம் ஆண்டு சர்வதேச நீதிமன்றம் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்த போதிலும், ஹரிரியின் படுகொலையில் தங்களுக்குத் தொடர்பு இல்லை என்று இவர்கள் தொடர்ந்து மறுப்பு தெரிவித்து வந்தனர்.



பஷரின் ஆட்சியின் முதல் பத்தாண்டுகளில் ஈரானுடனான சிரியாவின் உறவு வலுவடைந்ததுடன் கத்தார், துருக்கி ஆகிய இரு நாடுகளுடனும் சிரியா உறவுகளை வலுப்படுத்தத் தொடங்கியது. வெளியுறவுக் கொள்கையில் தனது தந்தையின் வழியையே பின்பற்றிய அவர் நேரடி இராணுவ மோதல்களைத் தவிர்த்தார்.

இவ்வாறிருக்க துனிசியாவை சேர்ந்த காய்கறி வியாபாரியான முகமது பௌசிஸி ஒரு பெண் காவலர் தன்னை அறைந்ததால் தீக்குளித்தார். இது துனிசியாவில் மக்கள் மத்தியில் ஒரு கடும் எதிர்ப்பைத் தூண்டியது, இதனால் அந்நாட்டின் ஜனாதிபதி ஜைன் எல் அபிடின் பென் அலியின் ஆட்சி கவிழ்ந்தது. இந்த எழுச்சி காரணமாக எகிப்து, லிபியா, ஏமன், பஹ்ரைன், சிரியா போன்ற அரபு உலக நாடுகள் முழுவதும் புரட்சிகர இயக்கங்கள் தோன்றின.

சிரியா ஜனாதிபதி பஷர் அல் அஸாத்துக்கு எதிரான அமைதியான கிளர்ச்சி, 2011 ஆம் ஆண்டு முழு அளவிலான உள்நாட்டுப் போராக உருவெடுத்தது. இதன் காரணமாக, சுமார் ஐந்து லட்சம் மக்கள் உயிரிழந்துள்ளனர். இதற்குப் பிறகு, சிரிய மக்களிடம் உரையாற்றுவதற்கு அஸாத் இரண்டு வாரங்கள் காத்திருந்தார். நாடாளுமன்றத்தில், சிரியாவை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் ”சதி” திட்டங்களை முறியடிப்பதாக உறுதியளித்தார், மேலும் பல்வேறு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையும் ஒப்புக் கொண்டார்.

தாராவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படைகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால், ஆர்ப்பாட்டம் அதிகரித்து, சிரியாவின் பல்வேறு நகரங்களில் பஷர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தினர். சில மாதங்களுக்குள், சிரியா முழுவதும் அரசாங்கத்திற்கும் ஆயுதமேந்திய கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே மோதல்கள் வன்முறையாக வெடித்தன.

**சிரியா ஜனாதிபதி பஷர் அல் அஸாத்துக்கு எதிரான அமைதியான கிளர்ச்சி, 2011 ஆம் ஆண்டு முழு அளவிலான உள்நாட்டுப் போராக உருவெடுத் தது. இதன் காரணமாக, சுமார் ஐந்து லட்சம் மக்கள் உயிரிழந் துள்ளனர்...**

சிரியாவில் ஆட்சிக் கவிழ்ப்பு ஒருபுறம் இருக்க இஸ்ரேலிய படைகள் சிரிய கோலன் குன்றுகளுக்குள் சென்று, தங்கள் ஆக்கிரமிப்பை திறம்பட விரிவுபடுத்துவதால், இஸ்ரேலின் விமானப்படை சிரியாவைத் தாக்கி, லடாக்கியா மற்றும் டார்டஸில் உள்ள துறைமுகங்கள் மற்றும் ஏவுகணைக் கிடங்குகள் மீது தாக்குதல்களை நடத்தியது.

வடக்கு லடாக்கியாவில் உள்ள கர்தாஹா நகரில் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி பஷரின் தந்தை ஹபீஸ் அல்-அஸாத்தின் கல்லறையை சிரிய போராளிகள் எரித்தனர். அல்-அஸாத்தை வெளியேற்றிய கிளர்ச்சிப் படைகளின் தலைவரான அஹ்மத் அல்-ஷாரா, முன்னாள் ஆட்சியின் மோசமான சிறைச்சாலைகளை மூடுவதற்கும், சர்வதேச பங்காளர்களின் உதவியுடன் இரசாயன ஆயுத தளங்களை பாதுகாப்பதாவும் உறுதியளித்துள்ளார். சிரியாவின் இடைக்கால பிரதமர் முகமது அல்-பஷீர், “வெளிநாட்டில் உள்ள மில்லியன் கணக்கான சிரிய அகதிகளை மீண்டும் கொண்டு வருவதே” தனது முதல் குறிக்கோள் என தெரிவித்துள்ளார்.

### கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு என்ன காரணம்?

பல ஆண்டுகளாக, சிரிய அரசாங்கப் படைகள் கட்டுப்பாட்டை மீட்டெடுக்க முயன்றதால், இட்லிப் போர்க்களமாகவே காணப்பட்டது. ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் மற்றும் அதன் ஆதரவுக் குழுக்கள் நவம்பர் 27ஆம் திகதியன்று ஆக்கிரமிப்பைத் தடுக்க தாக்குதலொன்றை மேற்கொண்டனர். அரசாங்கமும், அதன் நட்பு நாடான ஈரான் ஆதரவு ஆயுதப் படைகளும் வடமேற்கில் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை அதிகரித்து வருவதாகக் குற்றம் சுமத்தினர். ஆனால், பல வருடகால யுத்தம், பொருளாதாரத் தடைகள் மற்றும் ஊழல் உள்ளிட்ட காரணங்களால் அரசாங்கம் பலவீனமடைந்தது. அதன் ஆதரவாளர்கள் ஏனைய மோதல்களில் ஈடுபட்டிருந்த நேரத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

ஈரான் ஆதரவு பெற்ற லெபனான் குழுவான ஹிஸ்புல்லா அமைப்பு, போரின் ஆரம்ப ஆண்டுகளில் கிளர்ச்சியாளர்களை பின்தள்ளுவதில் முக்கியப் பங்கு வகித்தது. ஆனால், அண்மையில் லெபனானில் இஸ்ரேலின் தாக்குதலால் ஹிஸ்புல்லா பாதிக்கப்பட்டது. இஸ்ரேலிய தாக்குதல்கள் சிரியாவில் ஈரானிய இராணுவ தளபதிகளை அகற்றியது மாத்திரமின்றி அங்குள்ள அரசாங்க சார்பு ஆயுதக்குழுவினரின் விநியோக வழிகளைச் சிதைத்தது. யுக்ரேனில் நடந்த போரால் ரஷ்யாவும் திசைதிருப்பப்பட்டது. அவர்கள் இல்லாமல், பஷரின் படைகள் பலவீனமடைந்தன.

**இஸ்ரேலிய தாக்குதல்கள் சிரியாவில் ஈரானிய ஈராணுவ தளபதிகளை அகற்றியது மாத் திரமின்றி அங்குள்ள அரசாங்க சார்பு ஆயுதக்குழுவினரின் விநியோக வழிகளைச் சிதைத்தது. யுக்ரேனில் நடந்த போரால் ரஷ்யாவும் திசைதிருப் பப்பட்டது. அவர்கள் இல்லாமல், பஷரின் படைகள் பலவீன மடைந்தன...**

### கொடுங்கோல் ஆட்சியாளர் அஸாத் தப்பியோட்டம்

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போவின் பெரும் பகுதியை ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் தலைமையிலான கிளர்ச்சியாளர்கள் நவம்பர் 30 ஆம் திகதியன்று கைப்பற்றினர். அரசாங்கம் தனது துருப்புகள் மற்றும் பாதுகாப்புப் படைகளை விரைவாகத் திரும்பப் பெற்ற பின்னர் சிறியளவிலான எதிர்ப்பை மாத்திரமே எதிர்கொண்டதாக அவர்கள் கூறினர்.

பஷர் தனது ஆதரவாளர்களின் உதவியுடன் கிளர்ச்சியாளர்களை இல்லாதொழிக்க சபதம் செய்தார். ரஷ்ய போர் விமானங்கள் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தங்கள் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தின. ஈரான் ஆதரவு ஆயுதக்குழுவினர் அலெப் போ-டமாஸ்கஸ் நெடுஞ்சாலையில் தெற்கே உள்ள அடுத்த நகரமான ஹமாவை சுற்றி இராணுவத்தின் தற்காப்புக் கோடுகளை வலுப்படுத்த படைகளை அனுப்பியது. ஆனாலும் ஹமா வியாழக்கிழமை அன்று கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் வந்தது.

சிரியாவின் மூன்றாவது பெரிய நகரமான ஹோம்ஸை இலக்கு வைத்து சனிக்கிழமை இரவு அதனையும் தங்கள் வசம் கொண்டு வந்தனர்.இதேவேளை, சிரியாவின் தென்மேற்கில், ஜோர்டான் எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் ஏனைய கிளர்ச்சிப் பிரிவுகள், 24 மணிநேரத்திற்குள் டெரா, சுவைடா நகரங்களைக் கைப்பற்றினர். இதனைத்தொடர்ந்து, டமாஸ்கஸின் புறநகர்ப் பகுதிகளை அவர்கள் அடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (08 ஆம் திகதி) அதிகாலையில், கிளர்ச்சியாளர்கள் டமாஸ்கஸ்"க்குள் நுழைந்து, நாட்டின் மிகவும் மோசமான இராணுவ சிறை என்று கூறப்படும் சைட்னாயாவில் இருந்த கைதிகளை விடுவித்ததாக அறிவித்தனர். இரண்டு மணிநேரத்திற்குள், “கொடுங்கோல் ஆட்சியாளர் அசத் தப்பி ஓடிவிட்டார்” என அவர்கள் அறிவித்தனர்.

சிரியாவில் அரசியல் நசிரியாவில் 13 ஆண்டு கால உள்நாட்டுப் போருக்குப் பின்னர், பஷர் அல்-அஸாத்தை ஆட்சியில் இருந்து அகற்றியதில் அபு முகமது அல்-ஜொலானியின் பங்கு முக்கியமானது. ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாமின் என்ற கிளர்ச்சி குழுவின் தலைவர்தான் ஜொலானி. இவர் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன. அண்மைய ஆண்டுகளில், அவர் மிதவாதியாக நடந்து கொள்வதைப்போல் ஒரு தோற்றத்தை உலகிற்கு வழங்க முயற்சிக்கிறார். இருப்பினும், அமெரிக்கா அவரைப் பிடித்துக் கொடுப்பவருக்கு 10 மில்லியன் டாலர் வெகுமதியை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. அவரது உண்மையான பெயர் மற்றும் வயது குறித்து சர்ச்சை உள்ளது. கோலன் பகுதியில் இருந்து வந்த ஒரு சிரியா குடும்பத்தைச் சேர்ந்தவர் என கூறப்படுகிறது.

ஈராக்கில் 2003-ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையிலான படைகளின் கூட்டுப் படையெடுப்பிற்குப் பிறகு, அல்-கொய்தா ஜிஹாதி குழுவில் அல்-ஜொலானி இணைந்ததாகக் கருதப்படுகிறது. இந்த கூட்டுப்படை ஜனாதிபதி சதாம் /ஹசைனையும் அவரது பாத் கட்சியையும் அதிகாரத்தில் இருந்து விரைவில் அகற்றியது. அதன் விளைவாக பல்வேறு ஆயுதக் குழுக்களின் ஒருங்கிணைந்த எதிர்ப்பை எதிர்கொண்டது. 2010 ஆம் ஆண்டில், அபு முகமது அல்-ஜொலானி ஈராக்கில் அமெரிக்கப் படைகளால் கைது செய்யப்பட்டு குவைத் எல்லைஅங்கு அவர் இருந்த காலத்தில், இஸ்லாமிய அரசு என தங்களை தாங்களே அழைத்துக்கொள்ளும் குழுவை உருவாக்கிய பிற ஜிஹாதிகளை சந்தித்தார். எதிர்காலத்தில் ஈராக் ஐஎஸ் குழு தலைவராக மாறிய அபு பக்கர் அல்-பாக்தாதி உட்பட பலரையும் அவர் புக்கா முகாமில் சந்தித்தார்.

2011 ஆம் ஆண்டில் பஷர் அல்-அஸாத்தின் ஆட்சிக்கு எதிராக ஆயுத மோதல் வெடித்ததை அடுத்து, அந்த நாட்டுக்குச் சென்று அமைப்பின் ஒரு பிரிவைத் தொடங்க, தன்னை அல்-பாக்தாதி அனுப்பியதாக அல்-ஜொலானி ஊடகங்களுக்கு தெரிவித்தார். “நுஸ்ரா முன்னணி“ (அல்லது ஜபத் அல்-நுஸ்ரா) என்ற ஆயுதக் குழுவின் படைத்த தலைவரானார், அல்-ஜொலானி. இக்குழு ஐஎஸ் குழுவுடன் ரகசிய தொடர்பை கொண்டது . போர்க்களத்தில் பல வெற்றிகளையும் பெற்றது.

மிகவும் மோசமான செட்னயா சிறை, 1980 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் தலைநகர் டமாஸ்கஸ்"க்கு வடக்கே 30 கி.மீ (19 மைல்) தொலைவில் உள்ள ஒரு சிறிய நகரத்தில் நிறுவப்பட்டது. அஸாத் குடும்பம் பல ஆண்டுகளாகத் தங்கள் ஆட்சியை எதிர்ப்பவர்களை இங்கே அடைத்து வைத்திருக்கிறது.

மனித உரிமைக் குழுக்களால் “மனிதப் படுகொலை கூடம்” என்று இச்சிறை குறிப்பிடப்படுகிறது. 2011ஆம் ஆண்டில் சிரிய உள்நாட்டுப் போர் தொடங்கியதில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்து தூக்கிலிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

“செட்னயா” மிகவும் இரகசிய இடமாக உள்ளது. சிறைச்சாலையின் உள்ளே எப்படி இருக்கும் என்று இதுவரை யாரும் பார்த்ததில்லை. சிரியாவில் பஷர் அல் அஸாத்தின் ஆட்சி கவிழ்ப்புக்குப் பின்னர் மத்திய கிழக்கில் மிகவும் மோசமான இந்த “செட்னயா” சிறையில் தங்களது உறவினர்களை மக்கள் தேடிவருகின்றனர்.

## யார் இந்த பஷர் அல்-அஸாத்?



பதவி நீக்கம் செய்யப்பட்ட சிரிய ஜனாதிபதி பஷர் அல்-அஸாத் 1965 ஆம் ஆண்டு ஹபீஸ் அல்-அஸாத், அனிசா மக்லூஃப் ஆகியோருக்குப் பிறந்தவராவார். அப்போது பஷாரின் தந்தை ஹபீஸ் அல் அஸாத் ஒரு இராணுவ அதிகாரியாகவும், பாத் கட்சியின் தீவிர ஆதரவாளராகவும் திகழ்ந்தார். இதன் காரணமாக அவர் 1966 ஆம் ஆண்டு சிரியாவின் பாதுகாப்பு அமைச்சரானார். இதன்படி 1971 ஆம் ஆண்டு ஹபீஸ் அல் அஸாத் சிரியாவின் ஜனாதிபதியானார். 2000 ஆம் ஆண்டு தொடக்கம் இறக்கும் வரை அவரே ஜனாதிபதியாக பதவி வகித்தார்.

1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், பஷரின் மூத்த சகோதரரான பஷல் அல்-அஸாத் உயிரிழந்ததன் பின்னர் பஷர் அல் அஸாத் வாழ்க்கை முற்றிலும் வேறு பாதைக்கு மாறியது. அவர் மருத்துவராகப் பணியாற்ற தீர்மானித்து டமாஸ்கஸ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற பின்னர், 1992ஆம் ஆண்டு, லண்டனில் உள்ள “வெஸ்டர்ன் ஐ“ மருத்துவமனையில் கண் மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற பிரித்தானியா சென்றார். பின்னர் சிரியாவின் அடுத்த தலைவராக அவரைத் தயார் செய்வதற்காக அவர் லண்டனில் இருந்து வரவழைக்கப்பட்டார்.

அதன்படி, பஷர் அல்-அஸத்தின் தந்தை ஹஃபீஸ் அல்-அஸாத் 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உயிரிழந்ததன் பின்னர் 34 வயதான பஷார் சிரியாவின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.



# கல்யாண கலாட்டா!



திருமணம் என்றாலே வீடியோ மற்றும் புகைபடப்பிடிப்பாளர்களின் ராஜ்ஜியம் தான்.. இதில் திருமண வீட்டார் எல்லாம் இரண்டாம் பட்சம் தான்... அதிலும், திருமண “ஃபொட்டோ ஷூட்” என படம் பிடிக்கின்றனரே.. அப்பப்பா.. திருமணத்தின் பின்னர் இது நடக்கின்றதா அல்லது திருமணத்திற்கு முன்னர் நடக்கின்றதா என்ற சந்தேகமே இதனை பார்க்கும் போது ஏற்படுகின்றது. இன்னும் சிறிது நாளில் தாலி கட்டலில் கூட ரீஷூட் நடக்கலாம்..

திருமண வீடுகளுக்கு சிலர் தமது சிறு வயது பிள்ளைகளையும் அழைத்து வருகின்றனர். திருமண விருந்தில் அந்த பிள்ளைகளுக்கு முழுமையான பிளேட்டில் உணவை பெறுகின்றனர். சிறுவர்கள் உண்பதோ சிறிதளவே, ஆனால், திருமண வீட்டாரோ அந்த பிளேட் கணக்கிற்கு பெருமளவு தொகை பணத்தை செலவிடுகின்றனர். தாய்மார் பிளேட்டில் தமக்கான உணவை பரிமாறிக் கொண்டு ஒரு சில வாய்களை பிள்ளைகளுக்கு ஊட்டிவிட்டால் வீண் செலவு தீர்ந்தது தானே..?



திருமண அழைப்பென்றாலே “மொய்” காசே ஞாபகத்தில் மொய்ப்பதுண்டு.. வாழ்க்கைச் சுமை கூடியதால் சிலர் மொய் காசை நினைத்தே திருமண நிகழ்விற்கு செல்ல பின் வாங்குவதுண்டு.. இது புரிந்த சில நல் மனங்களும் இருக்கவே செய்கின்றனரே.. திருமண அழைப்பிதழில் “பரிசுகள் எதுவும் வேண்டாமே உங்கள் வரவே போதுமானதே” என அந்த நல் மனம் படைத்தோர் குறிப்பிடுவரே.. பிறகென்ன நட்பும் நீடிக்குமே ஆசிகளும் கிட்டுமே..

திருமண அழைப்பு என்பதானது மணமக்களை வாழ்த்த அழைக்கும் அழைப்பன்றோ.. ? இது புரியாது சில பேரோ மணவீட்டில் புறம் பேசி நேரம் கழிப்பாரன்றோ.. எத்தனை பவுன் சீதனமாம்?, மேக்கப் கொஞ்சம் கூடிப்போச்சே, பட்டு சாரி என்ன விலையாம்..?, மாப்பிள்ளையின் தலை வழுக்கையோ? பெண்ணைவிட மாப்பிள்ளை கொஞ்சம் குள்ளமோ? இப்படி விசாரிப்புக்கள் ஏராளம்.. தாராளம்.. வாழ்த்த வந்த உள்ளங்கள் இவர்கள் தானாம்..

திருமணமாம் தோரணமாம் எங்கெங்கிலும் வர்ணஜாலங்களாம்.. பாட்டெல்லாம் ஓங்கி ஒலிக்குதாம்.. பசியாத சில பேரும் அரைகுறையாய் உண்பாரே, மிச்ச மீதியை எறிவாரே.. உண்பதற்கு ஏதுமின்றி யாசகரும் காத்திருப்பாரே.. யாசகரை விரட்டவென்று அடிதடியாய் சிலரும் நிற்பாரே..

கல்யாண வீட்டிலே விருந்துண்ணப் போவதிலும் பெரும் போட்டிதான் போங்கல்.. வரிசையிலே உணவுத் தட்டுடன் காத்திருப்பதும், நான் முந்தி நீ முந்தி என முண்டியடிப்பதும் , சாப்பாட்டை தட்டில் தேவைக்கும் அதிகமாக அள்ளி அள்ளி போட்டுக் கொள்வதும், உண்ட உணவை ஏப்பமிடுமுன் அதன் குறைகளை கூறுவதும், பின்னர் சிரித்த முகத்துடன் கல்யாண வீட்டாருடன் கைகுலுக்குவதும் இன்றைய வழமையான காட்சிகளாகிவிட்டன..

திருமண அழைப்பிதழ் என்றாலே குடும்பச் சமேதரராய் வாருங்கள் என அழைப்பதே வழமை.. அது அன்று...! ஆனால், இன்றோ கணவன் மனைவி மட்டும் வந்தால் போதும் குடும்பமாக வந்திடாதீங்கோ என்பதுபோல் பெயரிட்டு அழைப்பதே வழமையாகிவிட்டது.. எல்லாமே கல்யாண பட்ஜெட் செய்யும் மாயம் என்றாகி விட்டது..

– ரிஷா –

# இலங்கை கடற்படையில் புதிய திருப்பங்கள்



இலங்கை கடற்படையின் 74 வருட வரலாற்றில் புதிய அரசாங்கம் பல முக்கிய மாற்றங்களைச் செய்ய தயாராக உள்ளது. இதில் இலங்கையில் போதைப்பொருள் மற்றும் பிற போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பது மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களின் தலைவர்கள் உள்ளிட்டவர்கள் கடல் வழியாக வேறு நாடுகளுக்குத் தப்பிச் செல்வதைத் தடுப்பது தொடர்பில் முன்னுரிமை இலக்காக பார்க்கப்படுகிறது.

அந்த நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையில் பல மூத்த அதிகாரிகள் மற்றும் பிற பதவிகளுக்கு அண்மையில் பதவி உயர்வும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சஜித்தின் கட்சியில் இருவருக்கு ரணில் தொலைபேசி அழைப்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன மற்றும் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹஷீம் ஆகிய இருவருக்குமே ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறு தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் எம்.பிக்களின் கல்வித் தகுதிகளை ஆராய தெரிவுக் குழுவொன்றை நியமிக்குமாறு கோருமாறு ஆலோசனை வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

நாடாளுமன்றத்தின் அதியுயர் பதவியான சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினரின் கல்வித் தகைமை தொடர்பில் அண்மைய நாட்களில் பல சர்ச்சைகள் இடம்பெற்று வருவதாகவும், அவர்களிடம் கேள்வி எழுப்ப வேண்டியது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பங்களிப்பு எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்தப் பொறுப்பு ஐக்கிய மக்கள் சக்தியினால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, இவ்விடயத்தில் தலையிடுமாறு சம்பந்தப்பட்ட இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# அரசியல் அந்தப்புரம்



கனுஷியா புஷ்பகுமார்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய



சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைத் துணிகள் சீனத் தூதுவர் மூலம் பிரதமர் ஹறிணி அமரசூரியவிடம் கொழும்பு துறைமுகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவிருந்த வைபவத்தில் ஒரு மணி நேர தாமதத்திற்குப் பின்னரே பிரதமர் ஹறிணி அமரசூரிய கலந்து கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதன் காரணமாக சீனத் தூதுவர் தனது நிகழ்ச்சி நிரலை மாற்றி, வேறொரு நிகழ்விற்கு சென்றுவிட்டு, திரும்பி வரவும் ஏற்பாடு செய்துள்ளார்.

ஒரு மணி நேர தாமதத்தின் பின்னர், பிரதமர் வருகை தந்ததையடுத்து நிகழ்வு ஆரம்பமானது.

## ஏழு வருடங்கள் பழமையான ஜப்பானிய வாகனங்கள் இறக்குமதி?



வாகன இறக்குமதி தொடர்பில் அரசாங்கத்திடம் புதிய பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதன்படி 07 வருடங்கள் பழைமையான ஜப்பானிய வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பம் கோரப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு வாகனத்தை வாங்கும் தொகையில் 04 வாகனங்களை கொள்வனவு செய்ய முடியும்.

இது அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் நோக்கில் முன்வைக்கப்பட்ட திட்டம் எனக் கூறப்படுகிறது.

## புதிய ஜனநாயக முன்னணியின் அரசியல் திருட்டு



நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி வெற்றி பெற்ற தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்களின் அனுமதியின்றி நியமனம் வழங்குவது அரசியல் திருட்டு என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. அதன்படி, நாடாளுமன்றத் தேர்தலில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுவது என தீர்மானிக்கப்பட்ட போது, கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன் கலந்து ஆலோசித்து பொதுவான உடன்பாட்டை எட்டியதாக வஜிர அபேவர்தன கூறியுள்ளார்.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிகளை நிரப்புவது தொடர்பில் புதிய ஜனநாயக முன்னணியின் கட்சித் தலைவர்களே தீர்மானம் எடுக்க வேண்டும். புதிய ஜனநாயக முன்னணியின் செயலாளருக்கு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை நிரப்புவதற்கு எவ்வித அதிகாரமும் வழங்கப்படவில்லை எனவும் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அந்தத் தீர்மானத்தை மீறி தேசியப்பட்டியல் எம்.பி.க்களின் பதவிகளை நிரப்புவது முற்றிலும் அரசியல் திருட்டு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.





# ஒரு கை விரல்!



ஐந்து விரல்களும் வெவ்வேறாம்
அனைத்தும் ஒன்றாகச் சேர்வதில் தான்
சிந்தை நினைக்கும் செயல்களினைச்
செய்திட முடியும் யாராலும்!

ஐந்து விரல்களும் சேர்ந்தால் தான்
அத்தனை பலமும் கைகளுக்கு
ஐந்தில் ஒன்று குறைந்தாலும்
அள்ளித் தின்பது சிரமமன்றோ?

இலங்கை நாட்டில் பல மதங்கள்
இலங்கை நாட்டில் பல இனங்கள்
இலங்கையன் என்பவன் ஓரினம் தான்
இவனில் பிரிவுகள் கிடையாது!

ஒரு கை விரல் போல வெவ்வேறாய்
ஒவ்வோர் இலங்கை மொழியிருக்கும்
ஒரு கை என்பது விரல்களும் தான்
உயர் புகழ் இலங்கை அதுபோல் தான்!

வேற்றுமை தனிலே ஒற்றுமையை
வேண்டிப் பெறுபவர் இலங்கையராம்
வேற்றுமை மொழியில் மதங்களில் தான்
வெற்றியும் ஒன்றாய் இணைவதில் தான்

கவிச்சுடர் கல்லொளுவை பாரிஸ்

# காமராஜரும் கண்ணதாசனும்

காமராஜருக்கும் கண்ணதாசனுக்கும் இடையில் இருந்த உறவு அற்புதமானது. இது குறித்து கண்ணதாசன், “காமராஜரை நான் தாயாகப் பார்த்தேன். தந்தையாகப் பார்த்தேன். தெய்வமாகப் பார்த்தேன். அதன்பிறகுதான் தலைவனாகப் பார்த்தேன்” என்று மனமாரச் சொன்னவர்.

கவிஞர் கண்ணதாசன் காங்கிரசிலிருந்து விலகி திரும்பவும் காங்கிரசில் சேர எண்ணியபோது தலைவர் காமராஜருக்கு திரைப்பாடல் மூலம் விட்ட செய்தி இது.





**“அந்த சிவகாமி மகனிடம், சேதி சொல்லடி என்னை சேரும் நாள் பார்க்க சொல்லடி வேறு எவரோடும் நான் பேச வார்த்தை இல்லடி”**

காமராஜர் தாயார் பெயர் சிவகாமி. இதைத்தான் கண்ணதாசன் இந்த பாடலில் அழகாக எழுதியிருந்தார்.

கே.மதீனா, கொட்டகலை

# முதுமையால் இறக்காத முதலைகள்



உயிரியல் முதுமையால் முதலைகள் ஒருபோதும் இறக்காது. அவை தொடர்ந்து வளர்கின்றன. சாப்பாடு இல்லாத காரணத்தினாலோ, உடம்பு சரியில்லாததாலோ தான் இறக்கின்றன.

அப்படி என்றால், முதலைகளுக்கு அழிவு இல்லையா? இல்லை. ஆனால் அவற்றின் வாழ்நாள் நீண்டுகொண்டே போகும். ஒரு முதலையின் சராசரி வாழ்நாள் 70 ஆண்டுகள் அல்லது கூடுதலாக இருக்கலாம்.

ஆனால், மனிதர்களால் வளர்க்கப்படுகின்ற முதலைகளின் வாழ்நாள் 100 ஆண்டுகளையும் கடக்கின்றது.

அப்படி ஒரு ஆண் முதலை ரஷ்ய உயிரியல் பூங்காவில் 115 ஆண்டுகள் வாழ்ந்தது. ஏன் முதலைகள் இப்படி நீண்ட காலம் வாழ்கின்றன?

கடினமான சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவற்றின் திறன்தான் மிகப்பெரிய காரணம். முதலைகளால், மூன்று ஆண்டுகள் கூட உணவு இன்றி வாழ முடியும். எனவேதான், அவை தங்கள் ஆற்றலை மிகவும் கவனமாக. சரியான நேரத்தில் பயன்படுத்துகின்றன.

ப.தசிதரன், யாழ்ப்பாணம்

# கனவில் வந்த காரிகையைத் தேடி...?

ஆர். ராஜலிங்கம்



**அத்தியாயம் 5**

தீபனுக்கும் அவர்கள் இருவருக்கும் இடையில் உக்கிரமான சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்தது.

ஒருகட்டத்தில் வரதன் பின்வாங்கி அங்கிருந்து நகர்ந்தான். ஆனாலும், அவன் நண்பன் விடவில்லை. தீபனை மிகக் கோரமாகத் தாக்கினான். தீபனும் பதிலுக்கு அவனை தாக்கினான். தீபனின் அந்த தாக்குதலுக்கு அவனால் ஈடுகொடுக்கமுடியவில்லை. அவனும் பின்வாங்க ஆரம்பித்தான்.

அப்பொழுது....? தீபனின் முதுகில் ஒரு பலமான வெட்டு விழுந்தது. இதைச்சற்றும் எதிர்பார்க்காத தீபன் வலிபொறுக்க முடியாமல் அலறியபடி பின்னால் திரும்பிப் பார்த்தான்.

அங்கே...? மரண தண்டனையை நிறைவேற்ற பயன்படுத்தும் கத்தியை ஓங்கியபடி வெற்றிப் பெருமிதத்துடன் நின்றுகொண்டிருந்தான் பூங்குழலியின் அண்ணன் வரதன்.

"சபாஸ் மச்சான்" என்று அவன் நண்பன் அவனைப் பாராட்டினான்.

தீபன் சக்தியிழந்து தரையில் சாய்ந்தான்.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

"ஆ" என்று அலறிய தீபன் சுயநினைவுக்கு வந்தான்.

"ஆ...! இவ்வளவு நேரமும் நடந்தது கனவா? எவ்வளவு பயங்கரமான கனவு? கனவில் என்னைக் கொன்றுவிட்டார்களா? கனவை முழுமையாகக் காணமுடியவில்லையே! கனவில் எனக்கொரு காதலியா? எவ்வளவு அழகான பெண். அவள் யார்? உண்மையிலேயே அவளும் நானும் காதலித்ததுபோன்ற உணர்வு ஏற்படுகிறதே. அவளை இனி எங்கு போய் தேடுவேன்? அவள் முகம் என் மனதில் அப்படியே பதிந்திருக்கிறது. அவள் இல்லாத வாழ்க்கையை நினைத்தும் பார்க்க முடியவில்லையே! கனவுகூட வாழ்க்கையில் இப்படிப்பட்ட தாக்கங்களை ஏற்படுத்துமா? அவள் யாரென்று தெரியவில்லையே!

அதோடு பூங்குழலி என்ற பெயர். அதனை நானே உருவாக்கியதாக கனவில் அவளிடம் சொன்னேனே. அது உண்மையா? உண்மையாக இருந்தால் அந்தப்பெயர் எப்படி இந்த வீட்டு அம்மாவுக்கு வந்தது? பூங்குழலி என்ற பெயருக்கும் எனக்கும் இடையில் என்ன தொடர்பு? புரியவில்லையே!"

சிந்திக்க சிந்திக்க தீபனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும்போல் இருந்தது. வெகுநேரம் வரை உறக்கம் வராமல் புரண்டுகொண்டிருந்தவன் பின்னர் ஒருவாறு உறங்கலானான்.

மறுநாள் மாலைவேளை.

விமலா தேநீர் தட்டுடன் தோட்டத்திற்குச் செல்வதைக்கண்ட பூங்குழலி "விமலா, யாருக்கு தேத்தண்ணி கொண்டுபோகிறாய்?" என்றதும் அவள் சொன்னாள்

"தீபன் ஐயாவுக்கு அம்மா" என்றாள்.

"தீபன் வந்துவிட்டாரா?"

"ஆமா அம்மா அவர் நேரத்தோட வந்துட்டார். நம்ம ஐயாதான் இன்னும் வரல்ல"

"அப்படியா இப்ப தீபன் எங்கே?"

"அதோ தோட்டத்தில கவிதா அம்மாவுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துக்கிட்டு இருக்கார்"

தோட்டத்தில் குடில் அமைக்கப்பட்டு மேசை, நாற்காலியெல்லாம் போடப்பட்டு வசதியாக இருந்ததால் தீபன் பெரும்பாலும் அங்கேயே இயற்கையை இரசித்துக்கொண்டு பொழுதைக் கழிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான்.

"சரி, தேத்தண்ணிய தா நான் கொண்டுபோய் கொடுக்கிறேன். நீ போய் மற்ற வேலைகளைப் பார்" என்று கூறி தேநீர் தட்டை வாங்கிக்கொண்டாள் பூங்குழலி.

"இந்த அம்மா ஏன் தேத்தண்ணிய கொடுக்கப்போறாங்க" என்று நினைத்தபடியே விமலா திரும்பிச்சென்றாள்.

பூங்குழலி தேநீர் தட்டுடன் வருவதைக்கண்ட தீபன், "ஐயோ நீங்க ஏம்மா இதையெல்லாம் கொண்டுவாறீங்க? நான் வீட்டில் வந்து பிறகு குடிப்பேன்தானே" என்று கூறிக்கொண்டு அவசர அவசரமாக எழுந்தான்.

"ஏன் அதனாலென்ன?" என்று கூறியபடியே பூங்குழலி தேநீரை அவனிடம் கொடுத்தாள்.

தேநீரை வாங்கி அவன் அருந்தலானான். அவன் தேநீர் அருந்தும் அழகைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தாள் பூங்குழலி.

அப்போதுதான் அவள் ஒன்றைக் கவனித்தாள். அதாவது, தீபனின் பார்வை பூங்குழலியின்மீது இலயித்திருந்ததை அவள் கவனித்தாள். அந்தப் பார்வையில் ஏதோ ஒரு அர்த்தம் இருப்பதாக அவள் உணர்ந்தாள். அவள் தன்னைக் கவனிக்கிறாள் என்று அவனுக்குப் புரிந்திருக்கவேண்டும். அதனால் அவன் சட்டென்று பார்வையை வேறுபக்கம் திருப்பிக்கொண்டதையும் அவள் கவனிக்கத் தவறவில்லை.

அவளுக்கு ஏதோ ஒன்று புரிவது போல் இருந்தது.

"இவன் ஏன் என்னை ஓரக்கண்ணால் பார்க்க வேண்டும்? நேரடியாக பார்த்து பேசலாமே. இவனின் இந்தப் பார்வை எனக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறதே!" இப்படி பலவாறு சிந்தித்தவளின் முகம் மாற்றமடைந்தது. அது கோபத்தினாலா என்று அவளுக்குப் புரியவில்லை. படபடவென நடுக்கம் ஏற்பட்டது. உடலெல்லாம் வியர்த்துக் கொட்டவும் செய்தது.

அவளால் தொடர்ந்தும் அங்கு நின்றுகொண்டிருக்க முடியவில்லை. விறுவிறுவென வீட்டை நோக்கி வேகமாக நடந்தாள்.

அன்றைய தினமும் இரவு பூங்குழலி உறக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு தீபனைப் பற்றிய சிந்தனை ஏற்பட்டுக் கொண்டே இருந்தது.

"அவன் ஏன் என்னை அப்படி ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான்? எனக்கு புரியவில்லையே! அவனை நல்லவன் என்றல்லவா நினைத்தேன். ஆனால், அவனுடைய பார்வை சரியில்லையே! அவன் ஏன் என்னை அப்படிப் பார்க்க வேண்டும்? கள்ளம், கபடம் இல்லாவிட்டால் நேரடியாகப் பார்க்கலாமே" என்று பலவாறு சிந்திக்கலானாள்.

"ம்...., தவறு என்மீதும் இருக்கிறது. அவனுக்கு தேநீர் கொண்டுபோய் கொடுக்கவேண்டிய தேவை எனக்கு என்ன வந்தது? விமலாதான் அவனுக்குத் தேநீர் கொண்டுபோனாள். அது அவளுடைய கடமை. அதை ஏன் நான் வாங்கிக்கொண்டுபோய் கொடுக்கவேண்டும்? விமலாகூட என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

நம் வீட்டில் உள்ளவன்தானே? அவனை அன்பாக உபசரிக்கவேண்டும் என்று நினைத்தது தவறாகப்போய்விட்டது. எல்லோரையும் அப்படி அன்பாக உபசரிப்பதுதானே என் பழக்கம். அதைத்தானே அவனுக்கும் செய்தேன். ஆனால் அவன் அதைத் தவறாக நினைத்துவிட்டான் போலிருக்கிறது. அதனால்தான் அவன் என்னை அப்படி வித்தியாசமான பார்வையில் பார்த்திருக்கிறான்" நினைக்க நினைக்க அவளுக்குப் பெரும் வெறுப்பாக இருந்தது.

"ச்சே, இதற்காகத்தான் இவர் அவனை இங்கு கூட்டிக்கொண்டு வந்தாரா? வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும் அவர் இவனை நல்லவன் என்று நம்பிவிட்டார். அதனால்தான் அவனை இங்கு கூட்டி வந்திருக்கிறார். இவன் இங்கு இருந்தால் என் நிம்மதி தொலைந்துவிடும். இவன் இங்கு இருக்கக் கூடாது"

வெகுநேரம் சிந்தித்த பின்னர் அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். அதன்பின்னர் அவள் மனம் நிம்மதியடைந்தது. தீபனைப்பற்றி அவள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

"ஆம் அதுதான் சரி. நாளைக்கே அவனை அனுப்பிவிடவேண்டும். ஆனால் எப்படி அனுப்புவது? ஏன் தயங்கவேண்டும்? அவரிடம் நேரிடையாக சொல்லிவிடவேண்டியதுதான்"

மறுநாள்...,

ராம்குமாரிடம் அவள் மெதுவாக பேச்சை ஆரம்பித்தாள்.

"உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லவேண்டும்"

"என்ன பூங்குழலி புதிர் போடுகிறாய்? சொல் என்ன விஷயம்?"

"வந்து..." அவளுக்கு சொல்ல தயக்கமாக இருந்தது.

"ஏன் யோசிக்கிறாய்? எதுவாக இருந்தாலும் சொல்"

"வந்து..., எனக்குப் பிடிக்காதது. ஆனால் உங்களுக்குப் பிடித்தது. அதனால்தான் சொல்லத் தயங்குகிறேன்"

"உனக்குப் பிடிக்காதது எதையும் நான் செய்யமாட்டேன். சொல் நான் என்ன செய்யவேண்டும்?"

"பேச்சு மாறமாட்டீர்களே?"

"உனக்கு ஏன் இந்த சந்தேகம்? பேச்சு மாறமாட்டேன். என்னவானாலும் செய்கிறேன். சொல் நான் என்ன செய்யவேண்டும்?"

அவள் சொல்லத் தயாரானாள். அவள் சொல்லப்போவதை அவர் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்.

**(தொடரும்...)**

# குறுக்கெழுத்துப் போட்டி - 06

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | ■ | |
| | ■ | ■ | | ■ | ■ | ■ | |
| 9 | | | | ■ | 10 | | |
| | ■ | ■ | | ■ | | ■ | ■ |
| ■ | 11 | | | 12 | | ■ | 13 |
| 14 | | ■ | ■ | | ■ | ■ | |
| ■ | 15 | | ■ | 16 | | | |

**இடமிருந்து வலம்**

1. சூரியன் மறைவுக்குப்பின் கண்பார்வையை மறைக்கும் நோய் ஒன்று.
5. துறவிகளின் ஆடையைக் குறிக்கும்.
7. தெய்வத்திடம் பாரதியார் கேட்டவற்றில் ஒன்று (திரும்பி)
8. தொழுவம் என்றும் சொல்லலாம். குழம்பி.
9. பிறரின் பார்வை காரணமாக ஏற்படுவதென்று கருதப்படுவது.
10. நீரிலும் நிலத்திலும் வாழும் ஊர்வன இனம்.
11. அதிசயம் என்றும் பொருள்படும்.
14. அழகிய பெண்ணையும் இப்படி குறிப்பிடுவர். (திரும்பி)
15. வாத்தியக்கருவி ஒன்று. (திரும்பி)
16. கலப்பு உலோகம் ஒன்று.

**மேலிருந்து கீழ்**

1. நவரத்தினங்களில் ஒன்று.
2. நாளின் ஒரு பகுதி.
3. மெலிவை கழுதை தேய்ந்து இதுவானதாகக் குறிப்பிடுவார்கள்.
4. இசையின் அடிப்படை வடிவங்களில் ஒன்று. தலைகீழ்.
6. அடிமைத்தனத்திலிருந்து விடுபடல்.
10. ஆபரணங்களின் மேல்பூச்சையும் குறிக்கும்.
11. விஷமுள்ள ஓர் ஊர்வன இனம்.
12. இவன் உடையான் படைக்கு அஞ்சான் என்பார்கள்.
13. வாழ்வின் ஒரு பருவம்.

**உங்கள் பதில்களை தபால் அட்டையில் ஒட்டி பெயர், முகவரியுடன் எமக்கு அனுப்பி வைக்கலாம்.**

ஒருவன் வாரவெளியீடு, ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு - 09

## குறுக்கெழுத்துப் போட்டி 05 இற்கான விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 கு | 2 ண் | ட | 3 ல | கே | 4 சி | ■ | 5 தா |
| 6 ம் | ஆ | ■ | ம் | ■ | ரி | ■ | ஜ் |
| 7 மி | டு | 8 க் | கு | ■ | 9 ப் | பு | ம |
| ரு | ■ | கு | ■ | ■ | பு | ■ | ஹா |
| ட் | ■ | 10 பா | ட் | 11 டு | ■ | 12 பா | ல் |
| 13 டு | | ■ | ■ | 14 ம் | ன | சி | ■ |
| ■ | ■ | 15 ப | ண் | டு | ■ | ■ | 16 ம |
| 17 கு | ட் | டை | ■ | ம் | ■ | 18 பி | ணி |

## பாராட்டுப் பெறுவோர்

1. எம்.ஜே.ஃபெர்ணாண்டோ, கொழும்பு 13
2. எச்.ஏ.ஷகூர், மடவளபஸார்
3. பாத்திமா செய்னப், அம்பாறை
4. எம்.ஏ.எச்.எம்.வபா, குருநாகல்
5. சோ.தனஞ்சயன், மட்டக்களப்பு

# தர்மமே வெல்லும்...!

மனமே | சுபா

வாழ்க்கை என்பது, எப்போதுமே இலகுவாகவும் எளிதாகவும் இருப்பதில்லை. கரடு முரடுகள் நிறைந்தது தான் வாழ்க்கை. ஆனால், எத்தகைய கடினமான சூழ்நிலைகள் வந்தாலும், நமது மனசாட்சிப்படி, தர்மத்தின் வழியே நாம் வாழ்வோமேயானால், நம் முடிவு சரியான வகையில் அமையும்.

எத்தனை முறை நாம் ஏமாற்றப்பட்டோம், எத்தனை முறை நாம் அவமானப்படுத்தப்பட்டோம், எத்தனை முறை வீழ்ச்சி அடைகிறோம் என்பது முக்கியமல்ல. அந்த நேரத்தில் நாம் எப்படி மீண்டு எழுந்தோம் என்பதே முக்கியமானது. முக்கியமாக ஒன்றை மட்டும் நினைவில் கொள்ள வேண்டும். நம் வாழ்க்கையில் ஏற்படும் தவறுகள், நாம் தவறான பாதையில் போவதற்காக அல்ல. அவை நம்மை செதுக்குவதற்காகத் தான் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும்.

மகாபாரதத்தில் ஒரு சம்பவம்.

கர்ணன் கிருஷ்ணரைப் பார்த்து இவ்வாறு கேட்கிறார், "என் தாயார் நான் பிறந்த நேரத்தில் என்னை ஆற்றில் விட்டுவிட்டார். முறைதவறிப் பிறந்த குழந்தை என்றார்கள் இது என் தவறா? நான் சத்ரியன் அல்ல என்று கூறி துரோணாச்சாரியார் எனக்கு கல்வியைக் கற்றுத்தரவில்லை. இது என் தவறா? பரசுராமர் எனக்கு கற்றுக் கொடுத்தார், ஆனால் சத்ரியன் எனக்கூறி நான் படித்த எல்லாவற்றையும் மறக்க என்னை சபித்தார். இது என் தவறா?

ஒரு பசு தற்செயலாக என் அம்பு மூலம் தாக்கப்பட்டது அதன் உரிமையாளர் என்னுடைய தவறுக்காக என்னை சபித்தார். திரௌபதியின் சுயம்வரத்திலே நான் தேரோட்டியின் மகன் என்பதற்காக நான் அவமானப்படுத்தப்பட்டேன். என் தாயார் குந்தி கூட இறுதியாக தன் மற்ற மகன்களைக் காப்பாற்ற மட்டுமே என்னைத் தேடி வந்தார். இப்படி சுற்றி இருப்பவர்கள் அனைவராலும் வஞ்சிக்கப்பட்ட போது, துரியோதனனின் அன்பு மூலமாகவே எனக்கு எல்லாம் கிடைத்தது. ஆகையால் அவன் பக்கம் நான் நிற்பது எப்படி தவறாகும்" என்று கேட்கின்றார்.

அதற்கு கிருஷ்ணன் பதில் சொல்கிறார் இப்படி, "கர்ணா நீயாவது பரவாயில்லை ஆனால், நான் ஒரு சிறையில் பிறந்தேன். என் பிறப்புக்கு முன்பே மரணம் காத்திருந்தது. நான் பிறந்த இரவு அன்றே என் பெற்றோரிடமிருந்து நான் பிரிக்கப்பட்டேன்.

நீ சிறுவயதிலிருந்து, வாள், இரதங்கள், குதிரைகள், வில், அம்புகள் ஆகியவற்றின் இரைச்சலை நீ கேள்விப்பட்டிருப்பாய். ஆனால் நானோ மாடு, கொட்டில், சாணம், வைக்கோல் இவைகளுக்கிடையே வளர்ந்தேன். நடக்க ஆரம்பிக்கும் முன்னே என்னைக் கொல்ல பல முயற்சிகள் நடந்தன.

நல்ல கல்வி இல்லை, இராணுவ பயிற்சி இல்லை. ஆனால் எல்லோரும் நான்தான், நடக்கும் பிரச்சினைகளுக்கெல்லாம் காரணம் என்கிறார்கள். நீங்கள் ஆசிரியர்களால் மதிக்கப்படுகிறபோது நான் எந்தக் கல்வியையும் பெறவில்லை. நான் 16 வயதில் தான் ரிஷி சாண்டிபனியின் குருகுலத்தில் சேர்ந்தேன்.

நீங்கள் விரும்பிய ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டீர்கள். ஆனால் நானோ நான் விரும்பிய பெண்ணை திருமணம் செய்யாமல் என்னை நேசித்த பெண்களையும், மேலும் கொடியவர்களிடம் இருந்து நான் காப்பாற்றிய பெண்களையும் திருமணம் செய்து கொண்டேன். ஜராசந்த்திடமிருந்து என் மக்களைக் காப்பாற்றுவதற்காக, யமுனா நதிக்கரையிலிருந்து கடலிலிருந்து தூரத்திலிருந்து என்னுடைய முழு சமூகத்தையும் நகர்த்த வேண்டியிருந்தது. நான் ஓடிப்போன ஒரு கோழை!.

துரியோதனன் போரில் வெற்றி பெற்றால், உனக்கு நிறைய பொருள், நாடு, சேனை, கௌரவம் கிடைக்கும். ஆனால் பஞ்சபாண்டவர் உடன் சேர்ந்து யுத்தம் செய்தால் எனக்கு என்ன கிடைக்கும்? கண்ணன்தான் இந்த போருக்கு காரணம் என்ற குற்றச்சாட்டு மட்டுமே மிஞ்சும்.

கர்ணா ஒன்றை நினைவில் கொள் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் சவால்கள் உள்ளன. வாழ்க்கை எப்போதுமே இலகுவாகவும் எளிதாகவும் இருப்பதில்லை. வாழ்க்கை என்பது ஒரு பாதை. சில நேரங்களில் கரடுமுரடாக இருக்கலாம் அதைக் கடப்பது நம் காலணிகளால் அல்ல நாம் எடுத்து வைக்கும் அடிகள் மூலமே" என்றார்.

ஆம்... அனைத்தும் கலந்தது தான் வாழ்க்கை. இங்கு எல்லாம் சரியாக அமைந்த வாழ்க்கை யாருக்கும் அமைந்துவிடுவதில்லை. எந்தவொரு கடினமான சூழ்நிலையிலும், நம் மனசாட்சிப்படி, தர்மத்தின்பால் நிற்பதே சரியானதாகும்.

"தர்மத்தின் வாழ்வுதனை சூது கௌவும். இறுதியில் தர்மமே வெல்லும்"

# கண்ணீரில் கரைந்த காதல்!

சிறுகதை

து.சிந்துஜா



இன்றுடன் சரியாக பத்து நாட்கள் அலுவலகத்தில் அவனைக் காணவேயில்லை. யாரிடம் போய் கேட்பதென்றும் கவிதாவுக்கு தெரியவில்லை.

ஒருவேளை அவன் பெயரைக் குறிப்பிட்டு கேட்டால், தன்னை தவறானவள் என்று கூறிவிடுவார்களோ என்ற அச்சம் அவளுக்குள்.

காத்திருந்தாள்....

பதினொறாம் நாள் சரியாக ஐந்து மணியிருக்கும்.... தனது அலுவலக தோழியுடன் நின்று பேசிக் கொண்டிருந்தாள் கவிதா.

தூரத்தில் ஒரு குரல்... கவிதாவுக்கு பரீட்சயமான, பிடித்த அதே குரல். திரும்பி பார்த்தாள்...

அவன்.... அவன்... அவன் வந்து விட்டான்... கவிதா இத்தனை நாள் தேடியவன் வந்து விட்டான்.

"என்ன ஆளையே காணோம்... என்னாச்சு?" என, அவனிடம் கேட்டாள் கவிதாவின் தோழி.

"பத்து நாளா ஒரே காய்ச்சல்... அதான் ஓஃபிஸ் வரல" என்றான் அவன்.

"அப்பாடா... காய்ச்சலா..." பெரு மூச்சு விட்டாள் கவிதா.

அவனை மீண்டும் பார்த்ததில் அவளுக்கு அவ்வளவு சந்தோஷம். பூரிப்புடன், அன்று வீடு நோக்கி விரைந்தாள். மறுநாள் காலை... வழமைபோல் அலுவலகம் சென்றாள். அவளுக்கு மிகவும் பிடித்த 5 மணி ஆகிவிட்டது. படிக்கட்டுகளுக்கு இடையில் அவன் தலை தெரிந்தது.

அவள் மனதுக்குள் இனம் புரியாத ஒரு உணர்வு... என்றுமில்லாதவாறு இதயம் அதன் துடிப்பை அதிகரித்தது. தலை மயிரை சரி செய்து கொண்டாள். அவன் வருவதைக் கண்டும் காணாதது போல் தன் வேலையைத் தொடர்ந்தாள். அவன் எப்போதும் பேசுவதைப் போல் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தான். இன்று அவன் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் அவளுக்கு பிடித்திருந்தது.

என்ன உணர்வு இது... இதுவரை இப்படி எனக்கு இருந்ததில்லையே...

ஒருவேளை இது.... இது.... இது.... அதுவா இருக்குமோ....

வீட்டுக்கு சென்றவள், அவன் பற்றிய நினைப்பிலேயே உறங்கிப் போனாள்.

மறுநாளும் தன் உள்ளத்தின் ஆழம் வரை சென்று தேடியதில் அவளுக்கு விடை கிடைத்தது. "ஆம் இது காதல் தான்.... என்னையும் இந்தக் காதல் விட்டு வைக்கவில்லையே. கடவுளே...." என எண்ணிக் கொண்டாள்.

கொஞ்சம் கொஞ்சமாக அவள் காதல் வளர்ந்தது... அவனுக்கும் அது இருக்கும்... அவனே வந்து சொல்வான் என்று காத்திருந்தாள். ஆனால், அவன் கூறவேயில்லை. காதல் ஒரு புகையைப் போல மறைத்து வைத்தால் தெரிந்து விடும் என்பதைப் போல... அவனுக்கு அவள் மேல் ஒரு சந்தேகம்.

ஒரு நாள் இருவருக்கும் இடையில் தொலைபேசி உரையாடல் நீண்டது. அப்போது காதல் தொடர்பாக இருவரும் பொதுவாக பேசிக் கொண்டிருக்கும் போது பொறுமையிழந்த கவிதா, "நான் உங்களை நேசிக்கிறேன்" என்று அவனிடம் கூறிவிட்டு இரண்டு நாட்களில் உங்கள் பதிலைக் கூறுங்கள் என்றாள் மிகுந்த படபடப்புடன். எப்படியும் அவன் சம்மதம் தருவான் என்று அவ்வளவு நம்பிக்கை அவளுக்கு.

அன்றைய தினம் இரவு 8.00 மணியிருக்கும் அவனிடமிருந்து ஒரு அழைப்பு.. எடுத்தாள்.. வழமைபோல் பேசிக் கொண்டனர்.

"ஏதாவது யோசிச்சீங்களா?" என்று கேட்டாள் கவிதா.

"எனக்கு இரண்டு நாள் எல்லாம் தேவையில்ல... இப்பவே பதில் சொல்றேன்..." என்றான் அவன்.

கவிதாவுக்கு வியர்த்துக் கொட்டியது. கண்களை மூடிக் கொண்டாள்.

"என்ன மன்னிச்சிரு. இது சரி வராது. எங்க வீட்ல கண்டிப்பா ஏத்துக்க மாட்டாங்க. ப்ளீஸ் புரிஞ்சிக்கோ... நம்ம நல்ல நண்பர்களா இருப்போம்" என்றான்.

இதைக் கேட்ட கவிதாவுக்கு சுற்றி அனைத்தும் சூன்யமாக தெரிந்தது. ஏதேதோ அவனிடம் புலம்பினாள். இறுதியில் ஃபோனை வைத்தாள். உறங்கச் சென்றாள். அவள் தலையணை முழுதுமாக கண்ணீரில் நனைந்தது. சேர்க்க விருப்பமில்லை என்றால் ஏன் பார்க்க வைக்கிறீர்கள் என கடவுளையும் நிந்தித்தாள் கவிதா.

இவ்வாறு சில நாட்கள் நகர, இரண்டாம் முறை காதலர் தினத்தன்று தன் காதலைக் கூறினாள் கவிதா. பாவம் அதிலும் தோற்றாள். தன்னால் முடிந்தளவு அழுதாள், குமுறினாள். அவ்வளவு தான். தன் உண்மைக் காதல் தோற்றுவிட்டது என எண்ணிக் கொண்டாள்.

வழமைபோல் அலுவலகம் சென்று தன் பணியைத் தொடர்ந்தாள். அதே சமயம் காதலா, நட்பா என்ற சந்தேகத்துடன் இவர்களது உரையாடல்களும் தொடர்ந்தன. ஒரு நாள் தொலைபேசி குறுஞ்செய்தி உரையாடலில் தன் காதலை கவிதாவிடம் கூறிவிட்டான் அவன். அவளுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. துள்ளிக் குதித்தாள்.

இருவரும் காதல் வானில் பறக்கத் தொடங்கினர்.

நாட்கள் நகர்ந்தன... அவர்களின் காதல் கைகூடி திருமணம் செய்யும் நேரம் வந்தது. தன் தோழிகளுக்கு திருமண அழைப்பிதழ் கொடுத்து விட்டு வீடு நோக்கி விரைந்தாள் கவிதா. ஆனால், எதிர்பாராத விதமாக வீதியைக் கடக்கும் போது எதிரில் வந்த பேருந்து அவள் மீது மோதி, தூக்கி வீசப்பட்டாள். இரத்த வெள்ளத்தில் கிடந்த கவிதாவை அருகிலிருந்தவர்கள் மருத்துவமனையில் கொண்டு சேர்த்தார்கள். வீட்டுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவனும் ஓடோடி வந்தான். கவிதா மீண்டு வருவாள் என எண்ணிக் கொண்டு அவளைப் பார்க்க மருத்துவர்களிடம் அனுமதி வாங்கிக்கொண்டு அறைக்குள் சென்றான்.

இருவரும் பார்த்துக் கொண்டனர். ஆனால், கவிதாவால் பேச முடியவில்லை. இருவருக்குமான இறுதி உரையாடல் அது என்று அவனுக்கு அப்போது தெரியவில்லை. அவனைப் பார்த்து கவிதாவின் கண்களின் ஓரம் கண்ணீர் வழிந்தது.

நிரந்தரமாக கண்களை மூடிக் கொண்டாள் கவிதா.

அழுதான், கத்தினான், புலம்பினான் எதுவுமே கவிதாவின் காதுகளில் விழவில்லை. விபத்தை ஏற்படுத்திய சாரதியை பொலிஸார் கண்டுபிடித்தனர். அவனுக்கு பேரதிர்ச்சி... மேலும் அழுதான். சாரதி விபத்தை ஏற்படுத்தும்போது அவன் அந்த பேருந்துக்குள் தான் இருந்துள்ளான்.

விதியின் விளையாட்டை எண்ணி நொந்துக் கொண்டு தன் கால் போன போக்கில் நடந்து சென்றான் சுய நினைவற்றவனாய்...!

# மனித உருவில் ஒரு சாத்தான் 'டெட் பண்டி'





உலகில் இருக்கும் யாருமே உண்மையில் பேயையோ சாத்தானையோ பார்த்திருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆனால் சாத்தான் எப்படி இருப்பான் என்று நாம் யோசிக்க வேண்டும் என்றால், அதற்கு எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் இவ்வுலகில் வாழ்ந்துள்ளான். அவன் பெயர் டெட் பண்டி *(Ted Bundy)*.

இவனை பற்றிய புத்தகங்கள், சினிமா என்று பல வெளிவந்திருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், பாரதிராஜா இயக்கி, கமல்ஹாசன், ஸ்ரீதேவி நடிப்பில் வெளிவந்த 'சிகப்பு ரோஜாக்கள்' படத்தின் ஆரம்பம் இவன் தான்.

நவம்பர் 24, 1946 அன்று அமெரிக்காவில் உள்ள பர்லிங்டன் நகரில் பிறந்தான். அவன் தந்தை யாரென்று அவனுக்கு தெரியாது. அவள் தாய் அவனை பெற்றெடுத்துவிட்டு, தன் பெற்றோரிடம் சென்று அடைக்கலமடைந்தாள். குழந்தையான டெட் பண்டி, அவன் பாட்டி, தாத்தாவை தன் பெற்றோரென்றும், அவன் தாயை தன் சகோதரியென்றும் நினைத்து வளர ஆரம்பித்தான். அவனுக்கு நினைவு தெரிந்த பிறகுதான் தன் தாய் யாரென்பதை தெரிந்து கொண்டான்.

ஆண்டுகள் செல்கின்றன. கல்லூரி மாணவன் டேட் பண்டி சில தவறான பழக்கங்களிலும் ஈடுபட ஆரம்பித்திருந்தான். அது, இரவில் வீடுகளில் உள்ள பெண்கள் உறங்குவதை பார்த்து இரசித்தான். இதனால் இரவு நேரங்களில் இதற்காகவே மெனக்கெட்டு ரோட்டில் திரிய ஆரம்பித்தான். மற்றொன்று மதுப்பழக்கம். ஆனால் அதே சமயம், தன் படிப்பில் கவனத்தோடு இருந்தான். வொஷிங்டனில் உள்ள ஒரு அரசியல் கட்சியில் சேர்ந்து அந்த கட்சி தேர்தலுக்காக பிரசாரம் செய்யவும் ஆரம்பித்தான்.

ஒரு சிறு காதல் தோல்விக்கு பிறகு அவனுக்கு வேறு ஒரு பெண்ணோடு திருமணமாகி, பெண்குழந்தையொன்றும் பிறந்தது. சில காலத்துக்குப் பின், கணவன் மனைவிக்குள் சண்டை ஏற்பட்டு, விவாகரத்து வரை சென்றது.

1974ஆம் ஆண்டு ஒரு பெண் கல்லூரி வளாகத்திலிருந்து காணாமல் போனாள். 21 வயதான அந்த பெண்ணை தொடர்ந்து மேலும் இரண்டு பெண்கள் காணாமல் போனார்கள்.



பொலிஸ் விசாரணையில் ஒரு அழகான ஆணோடு காணாமல் போன பெண்கள் கடைசியாக பேசிக்கொண்டிருந்ததாக பார்த்தவர்கள் சொன்னார்கள். இதே போல பக்கத்து மாநில பெண்களும் காணாமல் போக ஆரம்பித்தார்கள்.

சீரியல் கொலைகாரன் டெட் பண்டி தன் "இரைகளை" தேர்ந்தெடுக்க, மெனக்கெட்டு வெவ்வேறு மாநிலங்களுக்கு பயணித்தான். இதற்கிடையில் வொஷிங்டன் நகரத்தை ஒட்டியுள்ள காடுகளில் பொலிஸார் சில அடையாளம் தெரியாத எலும்பு கூடுகளை கண்டெடுத்தார்கள். அந்த எலும்பு கூடுகளை பரிசோதனைக்கு உட்படுத்துகையில், அது காணாமல் போன பெண்களின் எலும்பு கூடுகள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. மற்ற மாநிலத்திலிருந்த பொலிஸாரும், வொஷிங்டன் பொலிஸும் கலந்து பேசி குற்றவாளியை பற்றி துப்பு துலக்க ஆரம்பித்தனர்.

இப்படி காணாமல் போகும் பெண்களை பாலியல் வல்லுறவு புரிந்து, கற்பழித்து பின்பு அந்த பெண்களை தன் கைகளில் வைத்திருக்கும் இரும்புக் கம்பியால் அடித்தே கொல்வான் பண்டி. 1975 ஜனவரியில் ஒரு பெண், அதைத் தொடர்ந்து சில மாதங்களில் இன்னும் ஐந்து பெண்கள் என காணாமல் போய்க்கொண்டே இருந்தார்கள். இந்த ஆறு பெண்களுமே ஒரே சாயலில் வன்புணர்ந்து கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது தான் கொடூரம்.

இப்படி வரிசையாக பெண்களை கொலை செய்த பண்டி, ஒரு நாள் தன் காரை வேகமாக ஓட்டி பொலிஸிடம் மாட்டிக் கொண்டான். அவனது காரை சோதனையிட்டபோது, அந்த காரில் கையுறை, ஒரு இரும்புக் கம்பி என்று சந்தேகத்திற்கிடமான பொருட்களை பறிமுதல் செய்தனர்.

மேலும் அவன் காரின் முன்வரிசை இருக்கையும் இல்லாமல் இருந்தமை பொலிஸாருக்கு சந்தேகத்தை கிளப்பியது. அதனால் பண்டியை திருட்டு வழக்கில் கைது செய்தனர். பொலிஸாரின் தீவிர விசாரணைக்குப் பின்னர், பண்டி என்ற சீரியல் கொலைகாரன் கடைசியில் பிடிபட்டான்.

அவன், தன் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டதுபோல கட்டு கட்டிக்கொண்டு, இரவு நேரத்தில் இளம்பெண் யாராவது தனியாக அந்த பக்கம் வரும் சமயம் பார்த்து, காருக்குள் ஒரு பெட்டியை வைக்க சிரமப்படுவது போல் நடிப்பான். உதவ வரும் பெண் காருக்கு அடியில் குனியும்போது, அவளை உள்ளே தள்ளி, தன் கை கட்டுக்குள் நுழைத்து வைத்திருக்கும் இரும்புக் கம்பியை உருவி, அவள் மண்டையில் அடித்து மயக்கமுற செய்து... பிறகு அந்த பெண்ணின் கதி, அவ்வளவு தான்!

இப்படி அவன் செய்த கொலைகளின் எண்ணிக்கை 30 ஆகும். ஆனால், அவன் நூற்றுக்கணக்கான பெண்களை கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகப்பட்டார்கள். பண்டி சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது இரண்டு முறை சிறையில் இருந்து தப்பித்திருக்கிறான். முதல் முறை தப்பித்தபோது அடுத்த வாரத்திலேயே பிடிபட்டான். ஆனால் இரண்டாவது முறை தப்பித்தபோது அவன் மேலும் இரண்டு பெண்களை வன்புணர்ந்து கொலை செய்திருந்தான். இரண்டாவது முறை அவனை கைது செய்த பொலிஸ், அவன் வீட்டை சோதனை செய்தபோது அங்கு சில பெண்களின் வெட்டப்பட்ட தலைகளையும் கண்டெடுத்தார்கள்.

ஒருவாறாக விசாரணை முடிந்து டெட் பண்டிக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. 1989, ஜனவரி 24 அன்று சரியாக காலை 7.13 மணிக்கு அவனை மின்சார நாற்காலியில் வைத்து தண்டனையை நிறைவேற்றினார்கள். டெட் பண்டி உபயோகப்படுத்திய கார், வொஷிங்டனில் உள்ள *'National Museum of Crime & Punishment'* என்ற இடத்தில் கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

பண்டியின் கதையை பலர் புத்தக வடிவில் எழுதியிருக்கிறார்கள். அதே போல் ஆங்கிலத்தில் சூப்பர் ஹிட் படமான *'Silence of the Lamp'* படத்தில் வரும் கொலைகாரன் 'டெட் பண்டியை' வைத்து உருவாக்கப்பட்ட கதாபாத்திரம் தான். அதுமட்டுமல்லாமல் 'டெட் பண்டி' என்ற பெயரில் கூட ஒரு படம் 2002 அன்று வெளிவந்தது. இந்த படம் கூட இவனது உண்மை கதையை தழுவி எடுத்த படமாகும்.




# பணம் வந்ததும் குணம்



ஓர் ஊரில் ஒரு செல்வந்தர் இருந்தார். அவரிடம் பொன்னன் என்னும் வேலைக்காரன் இருந்தான். அவனை "பொன்னா" என்று அவனின் முதலாளி அழைப்பார். செல்வந்தரின் மாடுகளை தினமும் அழைத்துப் போய் மேயவிட்டு கூட்டி வருவதுதான் பொன்னனின் வேலை.

பொன்னன் தினமும் மாடு மேய்க்கப் போகும்போது செல்வந்தர் அவனிடம், "இந்தா, கடலை வாங்கிக் கொறித்துக் கொள்" என்று கூறி ஐந்து ரூபா கொடுப்பது வழக்கம். அவனோ அந்தப் பணத்தை செலவழிக்காமல் வைத்துக் கொள்வான்.

இப்படி கொஞ்சம் கொஞ்சமாக பணம் சேரும்போது அதனை ஒரு பேணியில் போட்டு அவன் மாடு மேய்க்கப் போகும்போது ஒரு மரத்தின் அடியில் யாருக்கும் தெரியாமல் புதைத்து வைத்தான். தினமும் முதலாளி கொடுக்கும் பணத்தை இப்படியே சேகரிக்கலானான்.

பணம் ஓரளவுக்கு சேர்ந்துவிட்டது. அவனுக்கு தானும் ஒரு சிறிய பணக்காரன் என்னும் எண்ணம் ஏற்பட்டிருக்கவேண்டும். அப்படி நினைத்துக் கொண்டிருக்கும் போது ஒரு நாள் முதலாளி அவனை வழக்கம் போல "பொன்னா" என்று கூப்பிட்டார். முதலாளி அப்படி அழைத்ததும் அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

"என்ன முதலாளி நீங்க, எப்போது பார்த்தாலும் பொன்னா பொன்னா என்று கூப்பிட்டுக்கொண்டு. உங்களிடம் மட்டும் தான் பணம் இருக்கிறதா? என்னிடம் இல்லையா?" என்று கேட்டான்.

முதலாளிக்கு அவனிடம் ஏற்பட்ட மாற்றத்திற்குக் காரணம் புரியவில்லை. அதனால் சிந்தித்துக் கொண்டே "சரியப்பா, உன்னை எப்படி கூப்பிட வேண்டும் என்று சொல்கிறாய்?" என்று கேட்டார்.

"ஏன் பொன்னையா என்று கூப்பிட்டால் என்ன குறைந்தா போய்விடும்?" என்று கேட்டான்.

"சரியப்பா இனிமேல் உன்னை பொன்னையா என்றே கூப்பிடுகிறேன்" என்று கூறி அன்றிலிருந்து பொன்னையா என்றே கூப்பிடலானார்.

நாட்கள் நகர்ந்தன. அவனிடம் இன்னும் கொஞ்சம் பணம் சேர்ந்துவிட்டது. தான் முன்பை விட இன்னும் கொஞ்சம் பெரிய பணக்காரனாகிவிட்டதாக நினைத்துக் கொண்டான்.

அவன் அப்படி பெருமிதம் அடைந்து கொண்டிருக்கையில் ஒருநாள் முதலாளி அவனை "பொன்னையா" என்று கூப்பிட்டார். அவனுக்குத் திரும்பவும் கோபம் கோபமாக வந்தது.

அவன் சொன்னான் "என்ன முதலாளி நீங்க, எப்போது பார்த்தாலும் பொன்னையா பொன்னையா என்று கூப்பிட்டுக் கொண்டு. உங்களிடம் மட்டும்தான் பணம் இருக்கிறதா? என்னிடம் இல்லையா?" என்று கேட்டான். முதலாளிக்கு அவனுடைய போக்கு புரியவில்லை. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு,

"சரியப்பா, உன்னை எப்படி கூப்பிட வேண்டும் என்று சொல்" என்று கேட்டார்.

"ஏன் பொன்னுசாமி என்று கூப்பிட்டால் என்ன? குறைந்தா போய்விடும்" என்று கேட்டான்.

"சரியப்பா, இனிமேல் உன்னை பொன்னுசாமி என்றே கூப்பிடுகிறேன்" என்றார். அதன்படி பொன்னுசாமி என்றே கூப்பிடலானார்.

அவனிடம் இன்னும் கொஞ்சம் பணம் சேர்ந்துவிட்டது. இப்பொழுது அவனுக்கு தான் ஒரு சாதாரண பணக்காரன் என்னும் தலைக்கனம் ஏற்பட்டது. அவன் அப்படி நினைத்துக் கொண்டிருக்கையில் ஒருநாள் முதலாளி அவனை "பொன்னுசாமி" என்று கூப்பிட்டார். அவனுக்கு இப்பொழுது முன்பைவிட அதிக கோபம் ஏற்பட்டது.

"என்ன முதலாளி நீங்க எப்பொழுது பார்த்தாலும் பொன்னுசாமி பொன்னுசாமி என்று கூப்பிட்டுக்கொண்டு. நீங்கள் மட்டும்தான் பணக்காரரா? நான் பணக்காரன் இல்லையா?"

"சரியப்பா உன்னை எப்படி கூப்பிடவேண்டும் என்று சொல்கிறாய்?" என்று கேட்டார்.

"ஏன் மிஸ்டர் பொன்னுசாமி என்று கூப்பிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்று கேட்டான்.

"சரி, இனிமேல் மிஸ்டர் பொன்னுசாமி என்றே கூப்பிடுகிறேன்" என்று கூறி அப்படியே கூப்பிடலானார்.

அதேவேளை அவனிடம் ஏற்பட்டு வரும் மாற்றத்திற்கான காரணத்தை அறிய வேண்டும் என்னும் எண்ணம் முதலாளிக்கு ஏற்பட்டது. அதனால் மறுநாள் அவன் மாடு மேய்க்கப் போகும்போது அவனுக்குத் தெரியாமல் அவனைப் பின் தொடர்ந்து சென்றார்.

அவன் போய் மரத்துக்கு அடியில் புதைத்து வைத்திருந்த பேணியை எடுத்துப் பார்த்துவிட்டு அதில் அன்று அவர் கொடுத்த பணத்தைப் போட்டு புதைத்து வைப்பதைக் கண்டார். பின்னர் அவன் அங்கிருந்து சென்றபின்னர் அந்த பேணியை தோண்டி எடுத்துப் பார்த்தார். அவருக்குக்கு அவனுடைய மாற்றத்திற்கான காரணம் புரிந்தது.

பின்னர் அவர் அதில் இருந்த பணத்தை எல்லாம் எடுத்துவிட்டு அதில் மண்ணையும் கல்லையும் போட்டு புதைத்து வைத்து விட்டார்.

மறுநாள் மாடு மேய்க்கச் சென்றபோது அந்த பேணியை எடுத்துப் பார்த்த வேலைக்காரனுக்கு ஒரே அதிர்ச்சி.

"ஐயோ! மோசம் போய் விட்டேனே. யாரோ நான் இங்கு பணம் வைத்ததை தெரிந்துகொண்டு வந்து எடுத்துவிட்டார்களே. இனி என்ன செய்வது?" என்று வீட்டுக்குப் போய் விரக்தி அடைந்திருந்த அவனை முதலாளி "மிஸ்டர் பொன்னுசாமி" என்று கூப்பிட்டார். அவர் அவனை அப்படிக் கூப்பிட்டதும் அவனுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது,

"என்ன முதலாளி நீங்க. என்னைப் போய் மிஸ்டர் என்று மரியாதை கொடுத்துக்கொண்டு. பொன்னா என்றே கூப்பிடுங்கள்"

"ஏன் அப்பா அப்படிச் சொல்கிறாய்?"

"பிறகென்ன முதலாளி. என்னிடம் என்ன பணமா இருக்கிறது? எனக்கென்ன மரியாதை வேண்டியிருக்கிறது?" என்று கவலையோடு கூறினான். முதலாளிக்கு அவனைப் பார்க்கையில் பரிதாபமாக இருந்தது.

"இந்தாப்பா உன்னுடைய பணம் எங்கும் போய்விடவில்லை. நான்தான் எடுத்துக் கொண்டு வந்து பத்திரமாக வைத்திருக்கிறேன்" என்று கூறினார்.

"உண்மையாகவா முதலாளி?" என்று கண்களை அகலமாக விரித்து மகிழ்ச்சியுடன் கேட்டான்.

"ஆமாம், அந்தப் பணத்தோடு இன்னும் கொஞ்சம் பணம் போட்டு வங்கியில் உன் பெயரில் வைப்பு செய்துவிடுகிறேன். ஆனால் ஒன்று, எவ்வளவு பணம் வந்தாலும் குணம் மட்டும் மாறக்கூடாது. புரிகிறதா?" என்றார் முதலாளி.

"புரிகிறது முதலாளி. இனிமேல் அப்படி நடந்துகொள்ளமாட்டேன்" என்று கூறினான் பொன்னுசாமி.

**(கேட்டு இரசித்தது)**



# இத்தாலி கசியும் படகு நீரூற்று

இத்தாலியிலுள்ள கண்ணைக்கவரும் பல நீரூற்றுக்களில் ஒன்று "கசியும் படகு நீரூற்று" (Fountain of the Leaky Boat). பாண்டானாடெல்லா பார்காசியா (Fontana della Barcaccia) என்பது இதன் பெயர். இந்த நீரூற்று ரோமில் உள்ளது.

இந்த நீரூற்று 1627ஆம் ஆண்டுக்கும் 1629ஆம் ஆண்டுக்கும் இடையில் பியட்ரோ பெர்னினி என்பவரால் அவர் புதல்வர் பிரபல கட்டிக்கலைஞரும் சிற்பியுமான ஜியன் லொரொன்ஸோ பெர்னினியின் உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டது.

பிரபலமான ஒரு வாய்வழி தகவலின்படி இந்த வடிவம் எதனால் தேர்ந்தெடுக்கப்பட்டதென்றால், 1598ஆம் ஆண்டு டைபர் நதியில் ஒரு கொடூரமான வெள்ளம் ஏற்பட்டதைத் தொடர்ந்து தண்ணீர் வெளிறேிய பின்னர், ஒரு படகு சதுக்கத்தில் விடப்பட்டதை நினைவுகூரும் வகையிலாகும். இத்தாலியில் மூன்றாவது நீண்ட நதி இந்த டைபர் நதியாகும்.



இத்தாலியில் பல நீரூற்றுக்கள் இருந்தபோதிலும், இந்த நீரூற்று பலரையும் கவரக்கூடிய வகையில் அமைந்துள்ளது. டைபர் நதியின் வெள்ளத்தின்போது அங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஒரு படகின் மூலம் பெர்னினி ஈர்க்கப்பட்டதாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நீருக்கடியில் சிற்பப் பூங்கா

நீருக்கு அடியில் உள்ள சிற்பப் பூங்கா பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இந்த சிற்பப் பூங்கா, கிரெனாடாவின் (Grenada) மேற்கு கடற்கரையில் நீருக்கு அடியில் அமைந்துள்ளது.

இப்பூங்காவை பிரித்தானிய சிற்பியான ஜேஸன் டி கேயர்ஸ் டெய்லர் உருவாக்கினார். உலகின் முதலாவது நீருக்கடியில் உள்ள



சிற்பப்பூங்காவான இது 2006ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

விநோதமான இந்த சிற்பப் பூங்காவை நீர்மூழ்கிகள் மற்றும் கண்ணாடி அடிப்பகுதி படகு பயணத்தில் பயணிகள் பார்த்து இரசிக்கலாம்.

கிரெனாடா ஒரு கரிபியன் நாடு. தீவு என்றும் அழைக்கப்படும் இதனைச் சுற்றி பல தீவுகள் உள்ளன. ஸ்பைஸ் ஐல் (Spice Isle) என்றும் அழைக்கப்படும் இந்த மலைப்பாங்கான பிரதான தீவு, ஏராளமான சாதிக்காய் தோட்டங்களின் தாயகமுமாகும்.

மனைவி : உலகம் பூரா போய் தேடினாலும் என்ன மாதிரி மனைவி கிடைக்கமாட்டா...

கணவன் : எனக்கென்ன பைத்தியமாடி புடிச்சிருக்கு... மறுபடியும் உன்னை மாதிரியே தேட...!



# உலகில் மிகப்பெரிய பெருவிரல்

உலகில் மிகப்பெரிய பெருவிரலை உடைய நபர் அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் மாநிலத்தில் வாழ்கிறார்.

ஜெகொப் பினா என்னும் 25 வயதான இவர், தனது மிகப்பெரிய பெரும்விரலால், அன்றாடம் தான் அனுபவிக்கும் துன்பங்கள் பற்றிக் கூறுகிறார்.

இவர் பற்றிய செய்திகள் வெளியாகி வருவதாகவும், இதனால் அவருக்கு நிறைய பணம் கிடைத்தாலும் தான் மகிழ்ச்சியை அனுபவிக்கவில்லை என்று கூறுகிறார்.



இவருடைய இந்தப் பெருவிரலானது ஐந்து அங்குல நீளமுடையதாக இருக்கிறது.

பெருவிரல் இப்படி அமைந்திருப்பதால் இவர் பல்வேறு வகையில் மிகுந்த சிரமம் அடைவதாகக் கூறுகிறார். உதாரணத்திற்கு மொபைல் போனை பயன்படுத்துவதில் கூட அவருக்கு மிகுந்த சிக்கல் இருக்கிறதாம். வலது புறக் கையிலேயே இந்த விரல் இப்படி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 74ஆவது வயதில் முட்டையிட்ட உலகின் வயது முதிர்ந்த பறவை



உலகின் மிக வயது முதிர்ந்த விஸ்டம் என்னும் பெயருடைய அல்பட்ரோஸ் பறவை தன் 74 ஆவது வயதில் முட்டையிட்டுள்ளது.

அமெரிக்க மாநிலமான ஹவாயில் வாழும் இந்தப் பறவை அதனுடன் ஜோடியாக இருந்த பல ஆண் பறவைகளின் இறப்புக்குப் பின்னரும் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இப்பறவை முட்டையிட்ட ஆச்சரியமான தகவலை யு.எஸ் மீன் மற்றும் வனவிலங்கு சேவை அறிவித்துள்ளது.

வனவிலங்கு மேற்பார்வை மற்றும் உயிரியலாளரான ஜொன் பிலிஸ்னர் இதுபற்றிக் கூறுகையில், "இந்த முட்டை ஒரு சிறப்புமிக்க மகிழ்ச்சி" என்று பெருமிதத்துடன் கூறினார். அத்துடன் இந்த அமைப்பின் அதிகாரிகள் இந்த முட்டையிலிருந்து குஞ்சு வெளிவரும் என்று நம்பிக்கையுடன் கூறினார்கள்.

அல்பட்ரோஸ் பறவைகள் நீண்ட காலம் உயிர் வாழும் மற்றும் பறக்கும்போதே உறங்கும் இயல்புடையவை. ஐந்து ஆண்டுகள் உறங்காமல் பறக்கக்கூடியவை.

பெரிய கடல்பறவையான இதனை பசிபிக், அண்டார்டிகா மற்றும் அட்லாண்டிக் பெருங்கடலின் தெற்கு பகுதிகளிலும் காணலாம்.

இப்போது உலகில் இருக்கும் பெரிய அளவு பறவைகளில் இதுவும் ஒன்று.

அல்பட்ரோஸ் ஒவ்வொரு இனச்சேர்க்கை காலத்திலும் ஒரே ஒரு முட்டையை மட்டுமே இடும். இதனால் தான் 22 வகை அல்பட்ரோஸ் பறவைகளில் 21 இனங்கள் அழியும் நிலையில் உள்ளன.

இப்போது உலகில் இருக்கும் பறவைகளிலேயே மிகப் பெரிய இறக்கைகளைக் கொண்டது அல்பட்ரோஸ்தான். இவ்வளவு பெரிய இறக்கைகள் நீண்ட தூரத்துக்கு பறக்க உதவுகின்றன.

# நிஜத்தில் வாழ்ந்த ஓநாய் மனிதன்

## மோக்லி

**1873ஆம்** வருடம் உத்திரப்பிரதேசத்தில் புலன்சாகர் மாவட்டம். காட்டுப்பகுதியில் வேட்டையாடச் சென்ற ஒரு குழு, வித்தியாசமான ஒரு காட்சியைக் கண்டு தங்களது வாகனத்தை நிறுத்தியது.

அவர்கள் கண்ட காட்சி இதுதான். ஒரு ஆறு வயது மதிக்கத்தக்க சிறுவன் தன் நான்கு கால்களால் (இருகைகளும் கால்களாய்) ஊர்ந்து ஓநாய்கள் கூட்டத்துடன் சென்று கொண்டிருந்தான். இவர்களைக் கண்டதும் அவை ஒரு குகைக்குள் வேகமாக ஓடி மறைந்தன.

சிறுவனை மீட்க நினைத்தவர்கள் அந்த குகை வாசலில் நெருப்பை மூட்டவே, குகைக்குள் இருந்து ஓநாய் கூட்டங்கள் வெளியே வர ஆரம்பித்தன. அச்சிறுவனை வளர்த்த தாய் ஓநாய் முதலிலும், மற்றவை அடுத்தடுத்தும் சுட்டுக் கொல்லப்பட்டன. கைப்பற்றப்பட்ட அச்சிறுவன் உடனடியாக ஆதரவற்றோர் இல்லத்தில் சேர்த்து பராமரிக்கப்பட்டான்.

சனிக்கிழமை வந்து சேர்ந்ததால் அவனுக்கு தினா சனிச்சார் என்று பெயரிடப்பட்டது.

எவ்வளவு முயற்சி செய்தாலும் அவன் பேசவோ, படிக்கவோ, இரண்டு கால்களால் நடக்கவோ கற்றுக் கொள்ளவில்லை. சமைத்த உணவை



உண்ண மறுத்து பச்சை மாமிசத்தை உண்டு கொண்டிருந்தான். விலங்குகளின் பல்வேறு ஒலிகளை எழுப்பி, அந்த பகுதியை அலறவிட்டுக் கொண்டிருந்த அச்சிறுவன் வேறு வழியில்லாமல் உடைகளை அணிந்து கொண்டாலும், பெரும்பாலும் நிர்வாணமாக இருப்பதையே விரும்பினான்.

தனது பற்களை எலும்புகளால் தூய்மையாக்குவதை வழக்கமாக கொண்டிருந்தான். குளிரோ வெப்பமோ அவனை ஏதும் செய்யவில்லை. பத்து வருடங்கள் ஆகியும், மன அமைதியின்றி ஒருவித பயத்துடனேயே வாழ்ந்தான். மற்றவர்களோடு சேர்ந்து வாழ மறுத்தான். தனது குடும்பத்தை விட்டு முன் பின் அறிமுகமில்லாத வேற்றுலகமாகவே அந்த இடம் அவனுக்கு தோன்றியது.

அதே மாநிலத்தில் மணிப்பூர் பகுதியில் இது போன்று மீட்கப்பட்ட அவனைவிட மூத்த ஒரு சிறுவனை அவனுடன் பழக விட்டனர். (அக்கால கட்டத்தில் சுமார் நான்கு சிறுவர்கள் இது போல மீட்கப்பட்டிருந்தனர்) விரைவிலேயே அவன் மூலம் நடக்க பழகிக் கொண்டான்.

அவன் மனிதர்களைப் போல் எளிதாக ஏற்றுக் கொண்ட ஒன்று புகைபிடித்தல். கடைசியில் தொடர் புகைப் பழக்கம் அவனுக்கு காச நோய்க்கு வழிவகுத்தது.

மனிதர்களுக்கேயுரிய எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய இயலாமல் போன அந்த அப்பாவி 1895இல் கடுமையான காச நோயால் உயிரிழந்தான். இந்த சிறுவனின் வாழ்க்கை பற்றி அறிந்த ருட்யார்ட் கிப்ளிங் "தி ஜங்கிள் புக்" என்ற நாவலை எழுதினார். ஆனால் அதில் கூறப்பட்டது போல் அச்சிறுவனின் வாழ்க்கை அந்த அளவுக்கு மகிழ்ச்சியாக இருந்ததில்லை. விலங்குகளோடு விலங்காக போராட்டங்கள் நிறைந்த வாழ்க்கையையே வாழ்ந்து வந்தான்.

சூழ்நிலை ஒருவரை எந்த அளவு பாதிக்கும் என்பதை தினா சனிச்சாரின் கதை காலத்துக்கும் உணர்த்திக் கொண்டுதான் இருக்கும்.

## மனதை வென்ற மங்கையர்

# கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன்






இலங்கையில் எழுத்து, பத்திரிகை இலக்கியம், ஒலிபரப்பு என்று பல துறைகளில் "மின்னும் தாரகை"யாக விளங்கும் மூத்த பெண் ஆளுமை நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன்.

ஊடகத்துறையில் பெண்களின் குறிப்பாக முஸ்லிம் பெண்களின் பிரவேசம் மிகக் குறைவாக இருந்த 1975ல் பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி மூலம் வானொலியில் பிரவேசம் பெற்றவர் அவர். ஒலிபரப்புத் துறையில் மாதர் மஜ்லிஸ் பிரதித் தயாரிப்பாளராகவும் குரல் கொடுப்பவராகவும் திகழ்பவர். வானொலியில் தமிழ்ச் சேவையிலும், முஸ்லிம் சேவையிலும், கவியரங்கு சிறுகதை போன்ற பல நிகழ்ச்சிகளிலும் தொடர்ந்து பங்கேற்பவர். தொலைக் காட்சிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றிப் பிரகாசிப்பவர்.

எழுத்துத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும் அவரின் பங்களிப்பு அளப்பரியன. அவரின் முதலாவது கவிதை "பாவிநான் என்ன செய்வேன்"? என்ற தலைப்பில் மூத்த எழுத்தாளர் பன்னூலாசிரிரியர் மானா மக்கீன் பிரதம ஆசிரியராக இருந்த "உதயம்", பத்திரிகையில் வெளியாகியிருந்தது

சுயாதீனப் பத்திரிகை சமாஜத்தின், தினபதி – சிந்தாமணிப் பத்திரிகைகளில் 1980 முதல் 1990 வரை ஆசிரிய பீடத்தில் கடமையாற்றிய திருமதி நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன் பத்திரிகைத்துறை ஜாம்பவான் எஸ்.டீ. சிவநாயகத்தால் புடம்போடப்பட்டவர்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் தகவல் அதிகாரியாக நியமனம் பெற்றிருந்த அவர், அத்திணைக்–களத்தின் "திங்கள்" என்ற மாதாந்த சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் "புத்தொளி" என்ற "மாதாந்த" பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் செயற்பட்டார்.

திணைக்களத்தின் "தெசதிய" என்ற சிங்கள சஞ்சிகையின் சிறப்புக் கட்டுரை எழுத்தாளராகவும் அவரின் எழுத்துப் பணி விரிந்தது. அச்சஞ்சிகையில் அவர் அரசியல் தலைவர்களை நேர் கண்டு எழுதிய நேர்காணல் பெரும் வரவேற்பைப் பெற்றதோடு, அரச கரும மொழித் திணைக்களத்தின் "இன ஐக்கியத்துக்கான ஊடகப் பங்களிப்பு"க்குரிய விருதையும் பொற்கிழியையும் பெற்றுக் கொடுத்தது.

"ஒளி அரசி" என்ற மாதாந்த மாதர் சஞ்சிகையின் ஆசிரியர் பீட ஆலோசகராகவும் அதன் சிரேஷ்ட எழுத்தாளராகவும் இவர் மிளிர்ந்துள்ளார். தகவல் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ செய்தி இணையத்தளமான www.news.lk என்ற இணையத்தளத்தின் தமிழ்ப் பிரிவில் தகவல் அதிகாரியாக (Information Officer) கடமையாற்றிய அனுபவத்தோடு பத்திரிகை, எழுத்து, இலக்கியத் துறையில் ஐந்து தசாப்தங்களாக இயங்கி வருபவர்.

**யாதீனப் பத்திரிகை சமாஜத்தின், தினபதி - சிந்தாமணிப் பத்திரிகைகளில் 1980 முதல் 1990 வரை ஆசிரிய பீடத்தில் கடமையாற்றிய திருமதி நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன் பத்திரிகைத்துறை ஜாம்பவான் எஸ்.டீ. சிவநாயகத்தால் புடம்போடப்பட்டவர்**

கட்டாரிலிருந்து வெளிவரும் "துணிந்தெழு" என்ற சஞ்சிகையின் ஆசிரிய பீட ஆலோசகராகவும் திகழ்கிறார் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்.

பெண் எழுத்தாளர்களை அடையாளப்படுத்துவதில் முன்னிற்பவராகவும் உள்ள இவர், இதுவரை பண்பாடும் பெண்– கட்டுரை (1995), மின்னும் தாரகைகள்– (2018)– இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் (140) பற்றிய ஆய்வு நூல், நஜ்முல் ஹுஸை–னின் நட்சத்திரக் கவிதைகள் (2017) தொகுப்பாசிரியர் மற்றும் பூஞ்செண்டு கவிதைத் தொகுப்பு (2018), திதுலன தாரக்கா (மின்னும் தாரகைகளை சிங்களத்திலும் வெளிச்சமிட்ட நூல்) போன்ற ஐந்து நூல்களை வெளியிட்டிருக்கின்றார்.

தனது ஊடக, எழுத்துப் பணிகளுக்காக பல விருதுகளையும் பரிசுகளையும் பெற்றிருக்கும் நூருல், மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டிலும், தாய்லாந்தின் தலைநகரான பெங்கொக் மற்றும் இந்தியா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற கலை இலக்கிய நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு சிறப்புச் சேர்த்துள்ளார்.

இளம் மாதர்களின் முஸ்லிம் சங்கத்தின் ஊடக இணைப்பாளர், உப தலைவி, அகில இலங்கை சமாதான நீதவான், கொழும்பு உயர் நீதிமன்ற ஜூரர் சபை உறுப்பினர் மற்றும் நீதி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட அரச மொழிபெயர்ப்பாளர் என்று பல பதவிகளை வகித்து வரும் நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன் மனதை வென்ற மங்கை என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ■






# அழகுக்கு அழகு சேர்க்க

பாதாம் எண்ணெய், கற்றாழைச்சாறு மற்றும் பன்னீர் சேர்ந்த கலவையைக் கருவளையம் இருக்கும் பகுதிகளிலோ, முகம் முழுக்கவோ இட்டு, 10, 15 நிமிடங்கள் வைத்திருந்து, சவர்க்காரத்தைத் தவிர்த்து வெறும் தண்ணீரில் முகத்தைக் கழுவவும். இதைத் தொடர்ந்து பின் பற்றி வந்தால் கருவளையம் படிப்படியாக மறையும்.

சருமத்தில் அதிக எண்ணெய்ப் பசை ஏற்படும்போது பக்டீரியாவும் எண்ணெய்யும் சேர்ந்து பரு உருவாகலாம். எனவே, முகத்தை அடிக்கடி கழுவலாம். முல்தானி மிட்டி, கஸ்தூரி மஞ்சள், மாவாக அரைத்த கறிவேப்பிலை ஆகியவற்றைக் கலந்து ஃபேஸ் பெக்காக போடலாம். பருவைக் கிள்ளும்போது அதிலுள்ள தொற்று சுற்றியிருக்கும் இடங்களிலும் பரவிப் பரு அதிகமாகும். பருவைக் கிள்ளி எடுக்கும்போது அங்குக் குழி ஏற்படலாம். அதனால், பருக்களைத் தொடாமல் இருப்பது அவசியம்.

நாற்பது வயதுக்கு மேல், பலருக்குக் கழுத்துப் பகுதியில் மருக்கள் வருகின்றன. கழுத்தில் அணிகிற நகையால் ஏற்படும் உராய்வு, கழுத்தில் தங்கும் வியர்வைப் போன்றவை இதற்குக் காரணமாக இருக்கலாம். கஸ்தூரி மஞ்சள், வேப்பிலையை அரைத்து மருவில் தொடர்ந்து போட்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும். சில மருக்களை எலெக்ட்ரிக் காட்டரைசேஸன் (Cauterization) அல்லது லேசர் முறையில் எடுக்க வேண்டியிருக்கலாம்.

சருமத் துவாரங்களில் அழுக்கு அடைவதே "பிளாக் ஹெட்ஸ்" எனப்படுகின்றது. பருக்கள் வந்துபோன இடத்திலும் இது வரலாம். கன்னம், மூக்குப் பகுதிகளில் இது அதிகமாகக் காணப்படும். பிளாக் ஹெட்ஸை நாமாக எடுக்க முயலக்கூடாது. தற்போது இதை நீக்குவதற்கு, அழகு நிலையங்களில் பல புதிய சிகிச்சை முறைகள் உள்ளன. அவற்றைப் பின்பற்றலாம்.

கருமையான உதடுகளுக்கு மிதமான வெந்நீர் ஒத்தடம் கொடுக்கவும். பின்பு "லிப் பாம்" பயன்படுத்தலாம். ரோஜா இதழ்களை சீனி கலந்த நீரில் கலந்து உதடுகளில் வைத்து வர, கருமை நீங்கிய உதடு கிடைக்கும்.



# எப்படிப் போடலாம் லிப்ஸ்டிக்?




- மெல்லிய உதடு, தடிமனான உதடு என உதடுகளின் அமைப்பு நிறம் ஆகியவற்றை பொறுத்து லிப்ஸ்டிக் பூசி மேலும் அழகாக்கலாம்.
- தடித்த உதடுகள் உள்ளவர்கள் உதட்டுக்கு உட்புறமாக லிப்ஸ்டிக் போட வேண்டும். இயற்கை நிற லிப்ஸ்டிக்கை லேசாக தடவினால் போதும்.
- மெல்லிய உதடு உள்ளவர்கள் கீழ் உதட்டில் 'டார்க்' நிறமும் 'லைட்' நிறத்தை மேல் உதட்டிலும் பூச வேண்டும். பிறகு உதட்டுக்கு வெளியில் பென்சிலால் கோடு போட வேண்டும். தடித்த உதடு என்றால் உட்புறமாக போடலாம்.
- உதடுகளின் ஈரப்பசையை நீக்கிவிட்டு லிப்ஸ்டிக் போட்டால் சீக்கிரம் அழியாது.
- காலையில் லைட் கலர் லிப்ஸ்டிக்கும் மாலையில் பளிச் நிறத்திலும் போடவேண்டும். ஆடைக்கு ஏற்ற நிறத்தை தேர்ந்தெடுத்து போடலாம்.
- டார்க் கலர் போட்டால் வயது அதிகமாக காட்டும்.
- லைட் கலர் கவர்ச்சியாக இருக்கும் .
- வீட்டில் இருக்கும் போது லிப்ஸ்டிக் பூச வேண்டாம். அடிக்கடி உபயோகித்தால் உதடுகள் கருமையாகி விடும்.




# கூந்தலுக்கான அன்றாடப் பராமரிப்பு

- வாரம் இரண்டு அல்லது மூன்று முறை மட்டுமே, ஷெம்போ போட்டு கூந்தலை அலச வேண்டும். தவிர காற்றில் மட்டுமே முடியை உலர வைக்க வேண்டும். சுத்த மான தேங்காய் எண்ணெய்யே போதுமானது.
- கூந்தல் சற்றே முரடாக வறண்டு போனால், எண்ணெயில் செம் பருத்திப் பூவை போட்டு இலேசாக கொதித்ததும், அதைத் தடவிய பின் கழுவி வந்தால் கூந்தல் மிருதுவாக மாறும்.
- தினமும் பாதாம் எண்ணெய்யை கூந்தலின் வேர்க் கால்களில் பூசி வர கூந்தல் வலுப்பெறும்.
- முட்டையின் மஞ்சள் கருவை தலை முடியில் தேய்த்து சில மணி நேரம் விட்டு கழுவினால், உடைந்த கூந்த லைப் போக்கி, கூந்தல் நன்றாக வளரும்.
- தலைக்கு பயன்படுத்தும் சீப்பு, ப்ரஷ், துவாய் ஆகியவற்றை அடிக்கடி சுத்தப்படுத்த வேண்டும். 'ஹேர் டிரையர்' உபயோகிப்பதை தவிர்ப் பது நல்லது.
- அகத்திக்கீரை அல்லது பொன் னாங்கன்னி கீரையை அரைத்து தலைக்கு தேய்த்து வந்தால் முடி அடர்த்தியாக வளரும். எண்ணெயுடன் வெந்தயப்பொடியை சேர்த்து, தலையில் தடவி ஊற வைத்து குளித்தால் முடி நன்றாக வளரும்.
- புரோட்டீன் சத்து அதிகம் உள்ள உணவை சேர்த்துக் கொண்டால், முடி அடர்த்தியாக வளரும்.
- கற்றழைச் சாற்றில் எண்ணெய் கலந்து தலையில் தேய்த்தால் கூந்தல் அடர்த்தியாக வளரும்.
- நரைமுடியைத் தவிர்க்க சிறிது கருவேப்பிலை அரைத்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் நரை முடி கருமை பெறும்.
- தேநீர் மற்றும் கோப்பி அதிகம் குடிப்பதாலும் பித்த நரை உண் டாகும். எனவே, அதை தவிர்ப்பது நல்லது.
- மருதாணி, செம்பருத்தி, கருவேப் பிலை மூன்றையும் சம அளவில் எடுத்து அரைத்து, தலையில் தேய்த்து குளித்தால் நரைமுடி மாறும்.
- பேன் தொல்லை அதிகமாக இருந் தால், சீத்தாப்பழ வித்தை, இரண்டு நாட்கள் காய வைத்து தூளாக்கி, தேங்காய் எண்ணெய்யில் கலந்து தலைக்கு தடவி குளிக்க வேண்டும்.
- பொடுகு நீங்க, வால் மிளகை ஊற வைத்து பால்விட்டு அரைத்து, தலையில் தடவி குளிக்கலாம்.
- தேநீரை வடிகட்டிய பின், மிஞ்சும் தேயிலைத் தூளில் எலுமிச்சை சாறை பிழிந்து தலையில் தேய்த்துக் குளித்தால் முடி பளபளப்பாகும்.
- சிறிது சாதம் வடித்த கஞ்சியில் ஷெம்போவை ஊற்றி தலையில் தேய்த்து குளித்தால், எண்ணெய்ப் பசை மற்றும் அழுக்கு நீங்கி கூந்தல் பளபளபாகும்.
- தேங்காய் பாலைத்தலையில் ஊற வைத்துக் குளித்தால் முடி உதிர்வது நிற்கும்.






# முட்டை கார தோசை

**தேவையான பொருட்கள் :**

இட்லி மா - 2 கோப்பை
பெரிய வெங்காயம் - 01
பச்சை மிளகாய் - 2
முட்டை - 2
மஞ்சள் தூள்
மிளகாய் தூள் - 4 தேக்கரண்டி
துண்டு மிளகாய் - 1 தேக்கரண்டி
இஞ்சி பூண்டு விழுது - 1 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
கருவேப்பிலை
எண்ணெய்

**செய்முறை:**

⏮ அரைத்து வைத்துள்ள இட்லி மாவை, ஒரு கோப்பையில் சேர்த்து, அதனுடன் ஒரு பெரிய வெங்காயத்தை சிறிது சிறிதாக வெட்டி சேர்த்துக் கொள்ளுங்கள்.

⏮ ஒரு பச்சை மிளகாயை காம்பு நீக்கி வெட்டி சுத்தம் செய்து சிறிதாக வெட்டி, அதனுடன் சேர்த்துக்கொள்ளுங்கள்.

⏮ இவற்றுடன் மஞ்சள் தூள், துண்டு மிளகாய், தனி மிளகாய் தூள் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளுங்கள். இதனுடன், இஞ்சி பூண்டு விழுதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

⏮ எல்லாவற்றையும் நன்கு ஒருமுறை கலந்து விடுங்கள். இதனுடன் தேவையான அளவிற்கு உப்பு சேர்த்துக் கொள்ளுங்கள்.

⏮ ஒரு கொத்து கருவேப்பிலையை கழுவி சுத்தம் செய்து சிறிதாக வெட்டி, அதில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

⏮ பின்னர் கடைசியாக ஒரு முட்டையை உடைத்து ஊற்றி, நன்கு கலந்து விடுங்கள்.

⏮ ஒரு ஐந்து நிமிடம் அப்படியே ஊற விட்டு விடுங்கள். அதன் பிறகு சூடான தோசை கல்லை அடுப்பில் வைத்து காய விடுங்கள்.

⏮ தோசை கல் காய்ந்ததும் ஒன்றரை கரண்டி மாவை எடுத்து மெல்லியதாக தேய்த்து பரப்பி விடுங்கள்.

⏮ சுவையான முட்டை கார தோசை தயார்.



# 'Nepotism' என்பதற்கு இணையான ஒரு தமிழ்ச்சொல் உள்ளதா?




Nepotism என்னும் சொல் இத்தாலிய வார்த்தையான nepotismo என்பதிலிருந்து வந்தது, இது மருமகன் என்று பொருள்படுகின்ற nepos என்ற லத்தீன் மூலத்தை அடிப்படையாகக் கொண்டது. இடைக்காலம் முதல் 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை, சில கத்தோலிக்க பாப்பரசர்களும் பிஷப்புகளும் – பிரமச்சாரிய உறுதிமொழி எடுத்திருந்ததால் பொதுவாக சட்டபூர்வமான சந்ததி இல்லாதவர்கள் – தங்கள் மருமகன்களுக்கு தந்தைகள் அடிக்கடி வழங்கிய பதவிகளை வழங்கினர் என்கிறது விக்கி பீடியா, மேலும் இதற்கு “குருதிச்சலுகை“ என்றொரு சொல் இணையத்தில் காணப்படுகிறது, அது பொருத்தமானதாக உள்ளது.

Nepotism குறித்த நண்பர்கள் சிலரின் ஆரோக்கியமான கருத்துக்களை கீழே தருகிறேன்.

(1) உறவுச்செல்வாக்கு, உறவாதரவு,உறவுச்சலுகை போன்ற சொற்களைக் குறிப்பிட்டு, சலிகையின் திரிதலே சலூகை என்கிறது சென்னைப்பேரகராதி என்கிறார் ரமணிதரன் கந்தையா,

(2) சில ஆங்கில சொற்களுக்கு நீங்கள் எப்படி முயலினும் தமிழில் சொல் காண முடியாது. அந்த

**சில ஆங்கில சொற்களுக்கு நீங்கள் எப்படி முயலினும் தமிழில் சொல் காண முடியாது. அந்த நேர்த்தி தமிழில் இல்லை, என்று சொன்னால், “என்னடா...? மூத்த பாஷையிலும் வார்த்தை கிடையாதா..”, என கொடுக்கு கட்டுவோரே உளர்**

நேர்த்தி தமிழில் இல்லை, என்று சொன்னால், “என்னடா...? “மூத்த” பாஷையிலும் வார்த்தை கிடையாதா, என கொடுக்கு கட்டுவோரே உளர்.

NEPOTISM இற்கு எவ்வகைப் பதத்தை பிரயோகிப்பினும் உள்ளுள்ளே உள்ள உள்ளர்த்தம் மாறும். STRAWBERRY இற்கு ”செம்புற்று” என்று இறுமார்வது போல் தான் இதுவும். உலங்கு வானூர்தி, வெதுப்பகம், பேருந்து, பார ஊர்தி, ”மெய்நிகர்” என்றென்ன கூறினும் அவை நிஜக்கருத்தைத் தரா. கண்டபடி தமிழ்ச் சொல்லைக் கண்டோமென, இறும்பூதெய்த வேண்டியது தான்.

“70- கள் வரை எமது தேசிய வாகனமாக கருதக்கூடிய bicycle இற்கு இன்றுவரை எவரும் பொருத்தமான, செம்மை அர்த்தங்கொண்ட தமிழ்ச்சொல்லை காணவில்லை. எனவே, பைசிக்கிள் எனக் கூறி மேல் போவதே நல்லது.

Transliteration in any language, in this case Tamil is much-much better than, wrongful translation.







ஆக! NEPOTISM என்பதன் தமிழ்ச்சொல்,-“நெப்பொற்றிஸம்” தான்.....! வேண்டுமாயின், - LORRY ஐ லாரி என்றும் PLATFORM ஐ பிளாட்பாரம் என்றும் சொல்வோர் மொழியில், “நெப்போட்டிசம்” என்று கூறி விடுக. இல்லாவிடில், “தன் குழாத்திற்கு சலுகை” என்று இழுபட்ட PHRASE சொல்லி இழுபடவா முடியும்...? என்பது சிறிசு என்பவரின் கருத்து

(3) இந்த வார்த்தை நெப்போலியன் தனது சகோதரர், உறவினர்களை பதவியில் அமர்த்தியதில் இருந்து ஆரம்பிக்கிறது. எனவே, இதற்கு நேரடியான தமிழ் வார்த்தை காணமுடியாது. நெப்போலியன் வாதம் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், அது எமது சூழலுக்கு அதிகம் பொருந்தாது. குருதிச்சலுகை பொருத்தமானது. தெரிந்தவருக்கு முதலிடம் என்றும் எங்கோ வாசித்த ஞாபகம்.

“எனது அமைப்பில் திறமையைவிட விசுவாசத்திற்கே முதலிடம்” என்று யாரோ சொன்னது இந்த நேரத்தில் ஞாபகம் வந்து தொலைக்கிறது” என்கிறார் பிரிதிவிராஜ் குலசிங்கம்.

(4) "Nepotism" என்ற வார்த்தையின் மூலத்திலிருந்து பார்த்தால், தமிழ் மன்னர்களிடமும், அதிகாரவர்க்கத்தினரிடமும் கூட இது சார்ந்த வார்த்தை இருந்திருக்கிறது. அதன் அடிப்படையில் இதனை “குடிசார்பியம்”, அல்லது “உறவுசார்பியம்” எனலாமா? நம்மிடையே இருக்கும் தமிழ் அறிஞர்கள் பதில் தருவார்களா? ..Ism என்பதை இயல் என்ற பொருளில் பாவிப்பதைக் கண்டிருக்கிறேன். ஆகவேதான், உறவு+சார்பு+இயல்= உறவுசார்பியல் என்றால் பொருந்தும்” என்கிறார் கந்தையா நாமாஸ்.

-குமாரவேலு கணேசன்-




# 1930 இல் வெளிவந்த பெண் உரிமை இதழ் ‘சரிதா’




“சரிதா” என்பது 1930 ஆண்டு இலங்கையில் வெளிவந்த ஒரு முக்கிய பெண் உரிமை தமிழ் இதழாகும். குறிப்பாக இந்த இதழ் ‘பெண்களின் உரிமைகள், ‘சமூக சீர்திருத்தங்கள்’ , மற்றும் ‘சமகால பிரச்சினைகள்’ தொடர்பான விடயங்களை முன்வைத்து, அக்காலகட்டத்தில் சமூகத்தில் ஒரு மாற்றத்தினை உருவாக்க முயன்றது. இதன் முக்கிய அம்சங்கள் மற்றும் அதன் வரலாற்றுப் பின்னணி குறித்த சில விபரங்கள் வருமாறு :

**ஆரம்பம்**

‘சரிதா’ 1930-களில் வெளிவந்த ஒரு இதழாகும். இலங்கையில் பெண்ணுரிமை குறிப்பாக பெண்கள் கல்வி, உரிமைகள் மற்றும் சமூக முன்னேற்றத்தை இது மையமாகக் கொண்டிருந்தது.

மக்கள் சமூகத்தில் மாற்றத்தை நோக்கி அன்றைய சமூகத்தில் பெண்களுக்கு இருந்த குறைபாடுகளை (கல்வி, வேலை வாய்ப்பு, கருத்துரிமை, அரசியல் பங்கு) இது சுட்டிக்காட்டியது. பெண்கள் வீட்டுக்குள் மட்டுமல்லாமல் சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல் துறைகளிலும் பங்களிக்க வேண்டும் என வலியுறுத்தியது.

கல்வி மற்றும் சமூகம் பெண்கள் கல்வியின் அவசியத்தை எடுத்துக்காட்டியது. பெண்கள் கல்வியில் முன்னேறாவிடில் அது சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தாது என்ற அடிப்படையில் கட்டுரைகள் எழுதப்பட்டன.

சமூக சீர்திருத்தங்கள் விலங்காட்டங்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை, மகளிர் ஒடுக்குமுறை போன்ற பழமையான முறைகளை இந்த “சரிதா“ இதழ் எதிர்த்தது. பெண்களுக்கு பொது வாழ்க்கையில் முக்கிய பங்களிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற உணர்வையும் வளர்த்தது.

பெண்கள் உரிமை தொடர்பான ஆக்கங்கள் பெண்களின் பொருளாதார சுதந்திரம்: தொழில்கள், வணிகம் ஆகிய துறைகளில் பெண்கள் பங்கு பெறுதல். மணமுறை மற்றும் பெண்கள் மீது கட்டுப்பாடுகள் குறித்த விமர்சனங்கள். சமூகத்தில் பெண்ணியம் (Feminism) பற்றிய ஆதரவான கருத்துக்களுக்கு இதில் முதலிடம் அளிக்கப்பட்டது.

இந்த இதழ் வெளிவந்த கால கட்டமும் அதனாலேற்பட்ட தாக்கத்தினாலும் பெரும்பாலும் மிதமான புரட்சிகர கருத்துக்களை “சரிதா“ கொண்டிருந்தது. ஒப்பீட்டளவில் இது ஆச்சரியமான விழிப்புணர்வினை ஏற்படுத்தியதுடன், கிராமப்புற மக்களிடமும் நகர்ப்புற மக்களிடமும் சமமாக வெளிச்சத்தினை பரவச் செய்தது எனலாம்.

-சின்னக்குட்டி தாசன்-

# அரச இலக்கிய விருது விழாவில் சிறந்த ஆய்வு நூலுக்கான விருது

## அருட்தந்தை ஞானமுத்து பிலேந்திரன் பெற்றார்

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்கள அரச இலக்கிய ஆலோசனைக் குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட அரச இலக்கிய விருது விழா அண்மையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது இலக்கிய பரப்பில் நாவல் இலக்கியம், சிறுகதைத் தொகுப்பு, கவிதை இலக்கியம், நாடக இலக்கியம், சிறுவர் இலக்கியம், புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு, நானாவித இலக்கியம், இளையோர் இலக்கியம், இலக்கிய திறனாய்வு, பாடலாக்கம், அறிவியல் புனைகதை, மொழிபெயர்ப்பு நாவல், மொழிபெயர்ப்பு சிறுகதை என 2023 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூல்களில் சிறந்த நூல்களை எழுதியவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.




அதன்படி, அருட்தந்தை ஞானமுத்து பிலேந்திரன் சிறந்த ஆய்வு நூலுக்கான ‘சாகித்திய’ விருதை பெற்றார். ‘போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் கத்தோலிக்கம்’ எனும் அருட்தந்தை பிலேந்திரன் எழுதிய நூலே 2023 ஆம் ஆண்டின் சிறந்த புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பாக தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், இது போர்த்துக்கேயர் ஆட்சிக்கால கத்தோலிக்கம் பற்றி வெளிவந்த முதல் ஆய்வியல் நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஈழத்து தமிழ் இலக்கிய உலகின் பீஷ்மர்: ஏ.ஜே. கனகரத்னா (1934-2006)

## ‘ஆங்கில - தமிழ்’ அறிவுப் பாரம்பரியத்தின் முக்கிய ஆளுமை!

இலக்கியத்தை வாழ்வாக வரித்துக் கொண்ட ஏ.ஜே. கனகரத்னா பலதரப்பட்ட ஆற்றல்களை தன்னகத்தே கொண்டு மிளிர்ந்தவர். இவர் புலமையாளர், அறிவுஜீவி, நூல் மதிப்பீட்டாளர், ஆங்கில-தமிழ் எழுத்தாளர், விமர்சகர், ஆங்கில-தமிழ், தமிழ்-ஆங்கில மொழிபெயர்ப்பாளர், பத்திரிகையாளர், பத்திரிகை ஆசிரியர், ஆங்கில ஆசிரியர் போன்ற தகைமைகளைக் கொண்டவராக இருந்தார். உலக இலக்கியத்துடன் இறுதிவரை தன்னைப் பரிச்சயப்படுத்திக் கொண்டு வாழ்ந்து வந்த இவருக்கு எந்த அறிவுப் புலமும் அந்நியமானதல்ல. அவற்றில் தன் தனி ஆளுமையை வெளிப்படுத்தியவர்.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வந்த ஏ.ஜே. கனகரத்னா10-10-2006 இல் கொழும்பில் காலமானார். பல எழுத்தாளர்களுக்கு ஊக்கமளித்து வந்த இவர். ஈழத்துத் தமிழ் எழுத்தை உண்மையாக நேசித்தவர் இவர். நேர்மையும் அடக்கமுமே இவரது சிறப்பியல்பு எனக் கொள்ளலாம். “காலம்“ சஞ்சிகை அவருக்கு தனது 16 வது இதழைச் சிறப்பிதழாக வெளியிட்டுக் கௌரவித்தது.



யாழ்ப்பாணத்து ஆங்கில தமிழ் அறிவுப் பாரம்பரியத்தின் மிக முக்கியமான ஆளுமையாக இவர் திகழ்ந்தமை ஒரு வரப்பிரசாதமாகும்.

முற்போக்குக் கொள்கைகளில் பற்றுக் கொண்ட அதேவேளை ஆன்மீகத்தில் நம்பிக்கை வைத்தவராகவும் இவர் பார்க்கப்படுகின்றார். மனித நேயமிக்க ஏ.ஜே. சாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றில் கட்டுண்டு அலைக்கழியாதவராகவும் நோக்கப்படுகிறார். மானுடத்தை மதித்த பெரும் மனிதர் என்றும் சிறியன சிந்தியாதான் என்றும் நண்பர்களால் புகழப்பட்டவர். ஈழத்துத் தமிழ் இலக்கிய எழுத்தாளர்கள், அவரது நெருங்கிய நண்பர்கள் என அனைவரும் இன்றுவரை கொண்டாடும் புத்திஜீவியாக இவர் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

மறைந்த எழுத்தாளர் எஸ் பொன்னுத்துரை (எஸ் பொ) அவர்கள், ஏ ஜே குறித்து கீழ்வருமாறு பதிவிடுகிறார்;

“ஏஜே படைப்புலகிலும் இலக்கிய உலகிலும் அதிசயப் பிறவி. ஈழத்தின் இலக்கியவாதிகள் பலர் இவரால் திசையும் திறனும் பெற்றார்கள். ஞானத்தினைப் பிறருக்குப் பயன்படுத்தும் ஊழியமாக நியமித்து வாழ்ந்த நைட்டிய பிரமச்சாரி அவர். இலக்கியத்தின் நுட்பங்கள் அறிந்த சுழியர். பண்பும் மனச்சாட்சியும் அவர் சேவிப்பவை. பலர் உச்சங்களை அடைவதற்கு ஏணியாய் வாழ்ந்தவர். ஒரு வகையில் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகின் பீஷ்மர்” என்றும் எஸ்பொ இவரை கூறுவார்.

ஏ ஜே யுடன் நீண்டகால நடப்புறவினை கொண்டிருந்த எஸ்பொ ஏஜே யின் “மத்து“ கட்டுரைத் தொகுதியின் முன்னுரையில் அவரது கல்வி குறித்து குறிப்பிடுகையில், ”ஏஜே ஆங்கில மொழியை வீட்டு மொழியாகப் பயிலப்படும் சூழலிலே பிறந்தார். லத்தீன் மொழியை துணை மொழியாகக் கற்றதுடன் தமிழில் பேசுவதும் சிந்திப்பதுவும் அறிவின் பாமரத்தனத்திற்கு சான்று என்று பிழை படக் கருதும் ஆங்கிலேயர் ஆட்சியினால் தோற்றுவிக்கப்பட்ட சர்வ ஆங்கில மோகம் என்ற சூழலில் அதன் வாரிசுக் கொழுந்தாக, அவர் ஆரம்ப- இடைநிலைக் கல்வியைப் பெற்றார். இலங்கைப் பல்கலைக் கழகத்திலே சிறப்புப் பட்டம் பெறுவதற்கு ஏற்ற பாடமாக ஆங்கிலத்தையே தேர்ந்தெடுத்தார். ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியராகப் பணிபுரிந்து , இடையில் “ சிலோன் டெய்லி நியூஸ்“ என்ற இலங்கையின் பிரபல ஆங்கில தினசரியின் ஆசிரியர் குழாமில் பணியாற்றியுமுள்ளார் ” எனவும் அறியத் தருகின்றார்.




ஆற்றலும் அறிவும் மிக்க பேராசான் ஏஜே யின் எழுத்துக்களைக் கற்பதன் மூலம் அவரின் தனித்துவத்தை நாம் அறிந்து கொள்ளலாம்.

**ஏஜே யின் ஆக்கங்கள் சில:**

‘Regi Siriwardena Vol-I’, ‘Regi Siriwardena Vol-II’, ‘அவசர காலம் 79’, ‘இந்து சமயத்தின் மூல மொழி’, ‘எல்லாளன் சமாதியும் வரலாற்று மோசடியும்’, ‘மத்து’ , ‘மார்க்சியமும் இலக்கியமும்’ , ‘மார்க்சியவாதிகளும் தேசிய இனப் பிரச்சினையும்’.



## ஒருமுறை நாம் பிறந்தால்...

மகத்துவம் நிறைந்த பூமி
செய்து விட வா தோழனே.....
அப்போது அங்கே
மனித நேசமே
அகராதியாகும்.....

அன்பின் மொழி பாஷையாகும்....
மனித ஜாதி ஒன்றாக மாறிவிடும் ....
கீழ்மை குணங்கள் மனிதனை விட்டு
நீங்கிவிடும்.....
அதனால் அங்கே இனிப்புக்கு
காலையை கிழக்குகள் தரும்

காதலும் உண்மை உறவும்
நட்பும் பாசமும் எல்லாமே எல்லாமே
நாளும் கேட்கும் பூபாளமாகும்.....
அதனால் குயில்கள்
கூவும் அங்கே.....

- தனேஸ்வரி, யாழ்ப்பாணம் -

## ஆக்கங்களை அனுப்பலாம்

“இலக்கிய லயம்” பக்கத்திற்கு ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. இலக்கிய கட்டுரைகள், நிகழ்வுகள், மாற்று சிந்தனைகள் என இன்னோரன்ன அம்சங்களை நீங்கள் அனுப்பலாம். அவை தரம் கண்டு “ஒருவன்“ ஞாயிறு பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். ஆக்கங்களை unicode முறையில் டைப் செய்து மின்னஞ்சலில் அனுப்பலாம்.

**அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி**

Oruvanelakkiyam@gmail.com





அல்ஹாம்,
தரம் 06,
பாண்டிபொல


அதீஃப்,
தரம் 02,
பாண்டிபொல


எம்.எஸ்.சஹ்ரா,
தரம் 03,
நு/சாஹிரா
வித்தியாலயம்,
நுவரெலியா



எம்.ஏ.எஸ்.எம்.ஷாபிர்,
தரம் 05,
நு/சாஹிரா
வித்தியாலயம்,
நுவரெலியா



**குறளும் பொருளும்**

அதிகாரம் 2 : வான்சிறப்பு

**குறள் 19:** தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம் வானம் வழங்கா தெனின்
**பொருள்:** இப்பேருலகில் மழை பொய்த்து விடுமானால் அது, பிறர் பொருட்டுச் செய்யும் தானத்திற்கும், தன்பொருட்டு மேற்கொள்ளும் நோன்புக்கும் தடங்கலாகும்.

**குறள் 20:** நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும் வானின் றமையா தொழுக்கு
**பொருள்:** உலகில் மழையே இல்லையென்றால் ஒழுக்கமே கெடக்கூடும் என்ற நிலை இருப்பதால், நீரின் இன்றியமையாமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

## உருவத்தை வரையுங்கள்



# பெரியார் சொல் தட்டாதே!

ஒரு காட்டில் புறாக்கள் கூட்டமாக சேர்ந்து ஒரு ஆலமரத்தில் வாழ்ந்து வந்தன. அவற்றில் ஒரு வயதான புறாவும் இருந்தது. புறாக்கள் எல்லாம் இரை தேடி வந்து மரத்தில் அமரும். அப்போது, வயதான புறா தன் அனுபவங்களைக் கூறும்.

அப்போது நிறைய புறாக்கள், "பழங்கதைகள் சொல்லி எங்களுக்கு ஏன் வீணாக அறிவுரை சொல்லுறீங்க, நாங்களே யோசிக்கும் அளவுக்கு எங்களுக்கும் அறிவு இருக்குது" என்று உதாசினப்படுத்தின.

ஒரு நாள் அனைத்து புறாக்களும் சேர்ந்து உணவு தேடி சென்றன. அப்போது ஓரிடத்தில் பறவைகளைப் பிடிக்க வேடன் ஒருவன் வலை விரித்திருந்தான், அதன் அடியில் பெரிய



பெரிய நெல்மணிகளை கொட்டியிருந்தான். அப்போது, புறாக்கள் அனைத்தும் அந்த நெல்மணிகளை சாப்பிட திட்டமிட்டன, ஆனால் வயதான புறா, "அது வேடன் விரித்த வலை, நாம் போய் நெல்லை சாப்பிட்டால் மாட்டிக் கொள்வோம், எனவே வேறு இடத்தில் இரைத் தேடலாம்" என்றது.

ஆனால் மற்றவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. வலையில் மாட்டாமல் நெல்மணிகளை சாப்பிட போகிறோம் என்று கூறி வலையின் மீது சாமர்த்தியமாக அமர்ந்து சாப்பிட்டன. அப்போது, வயதான புறாவைப் பார்த்து கேலி செய்தன மற்ற புறாக்கள்.

திடீரென்று ஒரு புறா நிலை தடுமாறி ஒரு புறா மேல் விழ, அனைத்தும் சரிந்து நிலை குலைய, அவற்றின் கால்கள் வலையில் பின்னிக் கொண்டன, அவ்வளவு தான் அனைத்து புறாக்களும் வலையில் மாட்டிக் கொண்டன.

அவ்வளவு தான், வலையிலிருந்து மீண்டு வருவதற்காக, அனைத்தும் என்னென்னவோ முயற்சி செய்தன. ஆனால் ஒன்றும் முடியவில்லை. வலையானது தரையோடு சேர்த்து அடிக்கப்படிருந்தது. உடனே அனைத்துப் புறாக்களும் வயதான புறாவை பார்த்து மன்னிப்பு கேட்டு, தங்களை காப்பாற்ற உதவி செய்ய வேண்டும் என்றன.

வயதான புறா, "என் ஒருவனால் உங்கள் அனைவரையும் விடுவிக்க முடியாது, அதற்கான சக்தியும் என்னிடம் இல்லை, ஆனால் என்னுடைய அனுபவத்தால் கிடைத்ததை வைத்து ஒரு வழி சொல்கிறேன், அதன்படி நடந்தால் தப்பிக்கலாம்" என்றது.

அதற்கு மற்ற புறாக்கள், "கண்டிப்பாக சொல்லுங்கள், இதுவரை உங்கள் அனுபவங்களை உதாசீனப்படுத்தியதற்கு மன்னியுங்கள்" என்றன.

வயதான புறா, "இன்னும் கொஞ்ச நேரத்தில் வேடன் வருவான், அவன் வரும் போது நீங்கள் யாரும் உயிரோடு இருப்பது போல் காட்டிக் கொள்ளக்கூடாது, மரணித்தது போல், விழுந்து கிடக்க வேண்டும். அவனும் செத்துப் போன புறாக்கள் தானே என்று உங்களை தரையில் போடுவான், கடைசி புறாவை போடும் வரை அமைதி காக்க வேண்டும். கடைசி புறாவைப் போட்டதும், நான் வேகமாக வந்து வேடனை கொத்துவேன், அவன் நிலை குலைந்தவுடன் நீங்கள் அனைவரும் உடனே பறந்து தப்பிவிடுங்கள்" என்றது.

அனைத்து புறாக்களும் வயதான புறாவை வணங்கி, அது சொன்னது போல் செத்துப் போனது போல் நடித்தன. அங்கே வந்த வேடனும் அனைத்தும் செத்து கிடப்பதைக் கண்டு, தண்ணீர் குடிக்காததால் ஒருவேளை அனைத்தும் இறந்து போயிருக்கும் என்று நினைத்து, ஒவ்வொரு புறாவையும் வலையிலிருந்து விடுவித்து கீழே போட்டான். கடைசி புறாவையும் போட்டு நிமிர்ந்து நிற்கவும், வயதான புறா வேகமாக பறந்து வந்து வேடனின் தலையில் கொத்தியது, திடிரென்று நடந்த இந்த சம்பவத்தால் வேடன் பயந்து கண்களை மூடிக் கொண்டு, தலையின் மேல் கைகளை வீசினான்.

அவ்வளவு தான் அந்த சந்தர்ப்பத்தில் அனைத்து புறாக்களும் தப்பினோம் பிழைத்தோம் என்பது போல் தப்பிப் பறந்தன. ■

புது உயிர்

# இணைப் பிரியா உயிர் அன்றில் (GLOSSY IBIS)

அன்றில் பறவை ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவின் அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் உள்ள கரீபியனிலும் ஆங்காங்கே காணப்படுகின்றது.

அன்றில் நெய்தல் நிலத்தில் வாழும் பறவையினமாகும். கடலும் கடல் சார்ந்த இடங்களிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. சதுப்பு நிலங்களிலும் கூட்டமாக இரைதேடக் கூடியவை.

இவை, மீன், தவளை மற்றும் பிற நீர்வாழ் சிறு உயிரினங்களையும் சில சமயங்களில் பூச்சிகளையும் இரையாக உட்கொள்கின்றன. சுமார் 3 கிலோ கிராம் எடை வரை வளரும். இதன் தலையின் மேல்பகுதி சிவப்பு நிறம் கொண்டது. பருவம் அடையாத இளம் பறவைகள் பழுப்பு நிறத்திலும், பருவமடைந்த பறவைகள் செந்நிற உடலுடன், ஒளிரும் கரும்பச்சை இறக்கைகளையும் கொண்டிருக்கும்.

இப் பறவையின் அலகு நெற்கதிர்களை அறுக்கப் பயன்படும் பன்னரிவாளைப் போல வளைந்து இருப்பதால், அரிவாள் மூக்கன் என்ற பெயரும் இதற்கு உண்டு. இதன் அலகு வளைந்திருப்பது பற்றி "கொடுவாய் அன்றில், மடிவாய் அன்றில்" என்று தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. நீண்ட கழுத்தும், நீண்ட கால்களும் உடையது.

அன்றில், தனது துணையை இழந்துவிட்டால் உடனே அந்தப் பறவையும் கூடவே இறந்துவிடும் குணத்தைப் பெற்றது. மேலும் தன் துணையுடன் எப்பொழுதும் சேர்ந்தே இருக்கும். ஏன், தூங்கும்போது கூட ஒன்றின் மீது மற்றொன்று பார்வையை வைத்தபடியே உறங்கும்.



இவை, பனை மரங்களில் தங்களுடைய வாழ்க்கையைத் தொடங்குவதால் இவற்றுக்கு, 'பனங்கிளி' என்ற மற்றொரு பெயரும் உண்டு.

இந்தப் பறவை இப்பொழுது அழிவின் விளிம்பில் இருப்பதாகக் கருதப்படுகிறது. அந்த வகையில், இவற்றைப் பாதுகாப்பதற்காக பல நடவடிக்கைகள், இயற்கை ஆர்வலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒருவன் மின்மினி

அன்பு தம்பி, தங்கையரே, இது உங்களுக்கான பக்கம். இதில் உங்கள் சித்திரங்கள், ஆக்கங்கள், பிறந்தநாள் வாழ்த்துகள், உங்கள் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் இப்பகுதி பற்றிய உங்கள் கருத்துகளை நீங்கள் எங்களுடன் வட்ஸப் அல்லது தபால் மூலம் பகிர்ந்துகொள்ளலாம். அவை, ஒருவன் மின்மினி பக்கத்தில் வெளியாகும்.

ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09 0740162534

## வரைந்து பழகுங்கள்



# புதியது கேட்பின்

# இறப்பே இல்லாத ஹைட்ரா...!

கடல்வாழ் உயிரினம் பற்றி ஆய்வு செய்து வந்த சிலிநாட்டைச் சேர்ந்த மேக்னஸ் என்ற பெண் ஆய்வாளர், தான் கடற்கரையில் பார்த்த ஒரு உயிரினம் குறித்து குறிப்பு ஒன்றை எழுதி இருந்தார்.



நீண்ட ஆண்டுகளாக யாருமே அந்தக் குறிப்பின் மீது கவனம் செலுத்தவில்லை. 1990ஆம் ஆண்டில் அறிவியல் மாணவர் டேனியல் மார்டினஸ் அக்குறிப்பைப் படித்துக் கொண்டிருந்தார். அதில் ஹைட்ரா (Hydra) எனும் நன்னீர் வாழ் உயிரினத்துக்கு இறப்பே இல்லை என்று எழுதப்பட்டிருந்தது.

அவர், இது ஒரு கட்டுக்கதை என்று புறக்கணிக்காமல் அந்த உயிரினத்தைத் தேடிச் சென்றார்.

ஜெல்லி மீன் வகையில் ஒன்றான மெல்லிய குழல் போன்ற அமைப்பை உடலாகப் பெற்ற அந்த உயிரினத்தை மிகவும் மோசமான காலநிலைகொண்ட அர்ஜென்டினாவின் தென் கோடிக் கடலில் கண்டுபிடித்தார். அதை ஆய்வகத்திற்குக் கொண்டு வந்து வளர்க்க ஆரம்பித்தார். 1998 இலிருந்து இன்றுவரை அது இறக்கவே இல்லை என்பதுடன், நிறையவே இனப்பெருக்கமும் செய்தது. அவற்றில் எதுவும் இறக்கவில்லை. ஹைட்ராவைத் துண்டு துண்டாக வெட்டினாலும் ஒவ்வொரு துண்டும் உயிருடன் செயல்படக் கூடிய தன்மை கொண்டதாக மாறக் கூடியது.

நன்னீரில் அதன் செல்கள் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு வருவதால், இயற்கையாக அது தனக்கேற்ற சுற்றுச்சூழலில் இருக்கும்வரை அதற்கு மரணமே இல்லை,

மேலும், ஹைட்ரா முதிர்ச்சி அடைவதே இல்லை. அதன் செல்கள் எத்தனை முறை வேண்டுமானாலும் புதுப்பித்துக் கொள்ளும் தன்மை கொண்டவை. FoxO genes என்ற ஜீன்கள் தான், இவை இளமையாகவே இருக்கக் காரணம். இந்த ஜீன்கள் புழுக்கள் முதல் மனிதர்கள் வரை அனைத்து உயிர்களிலும் இருக்கின்றன.

ஏற்கனவே பல ஆண்டுகாலம் பனிக்கட்டியில் உறைநிலையில் இருந்தாலும் பனிக்கட்டி கரைந்ததும் உயிர்பெறும் தவளைகளின் புரதங்களில் இருந்து, மனிதர்களை உறை நிலைக்குக் கொண்டு சென்று விண்வெளியில் நீண்ட தூரப் பயணத்திற்குப் பயன்படுத்தும் ஆய்வுகள் நடந்துகொண்டு தான் இருக்கின்றன.

இந்த நிலையில் மரணமே இல்லாமல் வாழும் ஹைட்ரா என்ற ஜெல்லிவகை மீனின் புதிய செல்களைத் தொடர்ந்து உருவாக்கும் புரதத்தையும் கண்டுபிடித்துவிட்டால் எதிர்காலத்தில் இப்பெருவெளி எங்கும் மனிதர்கள் மரணமடையாமல் வாழ்ந்துகொண்டே இருப்பார்கள் என்கின்றனர் அறிவியல் ஆய்வாளர்கள். ■



**1803ஆம்** ஆண்டு முதல் 1882 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த ரால்ப் வால்டோ எமர்சன் அமெரிக்காவைச் சேர்ந்த கட்டுரையாளர், கவிஞர், சொற்பொழிவாளர் மற்றும் எழுத்தாளர் ஆவார்.

## "நாம் எப்போதுமே வாழ்வதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம் ஆனால் வாழ்வதில்லை"

**ரால்ப் வால்டோ எமர்சன் - Ralph Waldo Emerson**

தனது சிந்தனைகளை கட்டுரைகள் மற்றும் சொற்பொழிவுகள் வாயிலாக வெளிக்கொணர்ந்தவர். எமர்சனின் எழுத்துப் பாணியானது புரிந்துகொள்ள கடினமானதாக சம காலத்தவர்களால் கருதப்பட்டது.

அமெரிக்காவின் மிகச்சிறந்த சிந்தனையாளர்களில் ஒருவராக விளங்கிய எமர்சனின் படைப்புகள், பிற்காலத்திய எழுத்தாளர்களுக்கும், கவிஞர்களுக்கும் சிறந்த முன்னோடியாக விளங்கின. எமர்சனின் படைப்புகள், பத்தொன்பதாம் நூற்றாண்டு அமெரிக்க இலக்கிய, மத மற்றும் சிந்தனை ஆகியவற்றில் முக்கிய ஆவணங்களாகக் கருதப்படுகிறது.



ஒருவன் மருத்துவம்

# குழந்தைகளுக்கு ஏற்படும் பசும்பால் புரத ஒவ்வாமை



பசும்பால் கொடுக்கப்படும் ஒரு வயதுக்கு கீழுள்ள குழந்தைகளில் 7 சதவீதத்தினருக்கு ஒவ்வாமை ஏற்படுத்துகிறது. இதை, பசும்பால் புரத ஒவ்வாமை (Cow Milk Protein Allergy) என்பார்கள். பசும்பால் புரத ஒவ்வாமை ஏற்படும் குழந்தைகளில், வாந்தி, வயிற்றுப்போக்கு, குடல்வலியால் தொடர்ந்து அழுதல் (colic), சரும அரிப்பு, உதடு, முகம் மற்றும் கண்களைச் சுற்றி வீக்கம், சளி மற்றும் மூச்சு விடுவதில் சிரமம் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம்.

பசும்பாலில் காணப்படும் பீட்டா - லெக்டோகுளோபுலின் (Beta-Lactoglobulin) என்னும் புரதம்தான், 76% பசும்பால் ஒவ்வாமை ஏற்படக் காரணமாகும். இதன் புரதம், தாய்ப்பாலில் காணப்படுவதில்லை. பசும்பால் புரத ஒவ்வாமை காணப்படும் குழந்தைகளில் ஒரு வயதுக்குப் பிறகு 50 வீதம் பேருக்கும், 5 வயதுக்குள் 80 – 90 வீதம் பேருக்கும் அந்த ஒவ்வாமை முற்றிலும் குணமாகிவிடுகிறது. எனவேதான், குழந்தைகளுக்கு ஒரு வயதான பிறகு, பசும்பால் கொடுக்கத் தொடங்குமாறு அறிவுறுத்துகிறார்கள்.

தாய்ப்பாலில் உள்ள முக்கிய புரதம் ஆல்பா - லெக்டால்புமின் (Alpha- Lactabumin) ஆகும். ஆல்பா- லெக்டால்புமின், தாய்ப்பாலில் லெக்டோஸ் (Lactose) உருவாக முக்கியப் பங்காற்றுகிறது. கல்சியம் மற்றும் துத்தநாகத்துடன் (Zinc) ஆல்பா- லெக்டால்புமின் இணைந்து, முக்கிய மினரல்கள் உறிஞ்சப்படுவதற்கு முக்கியப் பங்காற்றுகிறது. ஆல்பா-லெக்டால்புமின், குழந்தையின் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கிறது. தாய்ப்பாலின் புரதத்தில் 20- 25% என அதிகம் நிறைந்திருக்கும் ஆல்பா-லெக்டால்புமின், பசும்பாலின் புரதத்தில் 2- 5% என்ற அளவிலேயே காணப்படுகிறது.



இவ்வாறு, தாய்ப்பாலுக்கும் பசும்பாலுக்கும் பல்வேறு வேறுபாடுகள் இருப்பதாலும், பசும்பாலினால் பச்சிளங்-குழந்தைகளுக்கு ஒவ்வாமை ஏற்படுவதாலும், தாய்ப்பால் சுரக்காத தாய்மார்கள் பயன்பெறும் வகையில், தாய்ப்பாலுக்கு சிறந்த மாற்று கண்டுபிடிக்கும் முயற்சி, கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகிறது.

1838ஆம் ஆண்டில், ஜெர்மன் விஞ்ஞானி ஜோஹன் ஃப்ரான்ஸ் சைமன் (Johann Franz Simon) முதன்முறையாக தாய்ப்பால் மற்றும் பசும்பாலின் வேதியியல் பகுப்பாய்வை ஆய்வு செய்து வெளியிட்டார். இவர்தான், பசும்பால் தாய்ப்பாலைவிட அதிகளவு புரதம் மிகுந்தது எனவும், பசும்பாலிலுள்ள புரதமே, பசும்பால் செரிமானத்தில் பிரச்சினை ஏற்படுத்துகிறதென்றும் கண்டறிந்தார்.

இவரின் ஆய்வுகளே, பிறகு பால் மா உருவாக்கத்திற்கு அடிப்படையாக விளங்கியது.

1865ஆம் ஆண்டில் ஜெர்மன் வேதியியலாளர் ஜஸ்டஸ் வோன் லீபிக் (Justus Von Liebig), பசும்பால், கோதுமை மற்றும் பொட்டாசியம் பைகார்பனேட்டை கொண்டு, முதன்முதலில் வணிக நோக்கத்துடன், பால் மா கொண்டு வந்தார்.

பின்பு, பல்வேறு ஆய்வுகள் மூலம், பால் மா நீண்ட நாட்கள் கெடாமலிருப்பது நிரூபிக்கப்பட்டது. தாய்ப்பாலைப் போன்ற சத்துகள் நிறைந்திருப்பதற்கு பால்மாவில் சத்துகள் செறிவூட்டப்பட்டு, பல்வேறு மாறுதலுக்குப் பிறகு தற்போதைய நிலையை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குளிர்கால ஹெல்த் டிப்ஸ்






- குளிர்காலத்தில் உடலின் உஷ்ணம் குறைவதால், செரிமானம் தாமதமாக நடக்கும். குளிர்காலத்தில் எதையாவது சுடச்சுட சாப்பிட்டுக்கொண்டே இருப்போம். இந்த இரண்டும் சேர்ந்துகொண்டு, செரிமானக் கோளாறு ஏற்படும்.
- குளிர்காலத்தில், நம்முடைய காதுகள் குளிர்க்காற்றை உள்ளிழுத்து கபாலத்தில் சேர்த்து விடும். இதனால், தலையில் நீர்க்கோத்துக் கொள்ளும். விளைவு, தலைபாரம். வாகனத்தில் வேகமாக செல்லும்போதும், வாகனங்களில் ஜன்னலோரம் உட்காரும்போதும் இந்தப் பிரச்சினை அதிகமாகும். காதுகளில் பஞ்சு வைத்துக்கொள்வதன் மூலம் இந்தப் பிரச்சினை வராமலே தடுக்க முடியும்.
- ஈரக்காற்று, காது மற்றும் மூக்கு வழியாக சைனஸ் காற்றறைகளுக்குள் செல்கையில், மூக்கடைப்பும் தும்மலும் வரும். காதுகளையும் மூக்கையும் தொடர்ந்து மறைக்காமல் இருந்தால், நாள்பட நாள்பட இந்த ஈரக்காற்று நுரையீரலின் மேல் பகுதி வரைக்கும் சென்று விடலாம். அதனால் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.
- குளிர்காலம் நம் உடலுக்குத் தருகிற குளிர்ச்சியை குறைப்பதற்கான உணவுகளை சாப்பிட வேண்டும். உதாரணத்துக்கு தூதுவளை ரசம், பச்சை சுண்டைக்காய், சுண்டைக்காய் கறி, பிஞ்சுக் கத்தரிக்காய், பாகற்காய் என உடலில் சளி சேராமல் தடுக்கக்கூடிய காய்கறிகள், கீரைகளை சாப்பிடவும். இதையும் மீறி சளி பிடித்தால், மிளகு, சீரகம், பூண்டு, இஞ்சி போன்ற காரமானவற்றை உணவில் சேர்க்கவும்.
- உடலுக்கு வெப்பம் தரும் அன்னாசி மற்றும் பப்பாளியை அதிகம் சாப்பிட வேண்டும். கோதுமை உடலுக்கு உஷ்ணம் தரும் தானியம் என்பதால், குளிர்காலத்தில் கோதுமை உணவுகளை அதிகம் சாப்பிடலாம்.
- மழை, பனி என குளிர்காலம் முழுக்க, முடிந்தவரை உணவை சுடச்சுட சாப்பிட வேண்டும். வெந்நீர் மட்டுமே குடிப்பது நல்லது.
- சுவைகளில் இனிப்பு, உப்பு, புளிப்பு தவிர்க்க வேண்டும். காரம், கசப்பு, துவர்ப்பு அதிகமாக்க வேண்டும்.
- பால், தயிர், வெண்ணெய் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.
- கெரட், பீட்ரூட், புளித்த மாவு உள்ளிட்ட உடலை மந்தமாக்கும் உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.
- பொதுவாக, மூட்டு ஜவ்வுகளில் வாயு சேர்ந்திருக்கும். குளிர்காலம் நம் உடலில் வாய்வுப் பிரச்சினையை அதிகப்படுத்தி விடும் என்பதால், மூட்டுகளில் வலி வர ஆரம்பித்து விடும். மூட்டுக்களில் வீக்கம் இருப்பவர்களுக்கு, இந்தப் பிரச்சினை இன்னும் அதிகமாகும். இந்தப் பிரச்சினை இருப்பவர்களுக்கு காலில் அடிக்கடி ஈரம் படக்கூடாது. வெறுங்காலுடன் தரையில் நடக்கக்கூடாது. தரையில் படுக்கக்கூடாது.

வாரம் ஒரு மூலிகை

# மஞ்சள் பூசணி விதை

பூசணி விதையில் அதிகளவான 'அன்ட்டி ஒக்சிடென்ட்ஸ்' உள்ளது. குறிப்பாக, மெக்னீசியம், கொப்பர், செலீனியம், குரோமியம் போன்ற, பல சத்துகள் மஞ்சள் பூசணி விதைகளில் உள்ளன.

பூசணி விதையில் உள்ள, மெக்னீசியம்தான் இதய செயற்பாடுகளுக்கும், இரத்தக்குழாயின் தன்மையை பராமரிப்பதற்கும் தேவையாகும். அதுபோலவே, மெக்னீசியம் இரத்த அழுத்தத்தையும் கட்டுப்பாடாக வைக்கின்றது. அதுபோல், இது இரத்தத்தில் சீனியின் அளவை குறைக்கவும் செய்கின்றது.

நமது உடம்பில், செரோட்டினின் (Serotonin) எனும், ஹோர்மோன் பகலில் அதிகமாக சுரந்தால் தான், இரவில் மெலோட்டினின் (Melatonin) ஹோர்மோன் சுரக்கும். இதற்கு, நம் உடம்பில் 'டிரிப்டோஃபோன்' (Tryptophan) எனும், ஓர் அமினோ எசிட் தேவை. இது சரியான நேரத்துதில் தூக்-கத்தை வரவழைக்க முக்கிய பங்காற்றுகின்றது. இது மஞ்சள் பூசணி விதையில் நிறைந்துள்ளது.

பூசணி விதையில் உள்ள, 'அன்ட்டி ஒக்சிடென்ட்ஸ்' நுரையீரல் புற்றுநோய், புரோஸ்ட்டேட் புற்றுநோய், மார்பக புற்றுநோய் வராமல் தடுக்கின்றது என ஆய்வில் தெரியவந்துள்ளது. பொதுவாக, புற்றுநோயாளிகள் அதிகமாக நட்ஸ் வகைகளை உண்பது, அவர்களின் உடம்பில் உள்ள, 'என்ட்டி ஒக்சிடென்ட்' அளவை அதிகரிக்கும். இதனால், புற்றுநோய், உடம்பின் மற்ற இடங்களுக்கு பரவாமல் தடுக்கப்படுகின்றது என, சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சோர்வாக உணர்கின்ற போது, தினமும் சிறிது பூசணி விதைகளை சாப்பிட்டால், சோர்வு நீங்கி, புத்துணர்ச்சி ஏற்படும். மேலும், எலும்புகளும் வலுவாவதோடு, நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும்.

பூசணி விதையில் உள்ள மெக்னீசியம், உடம்பில் சுருக்கம் ஏற்படுவதைத் தடுத்து, முதுமை ஏற்படுவதைத் தடுக்கும்.

பூசணி விதை நல்லதொரு மலமிளக்கியாகும். இவற்றை தினமும் சாப்பிட்டால், மலச்சிக்கல் இல்லாமல் நிம்மதியாக வாழவைக்கும். இருப்பினும், அவற்றை, அளவுக்கு மீறி சாப்பிட்டால், வயிற்றுப்போக்கு ஏற்படும் என்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

குழந்தைகளுக்கு குடலில் புழுக்கள் இருக்கும். அதனால், குழந்தைகள் சரியாக சாப்பிட மாட்டார்கள். இரத்த சோகையும் ஏற்படும். அதனால் குழந்தைகளுக்கு பூசணி விதை கொடுத்து வர, குடலில் ஒட்டியுள்ள புழுக்கள் எல்லாம் மயக்கமாகி மலம் வழியாக வெளியே வந்திடுவிடும்.




# எதுக்களிப்பு பிரச்சினையா?

உணவு



உணவுக் குழாய்க்கும், இரைப்பைக்கும் நடுவில் முடிச்சு போல் ஓர் அமைப்பு காணப்படும். அதே போல், இரைப்பைக்கும் சிறுகுடலுக்கும் நடுவில் முடிச்சு போன்ற ஓர் அமைப்பு காணப்படும். இந்த இரண்டு முடிச்சுகளுக்கும் நடுவில், இரைப்பை, நாம் சாப்பிடும் எல்லாவற்றையும் அரைத்து கூழ் போல மாற்றும். அப்படி அரைக்கின்ற போது, உணவானது அதிகமாக இருந்தால், அரைப்பதற்கு இடமிருக்காது.

உதாரணமாக, பிரஷர் குக்கரில், அது கொள்ளும் அளவைவிட அதிக உணவுப்பொருளை போட்டு சமைத்தால் அது வெளியே வருவதுபோல், இரைப்பையிலும் நடக்கும். அப்போது, அந்த இரண்டு முடிச்சுகளும் வலுவாக இருக்காதா என்ற கேள்வி எழலாம்.

ஆனால், ஆரம்பத்தில் அது வலுவாக இருந்தாலும், மது, புகை, உடற் பருமன், வயிற்றைச்சுற்றி நிறைய கொழுப்பு என இருக்கும் பட்சத்தில், அந்த முடிச்சுகள் பலவீனமாகிடும்.

மேலும், உணவின் பின் எந்த வேலையும் செய்யாமல் இருந்தாலும், எதுக்களிக்கும். இதற்கு, சாப்பிட்டவுடன், சிறிது தூரம் நடந்துவிட்டுவரலாம்.

தூக்கமின்மை, மன அழுத்தம் போன்ற காரணங்களாலும் எதுக்களிக்கும்.

வலி நிவாரணிகளும், வேறு சில மருந்துகளும் கூட, அந்த இரண்டு முடிச்சுகளை பலவீனமாக்கி எதுக்களிப்பு ஏற்பட காரணமாகின்றது.

எண்ணெயில் பொறித்த உணவுகள் மற்றும் சில வகை துரித உணவுகளாலும் கூட எதுக்களிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆகவே, இதுபோன்ற காரணங்களைத் தவிர்க்கும் பட்சத்தில் எதுக்களிப்புப் பிரச்சினைக்கு தீர்வை காணலாம்.



# உலகை அச்சுறுத்தும் 'மார்பர்க் வைரஸ்'

'மார்பர்க் வைரஸ்' (marburg) அல்லது 'இரத்தப்போக்கு கண் வைரஸ்' என்று அழைக்கப்படுகிற புதிய வைரஸ் ஒன்று, உலகளவில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக இங்கிலாந்து மற்றும் ஆபிரிக்காவிற்கு செல்லும் பயணிகளுக்கு கொடிய 'மார்பர்க் நோய்' பற்றி எச்சரிக்கை வழங்கப்பட்டு வருகிறது.

உலகின் 17 நாடுகளில் மார்பர்க், mpox, oropouche போன்ற வைரஸ்கள் பரவி வருவதால் பயணிகள் கூடுதல் கவனத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்த அறிகுறிகளில் ஒன்றான 'இரத்தப்போக்கு கண்கள்' என அழைக்கப்படும் மார்பர்க் வைரஸ"க்கு, ஆபிரிக்காவின் ருவாண்டாவில் இதுவரை 15 பேர் பலியாகியுள்ளனர். அதுமட்டுமல்லாமல், நூற்றுக்கணக்கான பேருக்கு இந்தத் தொற்று நோய் பரவியுள்ளதாக கூறப்படுகிறது. தொற்று ஏற்பட்டால், உயிரிழப்பு வாய்ப்பு 50 சதவிகிதம் என்பதால், இந்த வைரஸ் கொடிய வைரஸ்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

'எபோலா' குடும்பத்தைச் சேர்ந்த இந்த வைரஸ், இரத்தக் கசிவு காய்ச்சலை ஏற்படுத்தும். இதனால், இரத்த நாளங்களில் சேதம் ஏற்பட்டு, இரத்தப்போக்கு ஏற்பட வழிவகுக்கிறது. பழ வௌவால்களிடமிருந்து (உலகின் மிகப்பெரிய வௌவால் இனங்களில் ஒன்று) உருவானதாக கருதப்படும் இந்த வைரஸ், இரத்தம், சிறுநீர் அல்லது உமிழ்நீர் போன்ற உடல் திரவங்கள் வழியாக மனிதர்களிடையே பரவுகிறது.

இதன் அறிகுறிகள் எபோலா வைரஸின் அறிகுறிகளுடன் ஒத்திருக்கிறது. இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் அதிக காய்ச்சல், கடுமையான தலைவலி, தசை வலி, வாந்தி மற்றும் தொண்டைப்புண், சொறிசிரங்கு மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றனர்.

எதிர்பாராத எடை இழப்பு, மூக்கு, கண்கள், வாய் அல்லது இனப்பெருக்க உறுப்புகளில் இரத்தப்போக்கு ஏற்படலாம். கடுமையான இரத்தப்போக்கு, உறுப்பு செயலிழப்பு ஏற்படும் பட்சத்தில் அவை மரணத்திற்கு வழிவகுக்கும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு என குறிப்பிட்ட தடுப்பு சிகிச்சை எதுவும் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. அறிகுறிகளுக்கான மருத்துவ சிகிச்சையே நிலைமையை நிர்வகிக்க உதவும். இதற்கான தடுப்பூசி ஆய்வுகள் ஆரம்பக்கட்டத்தில் இருப்பதால், தற்போது நோய் எதிர்ப்பு சிகிச்சைகள் மற்றும் அறிகுறிகளுக்கான சிகிச்சைகள் போன்றவையே உதவிக்கொண்டுள்ளன. இந்த நிலையில் உலக சுகாதார அமைப்பு (WHO), சுகாதார நடவடிக்கைகள் மற்றும் தனிமைப்படுத்துதலை அறிவுறுத்தியிருக்கிறது.




# தாஜுதீன் கொலையில் ஷிரந்தி ராஜபக்ஷ மீது சந்தேகம் வலுத்தது ஏன்?

பதிவுசெய்யப்பட்ட குறிப்பிட்ட ஓர் அரச வாகனம் தொடர்பாக கடந்த வாரம் குறிப்பிட்டோம் அல்லவா..? ஆம். அந்த வாகனம் ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டது என விசாரணைகளின் மூலம் தெரிய வந்தமை பெரும் பேசுபொருளாக அமைந்திருந்தது. குறிப்பாக பொதுச் சேவை கருதியே

**தாஜுதீன் கொலை செய்யப்பட்டு பத்து நிமிடங்களுக்குள் ஜனாதி பதி செயலகத்திலிருந்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அடுத்தடுத்து தொலைபேசி அழைப்புக்கள் வந்ததன் பின் னணி என்ன...?**

ஷிரந்தி பௌன்டேஷன் நிதியத்திற்கு இந்த வாகனம் வழங்கப்பட்டது எனவும் தெரியவந்தது.

குறித்த டிபென்டர் ரக வாகனத்தை யோசித்த ராஜபக்ஷ பயன்படுத்தியுள்ளதுடன், அதற்கான எரிபொருள் செலவு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வழங்கப்பட்டதுடன், அதற்கான கணக்கும் ஜனாதிபதி செயலகத்தின் வாயிலாக காட்டப்பட்டுள்ளது.

இந்த டிபென்டர் ரக வாகனம் தான் வசீம் கொலை செய்யப்பட்ட அன்று அவரை பின்தொடர்ந்தது எனவும் குற்றப் புலனாய்வு விசாரணைகளில் பின்னைய நாட்களில் தெரியவந்தது. இந்த விடயத்தை தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கூட கடந்த சில வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்றில் உரையாற்றியிருந்தார்.

கொலை சம்பவத்தை தொடர்ந்து இந்த டிபென்டர் காணாமல் போயிருந்தது. பின்னர் அது ஹபரன பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், இதுதொடர்பில் செஞ்சிலுவை சங்கத்திடம் கேள்வியெழுப்பப்பட்டபோது, அந்த டிபென்டர் வாகனமானது, ஷிரந்தி ராஜபக்ஷவின் அறக்கட்டளைக்கு வழங்கியதன் பின்னர் அது தொடர்பில் தமக்கு எந்தவொரு விபரமும்

**‘சிஎஸ்என்’ தொலைக்காட்சியில் முக்கிய பதவி வகித்த பணியாளரின் உதவியுடன் தான் கொள்ளுபிட்டி கெரேஜில் மேற்படி டிபென்டருக்கு நிறமாற்றம் செய்யப்பட்டதாகவும் குற்றப்புலனாய்வு பிரிவினர் பல தகவல்களை கொட்டித்தீர்த்தனர்**

தெரியாது என அவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2011 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி குறித்த டிபென்டர் வாகனம் ஷிரந்தி ராஜபக்ஷவின் அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டிருந்தது. கொலை சம்பவம் நடந்த போது இந்த டிபென்டர் வாகனமானது தாஜுதீனின் வாகனத்தை பின்தொடர்ந்தது என்ற காரணத்துக்காகவே இந்த கொலையுடன் ஷிரந்தி மற்றும் யோசித்தவுக்கு தொடர்பு இருப்பதாக அந்நாட்களில் பேசப்பட்டது. அதுமாத்திரமல்ல, குற்றப்புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மற்றுமொரு பேரதிர்ச்சிகரமான தகவலும் வெளியாகியது. அதாவது, குறித்த டிபென்டர் கிட்டதட்ட மூன்று சந்தர்ப்பங்களில் நிறமாற்றம் (பெயின்ட



மாற்றம்) செய்யப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அதன்படி, வெள்ளை நிறத்தில் இருந்த டிபென்டர் முதலில் நீல நிறமாகவும், தொடர்ந்து கருப்பு நிறமாகவும் மாற்றப்பட்டுள்ளது. கொள்ளுப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள பிரபல கெரேஜ் ஒன்றிலேயே நிறம் மாற்றப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் குற்றப்புலனாய்வு பிரிவினர் கண்டறிந்தனர்.

கால்டன் ஸ்போர்ட்ஸ் நெட்வேர்க் எனப்படும் பிரபல தொலைக்காட்சி அலைவரிசையொன்று “சிஎஸ்என்” எனும் பெயரில் அந்த காலகட்டத்தில் ஒளிபரப்பாகி வந்தது. அதன் உரிமையாளராகவும் தலைமை அதிகாரியாகவும் இருந்தவர் தான் மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோசித்த ராஜபக்ஷ.



மேற்படி “சிஎஸ்என்” தொலைக்காட்சியில் முக்கிய பதவி வகித்த பணியாளரின் உதவியுடன் தான் கொள்ளுபிட்டி கெரேஜில் மேற்படி டிபென்டருக்கு நிறமாற்றம் செய்யப்பட்டதாகவும் குற்றப்புலனாய்வு பிரிவினர் பல தகவல்களை கொட்டித்தீர்த்தனர்.

பல சான்றுகள் குற்றப்புலனாய்வு பிரிவினரால் முன்வைக்கப்பட்ட போதிலும் ஏன் இந்த வழக்கிற்கு ஒரு முற்றுப்புள்ளியை வைக்க முடியவில்லை என இப்போது தோன்றுகின்றது அல்லவா? தொடர்ந்து என்ன நடந்தது என பார்க்கலாம்.

இதன் பின்னர் அதிரடியாக ஷிரந்தி ராஜபக்ஷவிடம் குற்றப்புலனாய்வு பிரிவினர் வாக்குமூலம் பதிவு செய்ய ஆரம்பித்தனர். அவரும் வாக்குமூலம் அளித்தார். ஆனால், அந்த வாக்குமூலம் பற்றிய எந்தவொரு தகவலும் இன்று வரை வெளியாகவில்லை.

போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு வாகனத்தையும் நிறமாற்றம் செய்யவேண்டுமேயானால் நிச்சயமாக அது தொடர்பில் அறிவிப்பொன்றை செய்திருக்க வேண்டும் . ஆனால், எந்தவொரு அறிப்பும் இன்றி குறித்த டிபென்டர் சுமார் மூன்று தடவைகள் நிறமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு காரணம் தெரியுமா? அந்த காலகட்டத்தில் ராஜபக்சர்களின் ஆட்சி இலங்கையில் தலைத்தோங்கி இருந்தது. அவர்களை எதிர்த்து கேள்வி கேட்க யாருமே இல்லை என்ற ஆணவம்தான் இதற்குக் காரணம்.

சரி. ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு வழங்கிய வாகனத்தை ஏன் யோசித்த ராஜபக்ஷ பயன்படுத்தினார்? என்ற

## டிஃபென்டர் வாகனம் மூன்று தடவைகள் நிறமாற்றம் செய்யப்பட்ட மர்மம் என்ன?

கேள்வி எழுகின்றது அல்லவா? சிலநேரங்களில் தாஜுதீனின் வாகனத்தை குறித்த டிபென்டர் பின் தொடரவில்லை என வைத்துக்கொள்வோம். அப்படி பின்தொடராமல் இருந்திருந்தால் ஏன் ஷிரந்தி ராஜபக்ஷ இது தொடர்பில் வாக்குமூலம் அளிக்க வேண்டும்? அந்த டிபென்டரை ஏன் யோசித்த பயன்படுத்த வேண்டும்? ஏன் மூன்று தடவைகள் நிறமாற்றம் செய்யப்படவேண்டும்? ஏன் ஹபரண பகுதியில் மறைத்து வைக்கப்பட்டது? போன்ற கேள்விகள் எழுகின்றன அல்லவா? இதற்கும் இன்று வரை பதில்கள் இல்லை.

இதுதவிர இந்த வழக்கு தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வு பிரிவினர் தீவிரமாக நடத்திக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மற்றுமொரு தொலைபேசி அழைப்பு தொடர்பான தகவல் வெளியாகியது. குறிப்பாக இந்த கொலை சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்திய



அப்போதைய நாராஹேன்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தமியன் பெர்ணான்டோவுக்கு படுகொலை சம்பவம்






நடந்த ஒரு சில நிமிடங்களையடுத்து தொலைபேசி அழைப்புகள் வந்திருந்தன. அதாவது, தாஜுதீன் கொலை செய்யப்பட்டு பத்து நிமிடங்களுக்குள் ஜனாதிபதி செயலகத்திலிருந்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இவ்வாறு அடுத்தடுத்து தொலைபேசி அழைப்புக்கள் வந்திருந்தன. ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து அந்த தொலைபேசி அழைப்புகள் வருவதற்கான காரணம் என்ன?

மேலும், அந்த சந்தர்ப்பத்தில் தான் பொலிஸ்மா அதிபராக இருந்த அநுர சேனநாயக்கவும் கைது செய்யப்பட்டிருந்தார். தொடர்ந்து அநுர சேனநாயக்கவுக்கு என்ன நடந்தது? தாஜுதீன் கொலை வழக்கில் சிக்கிய முக்கிய சாட்சியாக அமைந்தவர் யார்?

**காத்திருங்கள் எதிர்பாரா திருப்பங்கள் அடுத்த வாரம்...**

(தொடரும்)

# கொழும்பில் சில அடுக்குமாடி குடியிருப்புகள் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக எச்சரிக்கை

- ரிஷபன் -

இலங்கையில் பல பகுதிகளில் ஏராளமான பழைய குடியிருப்புக் கட்டடங்கள் புதுப்பிக்காமல் ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடிய நிலையில் இருப்பதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. அதன்படி, குறிப்பாக கொழும்பில் இவ்வாறான நிலையில் பல அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. அந்த வீடுகளில் இன்றும் மக்கள் வசித்து வருகின்றனர். இத்தகைய அடுக்கு மாடிகளில் ஆபத்தான சம்பவங்கள் எதுவும் நடந்தால் பாரிய உயிர்சேதங்கள் ஏற்படக்கூடிய அச்ச நிலை இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. எனவே, கொழும்பிலுள்ள இவ்வாறான ஆபத்தான கட்டடங்களை இனங்கண்டு, அவற்றை உடனடியாக அகற்ற வேண்டும் எனவும் மேற்படி ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் அதிகளவான வீட்டுத் தொகுதிகள் இவ்வாறு மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதால் இவை சிறிய நிலநடுக் கத்தை கூட தாங்க முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக திம்பிரிகஸ்யாய, கொலன்னாவை, இரத்மலானை மற்றும் மொரட்டுவை ஆகிய பிரதேசங்களில் உள்ள வீடுகள் பல இவ்வாறு ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, கொழும்பு மாநகர சபை, தொழிற் திணைக்களம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களம் மேலும் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வீட்டுத் தொகுதிகளே இவ்வாறு நீண்ட காலமாக பராமரிக்கப்படாத நிலையில் இந்நிலைக்கு ஆளாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்கிறது.

மேலும், இந்த அடுக்கு மாடிக் கட்டடங்கள் நிர் மாணிக்கப்பட்டு நீண்ட நாட்களாகின்றன. ஆனால், இதில் அநேகமான குடியிருப்பாளர் களுக்கு இதுவரை வீடுகளுக்கான உரிமம் வழங்கப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது. முன்னாள் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சராக பீட்டர் கெனமன் பதவி வகித்த காலத்தில் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளும் இவ்வாறு பராமரிப்பின்றி மிகவும் பழமையடைந்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தெமட்டகொடையிலுள்ள 51 மற்றும் 63 ஆம் இலக்க தோட்டங்களின் அடுக்குமாடி





**சில அடுக்கு மாடிகளில் சுவர்களுக்கிடையே மரங்கள் வளர்ந்து கட்டடங்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவை பாரிய ஆபத்துக்களை ஏற்படுத்தலாம் எனவும் கூறப்படுகின்றது...**

குடியிருப்புகள் 1960 களில் கட்டப்பட்டவையாகும். இந்த அடுக்குமாடி குடியிருப்புகளில் கிட்டத்தட்ட இருநூறு குடும்பங்கள் வசித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு மாநகர சபையினால் இந்த வீடுகள் வழங்கப்பட்ட போதிலும், எந்தவொரு நிர்வாக பிரிவினரும் இந்த கட்டடங்களை பார்வையிட வருவதில்லை எனவும் இங்குள்ள குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த அடுக்கு மாடிகளில் சுவர்கள் உடைந்து அவற்றுக்கிடையே மரங்கள் வளர்ந்து கட்டடங்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டியுள்ளதுடன், முறையான பராமரிப்பு இல்லாததால் தாம் இதற்கான வரியைக்கூட செலுத்துவதில்லை எனவும் இங்குள்ள குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், 1986 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவின் வழிகாட்டலில் குணசிங்கபுர டயஸ் பிரதேசத்தில் கட்டப்பட்ட மூன்று அடுக்கு மாடி வீட்டுத் தொகுதிகள் 1986 ஆம் ஆண்டின் பின்னர் ஒரே ஒரு தடவை மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளது என்பதும் ஆய்வின்மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இத்தகைய அடுக்கு மாடி குடியிருப்புகளில் வசித்து வருகின்ற மக்களும் தமக்கான பொறுப்புக்கள் எவை என்பதை அறிந்திருப்பதாகவும் தெரியவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே தாம் வசிக்கின்ற வீடுகள் எந்தளவில் ஆபத்தான நிலையில் உள்ளன என்பது குறித்து அங்கு வாசிக்கின்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும், அதில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள், உயிர்சேதங்கள் குறித்தும் அவர்கள் அக்கறையுடன் இருத்தல் வேண்டும். ஆபத்தான நிலையிலுள்ள கட்டடங்கள் சட்டப்பூர்வமானவையா? அவை சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டவையா? என்பது குறித்தும் மக்கள் அறிந்திருத்தல் வேண்டும். பேரிடர் ஏற்பட்ட பிறகு அதைப் பற்றி நோவதில் பயனில்லை. இத்தகைய ஆபத்தான சூழலில் வாழ்கின்ற குடியிருப்பாளர்களை காத்திட வேண்டிய பொறுப்பு ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு உள்ளமையும் மறுக்க முடியாததே. எனவே, நாடு முழுவதும் உள்ள சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றுவது போல், ஆபத்தான நிலையிலுள்ள குடியிருப்புகள் மீதும் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.








## கீர்த்தி சுரேஷ் – அன்ரனி திருமண அல்பம்












## நடிகர் அல்லு அர்ஜுன் அதிரடி கைது

புஷ்பா 2 படத்திற்கு சென்ற பெண் கூட்ட நெரிசலில் பலியான சம்பவத்தில் நடிகர் அல்லு அர்ஜுனை பொலிஸார் கைது செய்தனர்.

பிரபல தெலுங்கு நடிகர் அல்லு அர்ஜுன் நடித்த 'புஷ்பா 2' சமீபத்தில் திரையரங்குகளில் வெளியானது. ஹைதராபாத்தில் உள்ள சந்தியா தியேட்டரில் இந்த படத்தை பார்க்க பெண் ஒருவர் தனது மகனுடன் சென்றிருந்த நிலையில், அல்லு அர்ஜுன் அங்கு வந்ததால் கூட்ட நெரிசல் அதிகமானது. இதில் சிக்கி அந்த பெண் உயிரிழந்தார்.

இதுகுறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார், சம்பந்தப்பட்ட தியேட்டர் மீதும், அல்லு அர்ஜுன் மீதும் பல பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்திருந்தனர். இந்நிலையில் தற்போது நடிகர் அல்லு அர்ஜுனை ஹைதராபாத் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தபடுவார் என தகவல்கள் வெளியாகியுள்ளது.

## சூர்யாவால் கவலையில் கார்த்திக் சுப்பராஜ்



சூர்யா நடிப்பில் உருவான 'கங்குவா' திரைப்படத்தால், சூர்யாவின் மூன்று ஆண்டுகால உழைப்பு வீணாக்கப்பட்டுள்ளது என அவரின் இரசிகர்கள் கொந்தளிக்கின்றனர். சூர்யா கடைசியாக திரையரங்குகளில் ஒரு வணிக ரீதியான வெற்றிப்படம் கொடுத்து 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது எனப் புள்ளி விவரங்கள் சொல்கின்றன.

இந்நிலையில் கங்குவா படத்தின் தோல்வியால் அதிகம் கவலையில் இருப்பது கார்த்திக் சுப்பராஜ் தான் என்கின்றனர். ஏனென்றால் கங்குவா படத்தின் தோல்வியானது, அவர் இயக்கத்தில் சூர்யா நடித்துள்ள 'சூர்யா 45' படத்தின் வியாபாரத்தைப் பாதிக்கிறதாம். பெரிய தொகைக்கு வியாபாரம் செய்யலாம் என நினைத்திருந்த கார்த்திக் சுப்பராஜுக்கு அது மிகப்பெரிய கவலையை ஏற்படுத்தியுள்ளதாம்.

## ஊடகங்களுக்கு சாய் பல்லவி எச்சரிக்கை




ஜ ன் மீது தொடர்ச்சியாக கட்டுக்கதைகள் மற்றும் வதந்திகள் பரப்பினால் சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன் என்று ஊடகங்களுக்கு நடிகை சாய் பல்லவி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சாய்பல்லவி, "ராமாயணம்" என்ற பிரம்மாண்டமான படத்தில் சீதையாக நடித்து வருகிறார். இந்த படத்தில் அவர் நடிப்பதால், அசைவம் சாப்பிடக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பதாகவும், படப்பிடிப்பு முடியும் வரை உணவகங்களில் கூட சாப்பிடாமல், சமையல்காரர்களை அவர் செல்லும் இடம் அழைத்துச் செல்வதாகவும், முன்னணி ஊடகமொன்றில் செய்தி வெளியானது.

இந்த செய்தியை தனது சமூக வலைத்தளத்தில் பகிர்ந்த சாய் பல்லவி, "நோக்கத்துடன் அல்லது நோக்கமில்லாமல் கூறப்பட்ட இந்த ஆதாரமற்ற புரளிகளுக்கும் பொய்களுக்கும் தவறான கூற்றுகளுக்கும் நான் எப்போதும் அமைதியாகவே இருந்துள்ளேன். ஆனால், இது தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதால், எதிர்வினை ஆற்ற வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இனிமேல் என்னை பற்றி கட்டுக்கதைகள் அல்லது புரளி ஆகியவற்றை எந்த ஒரு ஊடகமும் பரப்பினால், அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன்" என்று தெரிவித்தார். ■

## Face of the week

### ஐஸ்வர்யா ராஜேஷ்





"அவரைப்போல மதிப்புமிக்க, நிறைய மக்களால் அன்பு செய்யப்படுகின்ற நடிகருக்கு எங்களிடமும் அதே அன்பும் மரியாதையும் இருந்தது. ஆனால் இந்த விவகாரத்தில் நடந்தவை நியாயமற்றதாக இருந்ததால் நான் பொது வெளியில் பேசினேன். வெளியில் பேசுவதற்கான தைரியம் எங்கிருந்து வந்தது எனக் கேட்டீர்களானால், அந்த தைரியம் உண்மையில் இருந்து வந்தது எனக் கூறுவேன். ஏதாவது ஒன்றை திரித்துப் பேசும்போதுதான் நான் பயப்பட வேண்டும். இப்போது நான் இதைச் செய்யவில்லை என்றால், எப்போதும் யாருக்கும் எதையும் வெளியில் சொல்லும் தைரியம் இல்லாமல் போய்விடும்"

– தனுஷ் குறித்து நயன்தாரா

## மனைவியைப் பிரியும் சீனு ராமசாமி

இயக்குநர் சீனு ராமசாமி தனது மனைவியை பிரிவதாக தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். இதனால் சீனு ராமசாமி – தர்ஷனா தம்பதியின் 17 வருட திருமண வாழ்க்கை முடிவுக்கு வருகிறது.

இதுகுறித்த அவரது பதிவில், "அன்பானவர்களுக்கு வணக்கம். நானும் எனது மனைவி தர்ஷனாவும் எங்கள் 17 வருட திருமண வாழ்வில் இருந்து விடைபெறுகிறோம். இருவரும் விருப்ப விவாகரத்து பெற்று அவர் அவருக்கு உண்டான திசையில் பயணிக்கவும் அந்த பாதையில் தர்ஷனாவின் செயல்பாடுகள் என்னையும், எனது செயல்பாடுகள் அவரையும் எவ்விதத்திலும் சேராது, பொறுப்பாகாது என்பதை நான் அறிவேன். அவரும் அறிவார்" என எழுதியுள்ளார்.



## ஜனவரியில் 'வீர தீர சூரன்'!




சீயான் விக்ரம் 'சித்தா' படத்தின் இயக்குனர் அருண் குமார் இயக்கத்தில் உருவாகும் 'வீர தீர சூரன்' படத்தில் நடித்து வருகிறார்.

இந்த படத்தில் மற்ற முக்கிய வேடங்களில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சரமூடு மற்றும் துஷாரா ஆகியோர் நடிக்கின்றனர். இந்த படத்தின் ஷூட்டிங் விறுவிறுப்பாக மதுரையில் நடந்து வந்த நிலையில் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இத்திரைப் படத்தின் இரண்டாம் பாகம் முதலில் வெளியாகும் எனவும் பின்னர் முதல் பாகம் வெளியாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் படத்தின் டீசர் வெளியாகி கவனம் பெற்ற நிலையில், படம் ஜனவரி மாதம் 24ஆம் திகதி வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## மீண்டும் இணையும் செல்வராகவன் – ஜிவி பிரகாஷ்

செல்வராகவன் இயக்கத்தில் உருவான 'ஆயிரத்தில் ஒருவன்' மற்றும் 'மயக்கம் என்ன' ஆகிய படங்களில் ஜிவி பிரகாஷ் இசையமைத்த நிலையில், செல்வராகவன் இயக்க இருக்கும் அடுத்த திரைப்படத்திற்கு ஜிவி பிரகாஷ் இசை அமைக்க இருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழ் திரையுலகின் முன்னணி இயக்குனர்களில் ஒருவரான செல்வராகவன், கடந்த சில ஆண்டுகளாக நடிப்பதில் கவனம் செலுத்தி வரும் நிலையில், ஒரு திரைப்படத்தை இயக்க இருப்பதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகின. இந்த நிலையில், செல்வராகவன் இயக்க இருக்கும் அடுத்த திரைப்படத்திற்கு ஜிவி பிரகாஷ் இசையமைக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

இந்தப் பத்திரிகை கொழும்பு – 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.